www.padippakam.com

MR. JUDE

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

ரூபா 12/00

දිනමුරසු වාරමලර් பெப்.07–13,1999

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 295

## குட்டித் தேர்தல் அடுத்தது என்ன?





## அம்பலமாகிய அதிரடிப் பாய்ச்சல்

## விமான எதிர்ப்பு

## ஆயுதங்களும் ஆயத்தமும்



## டயானாவின் இன்னொரு நண்பர்



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## பந்துவீச்சும் மத்தியஸ்தமும்

*அன்புள்ள உங்களுக்கு,*
*வணக்கம்.*

முத்தையா முரளிதரனின்
பந்துவீச்சு தொடர்பான
சர்ச்சையை தீர்ப்பதற்கு
சர்வதேச மத்தியஸ்தம்
கோரியுள்ளார்
அமைச்சர் கதிர்காமர்!

நியாயமான கோரிக்கைதான்!
அதற்காக அமைச்சரை
பாராட்டலாம்!

ஆனால், அதே
அமைச்சர் அவர்கள்
இனப்பிரச்சனைத் தீர்வுக்கு
சர்வதேச மத்தியஸ்தம்
கோருவதை மட்டும்
எதிர்த்து வருகிறார்!

கிரிக்கெட் விளையாட்டு;
யுத்தம் விளையாட்டல்ல!

விளையாட்டு தொடர்பான
விவகாரத்தைக்கூட
பிரச்சனையோடு தொடர்புள்ள
தரப்புக்கள் மட்டும்
தமக்குள் பேசித்
தீர்த்துக்கொள்ள முடியவில்லை!

முரளிதரனின்
பந்துவீச்சில்
குறை கண்டேயாக வேண்டும்!
என்று ஒற்றைக்காலில்
நிற்கிறது அவுஸ்திரேலியா!

'வேண்டாத பெண்டாட்டி
கை பட்டால் குற்றம்
கால் பட்டால் குற்றம்'
என்பதுபோல
அவர்கள் விரும்பாத
முரளிதரன்
எப்படி பந்து போட்டாலும்
தப்பாகத் தெரிகிறது!

தாம் பிடித்த
முயலுக்கு மூன்று கால்
என்று அடம்பிடிப்போருடன்
அமர்ந்து பேசி
சிறந்த முடிவுகாணமுடியாது!

ஆகவே, அவர்களோடு
நேராகப் பேசாது,
மத்தியஸ்தம் ஊடாக
அந்தச் சர்ச்சையைத்
தீர்க்க விரும்புகிறார்
மதிப்புக்குரிய அமைச்சர்!

இங்கு இனப்பிரச்சனை
தீர்வு விடயத்திலும்
சம்பந்தப்பட்ட தரப்புக்கள்
தமக்குள் பேசி
உடன்பாடு காணும் சூழல்
அறவே கிடையாது!

அரசும், புலிகளும்
பேசுவது
ஒருபுறமிருக்கட்டும்;
ஆட்சியாளரும், எதிரணிகளும்
அரசியல் தீர்வுக்கு
பொது உடன்பாடு
காணலாம் என்றுபதை
கற்பனைகூட செய்ய முடியாது!

எதிர்க்கட்சியை
ஆட்சியாளர்கள் தங்கள்
எதிரிக் கட்சியாகவே
நடத்தியுள்ளனர்!

இந்நிலையில்
அரசியல் தீர்வுக்கு
ஒருவரை ஒருவர்
பழி சொல்வதைத் தவிர,
உருப்படியான தீர்வை
ஒருபோதும் தரப்போவதில்லை!

51 ஆண்டுகால
அனுபவத்தைத் தவிர
வேறு ஆசான்
நமக்குத் தேவையில்லை!

இந்த நாட்டிற்குள்
இனசமத்துவமான
அரசியல் தீர்வு
எட்டாக்கனி
என்பதே அந்த
ஆசான் நமக்குக்கூறும்
வரலாற்றுப் பாடமாகும்!

முரளிதரன் ஒழுங்காக
வீசும் பந்துகளை
நிராகரிக்கும் நடுவர்போல,
தமிழ் பேசும் தரப்பின்
நியாயமான கோரிக்கைகளை
நிராகரிப்பதிலேயே
பேரினவாதம் இங்கு
முனைப்புக் காட்டுகிறது!

தாம் முன்வைத்த
அரைகுறைப் பொதியை
அரசு தூக்கிப்பிடிக்கும்!

முன்னர் தாம்கூறிய
அதிகாரப் பரவலாக்கல்
திட்டத்தை
எதிரணி எடுத்துக்
காட்டிக் கொண்டிருக்கும்!

அண்ணன் எப்போ சாவான்
திண்ணை எப்போது
காலியாகும்? என்று
அதிகாரப் போட்டியில்
ஈடுபட்டுள்ளன
ஆளும் தரப்பும், எதிரணியும்!

எனவே, எக்கட்டத்திலும்
இங்குள்ள தரப்புகளுக்குள்
இணக்கம் ஏற்படப்
போவதில்லை! போவதில்லை!

அவுஸ்திரேலிய நடுவர்களை
விடவும்
இங்குள்ள அரசியல் கட்சிகள்
வெற்றுப் பிடிவாதக்காரர்கள்!

ஆகவே! பந்து வீச்சு
சர்ச்சையை ஆராய
மத்தியஸ்தம் கோரும்
அமைச்சர் கதிர்காமர்,
இனப்பிரச்சனைக்கும்
மத்தியஸ்தம் பெறும்
முயற்சியில் இறங்கட்டும்!

அவ்வாறு செய்தால்
கடந்த 51 ஆண்டுகளில்
அதி சிறந்த
வெளிநாட்டமைச்சர்
என்ற பெருமை
அவரைச் சேரும்!

*மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்*

## ஆன்மீகம்

### விதிக்கப்பட்ட விதி

ஒருவன் செய்யும் நல்வினை தீவினைக்கேற்ப அமைவதே விதி. ஒருவன் எவ்வளவு நல்ல தர்ம கைங்கரியங்களைச் செய்கின்றானோ, அவன் நல்வினைக்குட்படுகின்றான். ஒருவன் எவ்வளவு தீமைகளைச் செய்கின்றானோ, அவன் தீவினைக்குட்படுகின்றான். ஒருவன் பிறக்கும்போதே தன்னோடு முற்பிறவியிலே செய்த புண்ணிய- பாவ மூட்டைகளைக் கூடவே கொண்டு வருகின்றான். உலகிலே அதியுயர்ந்த பழமையான- பண்பான- சமயம் இந்து மதம்.

இந்துமதக் கோட்பாட்டின்படி, 'பற்றித் தொடரும் இருவினை, புண்ணிய பாவமுமே' என்று அழகாக, மிக ஆழமாக உறுதியிட்டு உரைக்கப்பட்டுள்ளமை உற்று நோக்கற்பாலது. அங்ஙனம் ஒருவன் செய்துகொண்டு வந்த நல்வினை- தீவினைக்கேற்ப அவனது 'கிரகநிலை' அமைகிறது.

நல்ல யோகங்கள் அமைய ராஜயோகத்துடன் பிறப்பதும், கெட்டயோகங்கள் சூழ தரித்திர யோகத்துடன் பிறப்பதும் அவரவர் முன்ஜென்மத்தில் செய்துகொண்டுவந்த பூர்வ, புண்ணிய பிராரத்துவ கர்மவினையேயன்றி வேறல்ல. இதையே அறிவுரையாக ஔவையாரும் 'புண்ணியமாம் பாவம் போம். போவநாள் செய்அவை மண்ணில் பிறந்தார்க்கு வைத்த பொருள்' என்றார். ஆகவே நாம் கொண்டுவரும் பொருள் புண்ணியம்- பாவம் இரண்டுமே.

வேறு ஆள், அணி, யானை, சேனை, மனைவி, மக்கள், வாகனம், பூமி, செல்வம் யாவும் பொய்யே. இது நம்முடன் கூடவருவதில்லை. ஆனால் நம்முடன் என்றென்றும் நிலையான துணையாக வருவது நாம் செய்த வினைகளே. இவற்றையே வள்ளுவப் பெருமான் 'ஊழ்வினை' என்றார். ஊழ்வினையின் திட்பத்தை 'விதி' என்று நாம் அழைக்கின்றோம். மனிதன் செய்த வினைகளால் ஆக்கப்பட்டதே விதி. ஆகவே ஒருவன் செய்த நல்வினை-தீவினைக்கேற்பவே ஏற்றத் தாழ்விற்கு காரணமாகின்றான். வேறு யாருமல்ல.

தொகுப்பு: அ. அரசரெத்தினம், சேனையூர்-மூதூர்.



### சிக்கனத் திருமணமே சிறந்தது

குறைந்த பொருட்செலவில் மிகவும் எளிமையாக நடத்தப்பட வேண்டிய இஸ்லாமிய இன்பத் திருமணங்கள் இரத்தத்தை உறையவைக்கும் துன்பத் திருமணமாக இன்று மக்களால் மாற்றப்பட்டுவிட்டது. நெற்றி வியர்வை சிந்தப்பட்டு எறும்பு சேர்ப்பதைப் போன்று சேர்க்கப்பட்ட செல்வமனைத்தும் தண்ணீராய் அதில் இறைக்கப்படுகின்றன.

அல்லாஹ் உங்களுக்கு இலகுவானதையே நாடுகிறான், குறைந்த செலவில் அமையும் திருமணமே மிகுந்த பரக்கத்தை தருவதாகும். (2:185) திருக்குர்ஆன் இயம்புகிறது.

நாயகத் தோழர்களுள் ஒருவரான ஹஜ்ரத் அப்துல் றகுமான் பின் அவப் (ரலி) அவர்கள் மணமுடித்துக் கொண்டதற்கு அடையாளமாக ஆடையில் மஞ்சள் கறையுடன் வருகிறார்கள்.

அதைக் கண்ணுற்ற (நபி) ஸல் அவர்கள், "நண்பரே! என்ன மணமுடித்துக் கொண்டீர்களா?" எனக் கேட்டார்கள். "ஆம்! யாரஸூலல்லாஹ்! மணமுடித்துக் கொண்டேன்." "எவ்வளவு மஹர் கொடுத்தீர்கள்?" என நபியவர்கள் கேட்க, 'பேரீச்சம் பழக்கொட்டை அளவு தங்கத்தை மஹராகக் கொடுத்தேன்." என்றார்கள். அப்படியானால் ஒரு ஆட்டை அறுத்து வலீமா விருந்துவைத்து விடுங்கள். அது உங்களுக்கு வாஜிபாகும்." என நபியவர்கள் அன்புக் கட்டளை இட்டார்கள். (ஹதீஸ்)

புரிகிறதா, இனியாவது நபிகளாரின் சுன்னத்தான செயல்முறைகளை எமது திருமணத்தின்போது கடைப்பிடித்திட பழகிக்கொள்ள வேண்டும்.

வை.எம். தாஹிர்கரீம், கல்முனை-6.

## கவிதைப் போட்டி இல.292



### பரிசுக்குரிய கவிதை

#### தீர்வுப்பொதி

**எந்தக் கோணத்தில்
இருந்து பார்த்தாலும்
ஒன்றும் இருப்பதாக
தெரியவில்லை!**

பே. டிலோஜினி-
கல்லடி, உப்போடை, மட்டக்களப்பு.

**இடம் உள்ளவை இடம் பிடித்துள்ள [illegible] வைத்த கவிதைகள்:**

#### ஒன்றுமில்லை

அப்படி
பார்த்தாலும்,
எப்படி பார்த்தாலும்
இப்படி
பார்த்தாலும்
ஒன்றுமில்லை-
பொதியில்!

ரோஜா ஆனந்தராஜா-
பதுளை.

#### என்ன குழந்தாய்?

உவ்...!
இதுதான்
தமிழ்க் கட்சிகளின்
'சின்னம்'

கா. சுஜந்தன்- கிளிநொச்சி.

#### தலைகீழ்!

தலைகீழாய்ப் போன
தரணியைக் கொஞ்சம்
நேராய்க் காண
நடக்கும் முயற்சியோ?

ரேணுகா நிபாய்தீன்-
ஏறாவூர்-2.

#### எழுந்தே நில்!

குட்டிக் கரணமடிக்கும்
அரசியல் கட்சியா நீர்!
கூடிப் பொதிசுமக்கும்
தமிழர் கட்சிகளா நீர்!
எதுவும் ஆகிடாமல்
எழுந்தே நிற்பீராயின்-
எதிர்கால வாழ்வில் நீர்
எதிர்நீச்சல் போட்டு நிற்பீர்!!!

வே. சிவலிங்கம்-
குருக்கள்மடம்.

#### எங்கே சுதந்திரம்?

விலைபோன சுதந்திரத்தின்
விலாசத்தைத் தேடி-நீ
தலை கீழாய் நின்று
தவம் புரிந்தும் கிடைத்திடுமா?

ச. மகாலிங்கம், வெலிமடை குரூப்,
வெலிமடை

#### வீதிக்கு வந்தவன்

ஆதிக்க வெறிகொண்ட
அமெரிக்க குண்டுவீச்சால்
வீதிக்கு வந்தவன் நான்-இங்கு
வித்தைகள் காட்டுகிறேன்....
விரும்பி ஏதும் போடுங்கள்!

சாமீஷ் யோகேந்திரன்-
ஆரையம்பதி-02.

#### குற்றம் ஏது?

பிறந்த மண்ணில்
தவழ்ந்த குற்றமோ?
பெற்றவள் தமிழ் சொல்ல
கற்ற குற்றமோ?
எக்குற்றம் உன் தலையில்-
இந்த வதைக் காளானாய்?

ம. திருவாசுராசா- வவுனியா

## கவிதைப் போட்டி இல.295



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 13.02.1999

**முகவரி:** கவிதைப் போட்டி இல.295
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## வாசக(ர்)சாலை

நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் சூப்பர். 'அதிரடி அய்யாத்துரை', 'டிசம்பர் பௌர்ணமி', 'இடி அமீ'னின் இடியான செயல்கள். 'தகவல் பெட்டி'யில் உள்ள வியக்கும் அம்சங்கள் அனைத்தும் பிரமாதம்.

ரமணி- அபிராமி- பவித்ரா, வாழைச்சேனை.

◆❑❖

290வது முரசில் வெளியிடப்பட்ட கடற் பரப்பில் தன் உடன்பிறப்பை பறிகொடுத்த தங்கை நளாயினியின் அனுபவம் என்ற கதையை முரசுக்கு பதிவு செய்த ஆதிகோவிலடி ஜெயம் அவர்கட்கு எனது அன்பு உருகிய பாராட்டுக்கள் பல நூறு.

இந்த உண்மைச் சம்பவக் கதையை வாசித்து என் மனம் மிக மிக வேதனைப் பட்டது. கண்ணீரும் விட்டேன்.

சோதிடர் வ. தம்பியப்பா, விநாயகபுரம்.

◆❑❖

அன்பு முரசே!

ஜனவரித்திங்கள் 10ம் நாள் முரசிலே தாங்கிவந்த இலக்கிய நயத்தில் சிற்றினம் என்ற தலைப்பில் வெளிவந்த ரசிகன் அவர்கள் அளித்த கவிதை வரிகளான:

*ஈனத் தமிழர் சிலரது
உதவியோடு
மானத் தமிழர்மீது
சவாரி செய்தான்
மன்னன சரபோயி!*

என்பது அருமை.

சி. பெருமாள், வவுனியா.

◆❑❖

தேன் முரசே!

நீ சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் சூப்பர். அதிலும் குறிப்பாக 'எக்ஸ்ரே ரிப்போர்ட்', 'அரசியல் தொடர்', அலசுவது 'இராஜ தந்திரி', 'திருமறை தரும் பொதுநெறி' என்பவை என்னைக் கவர்ந்துள்ளன.

ஜெபநாயகம் சர்வானந்தன்,
ஏறாவூர்-05.

◆❑❖

### எப்போதும் ஓயாது



மாகாணசபைத் தேர்தல் காட்சிகளை கண்முன்னால் கண்டோம். அரசியல் அலசலில் இராஜ தந்திரியார் கணித்து கூறியது போலவே வெற்றி பெறும் உக்கிரத்துடன் செயற்பட்டனர். ஐ.தே. கட்சியிடம் அதிகாரம் இல்லாததால் வாங்கிக் கட்டியது. அன்று வாங்கியதை இன்று இவர்கள் திருப்பிக் கொடுக்கிறார்களாம். அப்படியாயின் இன்று வாங்குவதை ஐ.தே.க. எப்போது திருப்பிக் கொடுக்கப்போகிறது? இவர்களது அரசியல் சண்டை எக்காலத்திலும் ஓயாது.

மு. ரவிக்குமார், புத்தளம்.

### சாட்டை

இனிய முரசே!

அமெரிக்க அதிபருக்கு நீ கொடுத்த சாட்டை நியாயமானது. முரசத்தில் கூறப்பட்ட கருத்துக்களும் மிக அருமை. நறுக்குத் தெறித்தாற் போல கருத்தைக் கூறுவதில் முரசத்திற்குள்ள சிறப்பே தனிதான்.

இ. அந்தனிசில், சிலாபம்.

### புனித ஜனநாயகம்?

முரசே! சென்ற ஆண்டின் நாசகார மனிதர் மட்டுமல்ல, இந்த நூற்றாண்டின் நாசகார மனிதரும் கிளின்ரன்தானோ? மோனிகா விவகாரம் கிளின்ரனின் தனிப்பட்ட விவகாரம். அதற்குள் மூக்கை நுழைத்து புனித ஜனநாயகம் (?) பேசும் அமெரிக்கர்களுக்கு அப்பாவி ஈராக் குடிமக்களை கிளின்ரன் கொன்று குவித்தது குற்றமாகக் தெரியவில்லை. 'முரசு' உன் பணி போற்றத்தக்கது.

மு.லெ. வாஹிட், மாத்தளை.

### மட்டும்தானா?

பில் கிளின்ரனை 'சென்ற ஆண்டின் நாசகார மனிதர்' என்று முரசத்தில் அகௌரவித்ததுக்கு நன்றி. ஆனால் பில் கிளின்ரன் மட்டும்தானா?

மு. சங்கரன், மட்டக்களப்பு.

### தெரிவும் காரணமும்

உள்ளதை உள்ளபடி உரைத்தார் இராஜதந்திரி. வடமேல் மாகாண சபையை முதலில் தேர்தல் நடத்த தெரிவு செய்தது ஏன் என்பதை முரசு முன்பே சரியாகக் கூறிவிட்டது. தேர்தல் முடிந்த பின்னர்தான் ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு அது விளங்கி, அறிக்கைவிட்டுள்ளனர்.

எம். மீரான்சாகிப், குருநாகல்.

### அகௌரவிப்புக்குப் பாராட்டு

'நாசகார மனிதர் 98' என்னும் பட்டம் சூட்டி அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரனை 293வது முரசில் முரசு அகௌரவித்தமை அனைத்து மக்களாலும் நிச்சயம் பாராட்டப்படும்.

ஜி.கே. யோகச்சந்திரன், அக்கரைப்பற்று-7.

◆❑❖

### அகராதியில் உள்ளது

முரசே! மாகாணசபைத் தேர்தல் பற்றிய உனது கணிப்புப்படியே எல்லாம் முடிந்து விட்டது. மாயாஜாலங்கள் காட்டிவிட்டனர். தேர்தல் என்றால் வன்முறை மோசடி என்பது தான் அரசியல் கட்சிகளின் அகராதி. நடப்பதற்கு முன்னரே. இப்படித்தான் நடக்கும் என்றுரைத்த இராஜதந்திரியாருக்கு பாராட்டுக்கள்!

எஸ். சிவலிங்கம், கொழும்பு-09.

*சர்வதேசப் பயங்கரவாதி
பில் கிளின்ரனை
சென்ற ஆண்டின்
நாசகார மனிதராக
பிரகடனம் செய்த
முரசே!
காலம் உணர்ந்து
நீ செய்யும்
அம்பலப்படுத்தல்கள்
நன்று!*

எம்.பாரூக், சவூதி அரேபியா.

எனது மதிப்பிற்குரிய, அன்புத் தலைவன் புரட்சி நடிகர் எம.ஜி.ஆர். அவர்களின் நினைவு தினமானாலும் சரி, பிறந்த தினமானாலும் சரி, அவரை நினைவுப்படுத்தி எம்மையெல்லாம் மனம் குளிரவைக்கும் ஒரே தமிழ்ப் பத்திரிகை 'முரசு' ஒன்றே.

இரா. கணேசதாசன், மாவத்தகம.

### மெய்ப்பித்தன

கொழும்பு மின்மாற்றித் தகர்ப்பு தற்செயல் விபத்து என்று செய்திகள் வெளியானதை நாரதர் மறுத்திருந்தார். புலிகளின் நடவடிக்கை என்று உரைத்திருந்தார். அடுத்து நடந்த மூன்று தொடர் மின்மாற்றி தகர்ப்புகள் நாரதர் ரிப்போர்ட்டை மெய்ப்பித்தன.

என். குனேந்திரன், வவுனியா.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு. -நிர்வாகி.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல:-1772, கொழும்பு.
தொலை நகல் (Fax):- 074-513266



படிப்பகம்

www.padippakam.com

## யாழ் குடாநாட்டில் ‘புலி வேட்டை!’

# ஆட்கடத்தல்கள்! மர்மக் கொலை!

### 18 பேர் சமீபத்தில் காணாமல் போயுள்ளனர்!

(நமது நிருபர்)

**யா**ழ் குடாநாட்டில் புலி வேட்டை என்ற பெயரில் இளைஞர்கள் பலர் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

கடந்த காலத்தில் திருமலை, மட்டக்களப்பு போன்ற பகுதிகளில் வெள்ளைவேனில் இளைஞர்கள் கடத்திச் செல்லப்பட்டனர்.

தற்போது யாழ் நகரிலும் வெள்ளை வேன் பீதி ஏற்பட்டுள்ளது.

சமீபத்தில் 18 தமிழ் இளைஞர்கள் யாழ் குடாநாட்டில் காணாமல் போயுள்ளனர்.

தமது பிள்ளைகளை தமிழ்க் கட்சி ஒன்றே கடத்திச் சென்றதாக யாழ்ப்பாணத்தில் உள்ள மனித உரிமை ஆணைக்குழுவிடம் பெற்றோர் முறையீடு செய்துள்ளனர்.

இம் முறையீடுகளை யாழ் பிரிகேடியரிடம் மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்தது. எனினும் புகார்கள்மீது இதுவரை எத்தகைய நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

#### கடத்தல்

சமீபத்தில் யாழ் நகரில் வங்கி ஒன்றின் முன்பாக வைத்து இளைஞர் ஒருவர் வெள்ளை வேனில் வந்தவர்களால் கடத்திச் செல்லப்பட்டார்.

மூன்று நாட்களின் பின்னர் 2.02.99 அன்று யாழ் நகரில் பெருமாள்கோவில் அருகே அவரது பிணம் கிடந்தது.

செல்லையா புவீந்திரன்- வயது 25 என்பவரே பிணமாகக் கிடந்தவராவார். இவர் கோப்பாய் தெற்கைச் சேர்ந்தவர். திருநெல்வேலியில் உள்ள கராஜ் ஒன்றில் பணிபுரியும் இவர், தனது முதலாளியுடன் யாழ்நகரில் உள்ள வங்கி ஒன்றுக்கு வந்திருந்தார். அப்போதே கடத்திச் செல்லப்பட்டார்.

தமது மகனை புளொட் அமைப்பினரே கடத்திச் சென்றனர் என்று புவீந்திரனின் பெற்றோர் மனித உரிமை ஆணைக்குழுவிடம் புகார் செய்துள்ளனர்.

கயிற்றால் கழுத்து நெரிக்கப்பட்ட நிலையில் கைகால்கள் கட்டப்பட்டவாறு அவரது பிணம் கிடந்தது.

#### எரிந்த வாலிபர்

யாழ் குடாநாட்டில், தமிழ்க் கட்சி ஒன்றினால் கடத்திச் செல்லப்பட்ட இன்னொரு இளைஞர் தீக்காயங்களுடன் யாழ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறிப்பிட்ட தமிழ்க் கட்சியின் முகாமில் சித்திரவதை தாங்காது, அங்கிருந்த மண்ணெண்ணெயை எடுத்து தன் உடம்பில் ஊற்றிக்கொண்டு தீவைத்துக் கொண்டதாகக் கூறப்படுகிறது.

கடத்திச் செல்லப்பட்ட இளைஞர்கள் அனைவரும் குறிப்பிட்ட தமிழ்க் கட்சியின் முகாமிலேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளனராம்.

சில மாதங்களுக்கு முன்னர் யாழ் குடாநாட்டில் புளொட் முகாமில் புலி ஒருவர் இருப்பதாகத் தகவல் கிடைத்ததும் அம் முகாமையே சுற்றிவளைத்து கைதுசெய்தனர் படையினர்.

தற்போது ஆட்கடத்தல்கள், மற்றும் துன்புறுத்தல்கள் பற்றி புகார்கள் செய்யப்பட்டும் சோதனை எதனையும் படையினர் மேற்கொள்ளவில்லை.

#### பச்சை மட்டையடி

யாழ்ப்பாணத்தில் புடவைக் கடை ஒன்றில் பணிபுரியும் தமிழ் இளைஞர் ஒருவரை விசாரணைக்காக அழைத்துச் சென்ற தமிழ்க் கட்சி ஒன்று பச்சை மட்டையடி வழங்கியுள்ளது.

அதே கட்சியினர் வடமராட்சியில் கிராம மக்களைத் தாக்கியுள்ளனர். சமீபத்தில் பீற்றர் என்னும் உள்ளூராட்சிசபை உறுப்பினர் சுட்டுக் கொல்லப்பட்டது தெரிந்ததே. பீற்றரைக் கொன்றவர்களுக்கு உதவியதாகக் கூறியே கிராமமக்களைத் தாக்கியுள்ளனர்.

இதேவேளை யாழ் நகரில் இரண்டாம் குறுக்குத் தெருவில் உள்ள கடை ஒன்றுக்குள் சென்றவர்கள், அக்கடை உரிமையாளரது நெற்றியில் துப்பாக்கியை வைத்து மிரட்டியுள்ளனர்.

“சதீசை சுட்டவர்கள் இங்கு வந்துதான் சாப்பிட்டார்கள்- அவர்கள் எங்கே?” என்று கேட்டு மிரட்டினராம்.

#### திசைதிருப்பல்

யாழ் பெருமாள் கோவிலடியில் கிடந்த பிணமருகே, ‘புரட்சிப் புலிகள் மாத்தையா குழு’ என்று எழுதிப் போடப்பட்டிருந்ததாம்.

குறிப்பிட்ட கொலையைச் செய்த தமிழ்க் கட்சி அதனை மாத்தையா குழு செய்ததாக எழுதிப் போட்டுள்ளது.

ஏற்கனவே சில மாதங்களுக்கு முன்னர் மாத்தையா குழு என்ற பெயரில் யாழ் நகரில் புலிகளுக்கு எதிரான சுவரொட்டிகள் ஒட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையே புளொட் உப தலைவர் மாணிக்கதாசன் சமீபத்தில் விடுத்த அறிக்கை ஒன்றில், தமது உறுப்பினர் சதீசை புலிகள் சுட்டதால், புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை யாழ் குடாநாட்டுக்கும் விஸ்தரிக்கப் போவதாக கூறியுள்ளார். ■

## ஜனாதிபதி சந்திரிக்கா பணிப்பு

### ஜெனரல் தலுவத்தை பயணம்

**பு**திதாக ஜனாதிபதி சந்திரிக்காவால் ஏற்படுத்தப்பட்ட கூட்டு நடவடிக்கைச் சபையின் தலைவர் ஜெனரல் ரோகன் டி.எஸ்.தலுவத்தை செவ்வாய்க்கிழமை மேலை நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

மேற்கத்தைய நாடுகளில், ஒன்றிணைக்கப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் எவ்வாறு செயற்படுகின்றன என்பதை நேரடியாகக் கண்டறியவே அவர் சென்றுள்ளார். ஜனாதிபதியின் தூண்டுதலை அடுத்தே ஜெனரல் தலுவத்தையின் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டது.

ஜெனரல் தலுவத்தையுடன், கூட்டு நடவடிக்கை சபையின் இயக்குநர் பிரிகேடியர் எஸ்.ஆர்.பாலசூரியாவும், ஜெனரல் தலுவத்தையின் உதவியாளர் ஒருவருமே செல்கின்றனர். இதனால் முப்படையைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் அதிருப்தியடைந்திருப்பதாகத் தெரிகிறது.

பிரிட்டன், ஃபிரான்ஸ் மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளில் இக்குழுவினர் மூன்று வாரங்கள் தங்கி கூட்டு இராணுவ நடவடிக்கைகள் பற்றி ஆராய்ந்தறியவிருக்கின்றனர்.

“சிறீலங்கா அரசாங்கத்துக்கும் மேற்படி மூன்று நாடுகளின் அரசாங்கங்களுக்குமிடையிலான உடன்பாட்டின் பேரில் இடம்பெறும் இத்தகைய ஒரு திட்டத்தில், சிறீலங்கா முப்படைகள் மற்றும் பொலிஸ் பிரிவு ஆகியவற்றைச் சேர்ந்த பிரதிநிதிகளையும் இணைத்திருந்தால், சகல பிரிவினரும் பயனடைவார்களே, என்று பல அதிகாரிகள் தங்கள் அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

ஜெனரல் தலுவத்தை இராணுவத் தளபதியாக விருந்து ஓய்வுபெற்றவுடன், அவர் ஜனாதிபதியால் கூட்டு நடவடிக்கை சபைக்குத் தலைவராக நியமிக்கப்பட்டார்.

அவர் பெப்ரவரி மாத இறுதியில்தான் நாடு திரும்புவார் என்று எதிர் பார்க்கப்படுகிறது. ●

## வடக்கு-கிழக்கு மாகாணசபை

### தேர்தல் நடந்தால் பாதகமே!

**வ**டக்கு-கிழக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய ஐந்து மாகாண சபைகளுக்கு தேர்தல்கள் நடைபெறவுள்ளன.

இந்நிலையில் தமிழ்க் கட்சிகள் சிலவும், முஸ்லிம் காங்கிரசும் வடக்கு-கிழக்கு மாகாண சபைத் தேர்தலையும் நடத்துமாறு அரசைக் கோரியுள்ளன.

வடக்கு-கிழக்கில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படுமா? இல்லையா? என்பது ஒரு புறமிருக்க, அவ்வாறு நடத்தப்படுவது தமிழ் பேசும் மக்களுக்கு சாதகமா? பாதகமா? என்பது பற்றி அரசியல் விமர்சகர்கள் சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இனப் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணவேண்டும்; அதற்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் வரவேண்டும் என்ற கோரிக்கைகள் வலுப்பெற்று வருகின்றன. இதனால் அரசுக்கு சர்வதேச அரங்கிலும் நெருக்கடி தோன்றிவருகிறது.

இவ்வாறான நிலையில் வடக்கு-கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படுமானால், மேற்படி கோரிக்கைகளும், அரசுக்கு ஏற்பட்டுவரும் நிர்ப்பந்தங்களும் தளர்வடையும். அரசுக்கே இது சாதகமாக இருக்கும் என்று அவர்கள் கூறியுள்ளனர்.

இனப்பிரச்சனைத் தீர்வுக்கு உதவாவிட்டாலும், தமிழ் பேசும் மக்களது அன்றாடப் பிரச்சனைகளைத் தீர்க்கலாம் என்றும், அதனால்தான் மாகாணசபைத் தேர்தலை கோருவதாகவும் தமிழ்க் கட்சிகள் சில கூறி வருகின்றன.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த அரசியல் விமர்சகர்கள்: “இன்று எதிர் நோக்கும் அன்றாடப் பிரச்சனைகள் என்பவை யுத்தத்தின் விளைவுகளே. யுத்தம் தொடரும் போது இவை மேலும் அதிகரிக்கும். மாகாண சபைத் தேர்தலை அரசு நடத்தினால், வடக்கு-கிழக்கில் ஜனநாயக ஆட்சி நடப்பதாகக் கூறியபடி போரை முன்னெப்போதும் இல்லாதளவுக்கு தீவிரமாக்கும். அதனால் அன்றாடப் பிரச்சனைகள் கூடுமே தவிர குறையப்போவதில்லை, என்று தெரிவித்தனர்.

வடக்கு-கிழக்கில் மாகாணசபை நிர்வாகம் தேர்தலில் தெரிவானாலும், அங்கு படையினரது விருப்பங்களை மீறி செயற்பட முடியாது. அது ஒரு பொம்மைச் சபையாகவே இருக்கும் என்றும் அவர்கள் சுட்டிக் காட்டி உள்ளனர்.

அன்றாடப் பிரச்சனைகளை தீர்க்கப் போவதாக கூறியே உள்ளூராட்சி தேர்தல்களில் தமிழ்க் கட்சிகள் போட்டியிட்டன. எந்தப் பிரச்சனையை அவற்றால் தீர்க்க முடிந்தது? என்றும் அரசியல் விமர்சகர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

சிலருக்கு பதவிகள் கிடைக்க மட்டுமே மாகாணசபை தேர்தல் உதவும். ஒட்டுமொத்தமான நலன்களுக்கு பாதகமே ஏற்படும் என்றும் அவர்கள் கூறியுள்ளனர். ●

## புலி-படை மோதல்-13 பேர் பலி!

**ம**ட்டக்களப்பு-வாகரை மாங்கேணியில் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் 10 புலிகளும் 3 படையினரும் பலியாகினர் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த 30.01.99 அன்று விடியற்காலை 5.30 க்கு இரு தரப்பினரிடையேயும் மோதல் மூண்டது. புலிகள் அப்பகுதி வழியாக வரும் தகவலை முன்கூட்டி அறிந்திருந்த படையினர் இரவோடிரவாகப் பதுங்கியிருந்த பொழுதே புலிகளின் அணியை எதிர்கொண்டு தாக்கினர். புலிகளின் பயிற்சி பெற்ற அணியொன்று மட்டக்களப்புப் பகுதி நோக்கி வரும்போதே மேற்படி தாக்குதல் நடந்ததாகக் கூறப்படுகிறது.

புலிகளின் ஒன்பது சடலங்களையும், 11 துப்பாக்கிகளையும் கைப்பற்றிய படையினர் அவற்றைப் பொது மக்களின் பார்வைக்கு வைத்திருந்த பின்னர் சடலங்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஊடாகப் புலிகளிடம் கையளித்தனர்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து இடம்பெற்ற ஷெல் வீச்சுக் காரணமாக [illegible] மக்களில் இருவர் காயமுற்றனர். ■

## தாய்மொழி அமுலாக்கம்– சுற்று நிருபம் வந்தது முன்னே!

### தனிச் சிங்கள பத்திரங்கள் வந்தன பின்னே

**ம**ட்டக்களப்பு கல்வி அலுவலகத்தினால் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ள மாணாக்கர் பத்திரங்கள் தனிச் சிங்களத்திலேயே அமைந்துள்ளன.

தாய்மொழி அமுலாக்கம் என்று தலைப்பிட்டு கல்வி உயர் கல்வி அமைச்சின் செயலாளரின் 08/16/01/18 ஆம் இலக்க 03.12.98 ஆம் திகதி கடிதத்தின்படி வடக்கு-கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சுச் செயலாளர் 01.01.99 ஆம் திகதி தொடக்கம் சகல நிருவாக செயற்பாடுகளிலும் தாய் மொழி மூலம் அலுவல்கள் நடைபெற வேண்டுமென அறிவித்துள்ளார். ‘எனவே அதன் படி செயற்படுமாறு வேண்டப்படுகிறீர்கள்!’ என்று மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் சகல பாடசாலைகளுக்கும் அறிவித்துள்ளார்.

இது இப்படியிருக்க, தாய் மொழி அமுலாக்கப்பட வேண்டும் என்று பணிப்புரை விடுக்கப்பட்ட பின்னர், மட்டக்களப்பு கல்வி அலுவலகத்தினால் சகல பாடசாலைகளுக்கும் B-59 எனும் மாணாக்கர் பதிவுப் பத்திரம் தனிச் சிங்களத்தில் வழங்கப்பட்டுள்ளது. இதனால் தாய்மொழி அமுலாக்கம் தலை கீழாய்ப்போவது ஒரு புறமிருக்க, சிங்களம் தெரியாத தமிழ் ஆசிரியர்களும் அதிபர்களும் பெரிதும் சங்கடப்படுகிறார்கள்.

## 4 முஸ்லிம்கள் வீடு திரும்பவில்லை!

**ம**ட்டக்களப்பு- பொலன்னறுவை எல்லைப் பகுதியிலுள்ள புணானை-ஜெயந்தியாய காட்டிற்கு மரம் எடுப்பதற்காகவும் வேட்டையாடுவதற்காகவும் சென்ற ரிதீதென்ன கிராமத்தைச் சேர்ந்த 4 முஸ்லிம்கள் இன்னமும் வீடு திரும்பவில்லை.

கடந்த 21.01.99 அன்று மாலை மீ.மு.றம்ழார் (33), இ.லெ.ஜமால்தீன் (36), கா.மு.சேகு இப்றாஹிம் (43), அ.ற.பரீட் (41) ஆகியோர் மேற்சொன்ன காட்டுப் பகுதிக்குச் சென்றிருந்தனர். இவர்கள் கட்டுத் துவக்கு வைத்திருந்ததாகவும் கூறப்படுகிறது.

காணாமல் போனவர்களைத் தேடிப் பார்ப்பதற்காக அப்பகுதிக் காட்டிற்குச் செல்ல முயற்சித்த உறவினர்களைச் சீருடையினர் தடுத்து விட்டனர். இவ்விதம் தடை விதிக்கப்பட்டதால் காணாமல் போனோர் காட்டில் வைத்துக் கொல்லப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுவதாக உறவினர்கள் தெரிவிக்கிறார்கள்.

இதற்கு முன்னரும் சமீபத்தில் புணானை காட்டுப் பகுதிக்கு மரம் ஏற்றச் சென்ற ஆறு முஸ்லிம்கள் சீருடையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்பதும், அதற்கு சில நாட்களின் பின்னர் அந்தக் காட்டிற்கு இறைச்சி வேட்டையாடச் சென்ற முஸ்லிம்கள் சிலர் சீருடையினரால் பிடிக்கப்பட்டு தாக்கப்பட்டு மரங்களில் கட்டி வைக்கப்பட்டனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. ●

## சுட்டுக் கொலை!

**ம**ட்டக்களப்பு-திருப்பெருந்துறையில் எஸ்.தனபாலசிங்கம் என்னும் புளொட் இயக்க உறுப்பினர் சைக்கிளில் சென்று கொண்டிருக்கும்போது புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். இச்சம்பவம் 31.01.99 அன்று இடம் பெற்றது.

மட்டக்களப்பு-விமான நிலையத்தைச் சூழவுள்ள திருப்பெருந்துறைப் பகுதி தீவிர பாதுகாப்புக் கண்காணிப்புள்ள பகுதியாக இருந்த போதும் புளொட் உறுப்பினர் மீது குறி வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## செம்மணி புதைகுழி

### கோரிக்கை நிராகரிப்பு!

**யா**ழ் குடாநாட்டில் செம்மணி புதை குழிகளைத் தோண்டும்போது சர்வதேச நிபுணர்கள் குழு கண்காணிக்க வேண்டும் என்று கோரப்பட்டுவந்தது.

சர்வதேச நிபுணர்கள் பலர் உதவ முன்வந்தனர். தமது செலவில் அவர்களைத் தருவிக்கவும் தொண்டர் நிறுவனங்கள் தயாராக இருந்தன.

சர்வதேச நிபுணர்கள் உதவி பெறப்படவுள்ளதாக சமீபத்தில் செய்திகள் வெளியாகின. ஆனால் சமீபத்தில் யாழ் மாவட்ட நீதிமன்றத்தில், பெரும்பான்மை இனத்தவரான மண்ணியல் நிபுணர் ஒருவரையே குற்றத் தடுப்பு பொலிசார் ஆஜர் செய்துள்ளனர்.

செம்மணி புதைகுழி தோண்டப்படும் போது இவரே உதவியாக இருப்பார், என்று கூறப்பட்டுள்ளது. அரசாங்கம் தாமே விரும்பிய ஒருவரை நியமித்துள்ளது. காணாமல் போனோர் சங்கம் போன்றவற்றின் கோரிக்கைகள் ஏற்கப்படவில்லை.

சர்வதேச நிபுணர்களது உதவி பெறுவதற்காகவே புதைகுழி விவகாரம் தாமதமாவதாக பல மாதங்களுக்கு முன்னர் காரணம் கூறப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. ●

## வரி வசூலிப்பு நிறுத்தம்!

### புளொட் திடீர் அறிவிப்பு

**வ**வுனியாவில் பொருட்களுக்கு தாம் இதுவரை காலமும் அறவிட்ட வரிகளை, இனிமேல் அறவிடப் போவதில்லை என்று புளொட் அமைப்பு கூறியுள்ளது.

தாம் வரி அறவிடுவதை நிறுத்தியுள்ள புளொட், ஏனைய இயக்கங்களும் வரி அறவிடுவதை நிறுத்த வேண்டும் என்று கோரியுள்ளது. ரெலோ, ஈ.பி.ஆர். எல்.எஃப். ஆகிய கட்சிகளிடமே இக் கோரிக்கை விடப்பட்டுள்ளது. தம்மைக் கலந்தாலோசிக்காது புளொட் எடுத்த முடிவை தாம் ஏற்கப்போவதில்லை என்று ரெலோ கூறியிருக்கிறது.

ரெலோ வரி அறவிட்டால், தாம் நியாய விலைக் கடை ஒன்றைத் திறந்து,வரி இல்லாமல் பொருட்கள் விற்பனை செய்யப்போவதாக புளொட் வட்டாரங்கள் கூறியுள்ளன.

அவ்வாறு புளொட் செய்யுமானால் அதற்கு எதிராக தாம் நடவடிக்கை எடுக்க நேரும் என்று ரெலோ வட்டாரங்கள் கூறியுள்ளன. ■

## பாலியல் வல்லுறவு முயற்சி

### இரு பொலிசார் நீக்கம்

(திருமலை நிருபர்)

**தி**ருமலை மாவட்டம் உப்புவெளியில் தமிழ்ப் பெண் ஒருவர் பாலியல் வல்லுறவு முயற்சிக்கு உள்ளானார்.

திருமலை உப்புவெளி மூன்றாம் கட்டையைச் சேர்ந்தவர் சதீஸ்குமார் யோகேஸ்வரி. இவரது வீட்டுக்கு அருகேதான் மூன்றாம் கட்டை பொலிஸ் காவலரண் இருக்கிறது.

மூன்றாம் கட்டை காவலரணில் உள்ள பொலிசார் இருவர் யோகேஸ்வரிமீது குறி வைத்திருந்தனர்.

18.01.99 அன்று இரவு 7 மணியளவில் யோகேஸ்வரியின் கணவரை அழைத்து மதுபானம் கொடுத்தனர் இரு பொலிசார். அவரும் வாங்கிக் குடித்திருக்கிறார்.

ஒரு பொலிஸ்காரர் அவருடன் கதை கொடுத்தபடி நிற்க, இன்னொரு பொலிஸ்காரர் யோகேஸ்வரியின் வீட்டுக்குச் சென்று பலாத்காரம் செய்ய முயன்றிருக்கிறார்.

காவலரணில் நின்ற யோகேஸ்வரியின் கணவருக்கு சந்தேகம் பொறி தட்டியிருக்கிறது. ‘வீட்டுக்கு போகப் போகிறேன்’ என்று கிளம்பியவரை பொலிஸ்காரர் தடுத்திருக்கிறார்.

அதையும் கேளாமல் செல்ல முற்பட்ட போது, “சென்றால் சுடுவேன்!” என்று பொலிஸ்காரர் மிரட்டினார்.

“சுடுவதானால் சுடு” என்றபடியே வீட்டுக்கு விரைந்த கணவர், அங்கு பொலிஸ்காரரின் பிடியில் இருந்து தப்ப தனது மனைவி போராடிக் கொண்டிருப்பதைப் பார்த்து சத்தம் போட்டிருக்கிறார். அதனையடுத்து அந்த பொலிஸ்காரர் ஓடிவிட்டார்.

இதுபற்றி பொலிஸ் மேலதிகாரியிடம் புகார் செய்யப்பட்டது. அதனையடுத்து சம்பந்தப்பட்ட இரு பொலிஸாரும் தற்காலிகமாக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். ●

## பண்பாட்டு இயக்கம்– ஏழாவது மாநாடு

உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் ஏழாவது மாநாடு இந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் சென்னையில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டுக்கான ஆய்வுப் படைப்புக்களை எதிர்வரும் மார்ச் மாத முடிவுக்குள் கோரியுள்ளனர்.

உலகத் தமிழர்களை ஒருங்கிணைக்கும் எண்ணத்தில் 8.01.1974இல் உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது. இதன் நிறுவனர் இலங்கை-குரும்பசிட்டியைச் சேர்ந்த இரா. கனகரத்தினம் ஆவார். தற்போது மலேசியாவைச் சேர்ந்த இரா.ந. வீரப்பனார் தலைவராக இருக்கிறார்.

உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் 25வது ஆண்டும் இதுவாகும். எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 27,28,29 ஆகிய மூன்று நாட்களில் நடைபெறும் இவ்விழாவில் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியும் கலந்துகொள்ளவுள்ளார். ■

## ஹெலி கொள்வனவு

ரஷ்யாவிலிருந்து ‘ரொஸ்ரோவ் ஹெலிக்கொப்டர் புரொடக்ஷன் கொம்பிலெக்ஸ்’ நிறுவனத்திலிருந்து அதன் பிரதிநிதிகள் கொழும்பு வந்திருப்பதாகத் தெரிகிறது.

விமானப்படையின் உபயோகத்துக்காக எம்.ஐ-35 ரக ஹெலிக்கொப்டர்களைத் தருவிப்பதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவே இவர்கள் வந்துள்ளனர்.

இந்தக் கொள்வனவில் எத்தகைய தனிப்பட்ட முகவர்களின் தலையீடு எதுவுமின்றி ‘அரசாங்கத்துக்கும் அரசாங்கத்துக்குமிடையிலான ஒப்பந்தம்’ என்று தகவல்கள் கூறுகின்றன.

ஆயுத கொள்வனவுகளில் ஊழல்கள் நடப்பதாக கூறப்படுவதை அடுத்தே இத்தகைய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாம். ■


படிப்பகம்

# தலதாமீது குண்டுத் தாக்குதல்

## ஓராண்டு நினைவு அனுஷ்டிப்பு

(கண்டி நிருபர்)

பௌத்தர்களின் புனிதத் தலமான கண்டி ஸ்ரீதலதா மாளிகை குண்டுத் தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்டு (25.1.99) ஓராண்டு பூர்த்தியை கண்டியில் பௌத்த அமைப்புக்கள் ஒன்றுகூடி துக்கம் அனுஷ்டித்தன.

இதற்கு முன்னர் பிரமாண்டமான ஊர்வலம் கண்டி கல்வித் திணைக்களத்திற்கு அருகில் இருந்து புறப்பட்டு தலதா மாளிகை மகாமலுவைத்திடலை அடைந்தது.

மக்கள் ஐக்கிய முன்னணி (எம்.ஈ.பீ) ஆதரவாளர்களே இதில் பெரும் அளவில் கலந்துகொண்டனர். ஆயிரம் பௌத்த குருமார்களை எதிர்பார்த்த போதிலும் 156 குருமார்களும் 53 பௌத்த பிக்குனிகளுமே இந்த ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

ஊர்வலத்தில் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் எழுதப்பட்ட நூற்றுக்கணக்கான சுலோக அட்டைகளில்: "புலிகளை ஒடுக்கு! புலிகளுடன் சமாதானம் பேசாதே! கிழக்குக்கு தொப்பி அரசு. மலையகத்திற்கு தொண்டாவின் சோழ ஆட்சி. இராமர் போர்வையில் தொண்டா மலையகத்திற்கு தீமூட்டுவார்! சிங்களவரே இன்னுமா உறக்கம்!"

இப்படியாக இன வாதத்தைத் தூண்டும் ஏராளமான சுலோகங்கள் அந்த அட்டைகளில் காணப்பட்டன.

மடிகோ பஞ்ஞாசீஹ தேரர், முரித்தெட்டுவே ஆனந்த தேரர், மாதுலுவாவே சோவித்த தேரர், மல்வத்தை பீடத்தின் நிருவாக உறுப்பினர் அலுத்கம தம்மானந்த தேரர் ஆகியோர் கலந்துகொண்ட பிக்குமார்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

### சிங்களவரே ஐக்கியப்படுங்கள்

மடிகே பஞ்ஞாசீஹ தேரர் இங்கு பேசுகையில் "சிங்கள இனம் அழித்தொழிக்கப்படும் நாள் வெகுதொலைவில் இல்லை. ஒரு முஸ்லிம் அமைச்சர் பௌத்தர்களை இகழ்வாகப் பேசி இருக்கிறார்.

மலையகத்தில் தொண்டமான் அசைக்க முடியாதவராகி வருகிறார்.

74% சிங்களவர் வாழும் இந்நாட்டில் சிறுபான்மையினரின் உதவியை ஆட்சி அமைக்க சிங்களவரே நாடுகின்றனர். இது கேலிக்கூத்தானது. எனவே பௌத்தர்களே இந்தப் புனிதத்தலத்தின் முன்பாக இருந்து "சிங்களவரே ஐக்கியப்படுங்கள்" என்ற மூலமந்திரத்திற்கு ஏற்ப இன்று தொடக்கும் நாம் ஒன்றிணைவோம்!" என்றார்.

சில வாரங்களுக்கு முன்னர் அஸ்கிரிய பௌத்த பீடாதிபதி பலியமான ஸ்ரீசந்தானந்தர், நிதி அமைச்சர் பேராசிரியர் பீரிஸை அஸ்கிரியாவில் சந்தித்த வேளையில் என்ன பாடுபட்டாவது மூன்றாம் நபர் ஒருவர் மூலமாவது இனப்பிரச்சனையைத் தீர்க்க முன்வாருங்கள்!" எனக் கேட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவரையும் மல்வத்தை பீடாதிபதியையும் இந்த துக்க தினத்தில் ஏற்பாட்டாளர்கள் இணைக்க எடுத்த முயற்சி பலிதமாகவில்லை.

மல்வத்தை பீடாதிபதி நிலைமையை உணர்ந்தோ என்னவோ ஆஸ்பத்திரியில் போய் அமர்ந்துவிட்டார்.

அஸ்கிரிய பீடாதிபதி சுகவீனமாக அவரது வாசஸ்தலத்திலேயே இருக்கிறார்.

என்றாலும் இந்தத் துக்க தினத்தை ஏற்பாடு செய்த அமைப்புக்கள் கண்டியில் 25.1.99ல் பகல் 1 மணியிலிருந்து மாலை 6 மணிவரையும் கடைகளை மூடும்படி வற்புறுத்தியதால் மாணவர்களும் பொதுமக்களும் பெரும் தொல்லைக்கு உட்படுத்தப்பட்டனர்.

# தமிழ்ப் பெண் கைது

(கண்டி நிருபர்)

ஸ்ரீ தலதா மாளிகை குண்டுத் தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்டு ஓராண்டு நிறைவை அனுஷ்டிக்கும் முகமாக 25.1.99ல் தலதா மாளிகை முன்புறம் உள்ள மகா மலுவையில் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டனர். அப்போது அதனைத் தூர இருந்து படம் பிடித்த தமிழ் யுவதி ஒருவர் கண்டி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். இவரைப் பற்றிய விசாரணை தொடர்கிறது.

# தெருவில் குளம்-நகரசபை சாதனை

மழை நீரைத் தேக்கிக் குளங்கள் கட்டுவதில் பண்டைய மன்னர்கள் தாம் சமர்த்தர்கள் என்றில்லை. திருக்கோணமலை நகர பிதாவும் சமர்த்தர்தான். மரத்தடிச் சந்தி, கந்த சுவாமி கோவிலடி, சண்முக வித்தியாலயத்தடி என்று ஒவ்வொரு தெருவுக்கும் ஒவ்வொரு குளம் உண்டு. ஒரு சொட்டு மழைநீரையும் வடிந்துவிடாமல் தடுத்துத் தேக்கி கஸ்கிஸன் வீதியில் அமைக்கப்பட்டுள்ள குளத்தையே படத்தில் காண்கிறீர்கள்.



# 24 ஆயிரம் நோயாளர்கள் பயன்

## ச.செஞ்சிலுவைச் சங்கம் சேவை

(திருமலை நிருபர்)

திருக்கோணமலை மாவட்ட அரச கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் நடமாடும் வைத்திய சேவையைச் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் நடத்தியதன் மூலம் 24 ஆயிரம் நோயாளர்கள் நன்மை பெற்றுள்ளனர். 91 கடுமையான நோயாளர்கள் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். பத்து புதிய கிணறுகள் அமைத்ததன் மூலமும் 6 கிணறுகள் புனருத்தாரணம் செய்யப்பட்டதன் மூலமும் 960 குடும்பங்கள் நன்மையடைந்துள்ளன. இவைகளில் அநேகமானவை மூதூர் கிழக்குப் பிரதேசங்களிலேயே நடைபெற்றுள்ளன.

ச.தே.ச. சங்கத்தின் திருகோணமலைக் கிளையினரின் 1998ம் ஆண்டுக்கான ஆறிக்கையில் மேற்கண்ட தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு தாம் மேற்கொண்ட 48 கடற்பயணங்களால் 2178 நோயாளர்களும் 600 ச.தே.செ.சங்க, வேறு தொண்டரமைப்பு ஊழியர்களும், 102 வைத்தியத்துறை சார்ந்தோரும் எடுத்துச் செல்லப்பட்டனர். அத்துடன் 1448 தபாற்பைகள் உட்பட 864 மெட்ரிக் தொன் நிறையுள்ள சரக்குகளும் எடுத்துச் செல்லப்பட்டதாகவும் அவ்வறிக்கை கூறுகிறது.

இக்காலகட்டத்தில் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளால் 6 குடும்பங்கள் ஒன்று சேர்க்கப்பட்டிருப்பதோடு விடுதலைப் புலிகளால் விடுவிக்கப்பட்ட 5 பேர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளனர்.

1990 ஜூலை 2ந் திகதி தொடக்கம் தனது பணிகளை ஆற்றும் திருமலைப் பணிமனையில் தற்போது மூன்று வெளிநாட்டுப் பேராளர்களும் 30 உள்நாட்டவர்களும் பணிபுரிகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.


விளம்பரப் பகுதி

**SPOKEN ENGLISH**
**பேச்சு ஆங்கிலம்**
BRIGHT NEW METHOD
தபால் மூலமும் நேரிலும் நடைபெறும்



ஆங்கிலம் பேச வேண்டும்
என்று விருப்பம்
ஆனால்......
ஏதாவது தவறாகப் பேசி விடுவோமா
என்ற தயக்கம், பயம்.
மற்றவர்கள் ஆங்கில மொழியைப்
பேசும் போது புரிந்து கொள்ள
முடிகிறது
ஆனால் பேசும் போது தயக்கம்
இது தானே உங்கள் பிரச்சினை

*கவலையை விடுங்கள்!*

மிக குறுகிய காலத்தில் ஆங்கிலத்தில் பேசப் பழக முடியும் நேரில் கற்க விரும்புவோர் தொலைபேசி மூலமோ, நேரிலோ தொடர்புகொள்ளவும். தபால்மூலம் கற்க விரும்புவோர் கீழ்க்காணும் விண்ணப்பப்படிவத்துடன் சுயவிலாசமிடப்பட்ட தபாலுறையுடன் தொடர்பு கொள்ளவும்.

பெயர்: ..........................................
விலாசம்: ..........................................
..........................................

**BRIGHT BOOK CENTRE (PVT) LTD.**
S- 27 FIRST FLOOR, COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX. P.O. BOX NO: 162, COLOMBO - 11 TELE: 434770, 074 - 718592

**சித்தர் மாந்திரீகம்** உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடன் தீர்வு காண்பதற்கு ஏழாவது தலைமுறை வாரிசு. மணி மாந்திரீக சித்தர் "சக்திசரவணா"வை தொடர்பு கொள்ளுங்கள்.
SHAKTHY SARAVANA
30/16, MLLIKA LANE, COLOMBO-06. T.P: 500067
வியாழன் விடுமுறை



**மலையாள மாந்திரீகம்**



மலையாள மாந்திரீகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே! இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது. திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
**P.K. SAAMI J.D.G.A.N&JP**
**SRI DURGAADEVI MANTHIRIKA UCHCHADA PEEDAM**
**NO. 162, KOTAHENA STREET, MAY FIELD ROAD, COLOMBO-13.**
தலரெலியாவிலும் வழமையான சேவைகள் நடைபெறுகின்றன.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831

விடு விற்பனை
108, ரஜமல் வத்தை, கொழும்பு-15ல் 06 படுக்கை அறைகளுடன் சகல வசதிகளுடனும் 2 தட்டு மாடி வீடு விற்பனைக்கு உண்டு. விலை 45 இலட்சம்.
M.A. Fernando
T.P:-526687

1 வருட உத்தரவாதத்துடன் கூடிய தரமான புதிய Celltel போன்கள், (Cell Card Phones) விற்பனைக்கு உண்டு. உங்களிடம் இணைப்புக்கள் அற்ற புதிய Celltel போன்கள் இருந்தால் வெகு விரைவில் இணைப்புக்கள் பெற்றுத் தரப்படும். மேலதிக விபரங்களுக்கு உடனடியாக தொடர்பு கொள்ளவும்.
A.C.M. அன்வர்
072-284706

**காண்டம்**
முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை
**ரிஷி. S.மணி**
மூலம் அறிய வாருங்கள் வெளி நாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.
**S. MANI**
144 2/1, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 6.
T.P:- 586218

BRIGHT NEW METHOD
**SPOKEN THAMIL**
மொழி விருத்தி
தபால் மூலம் கல்வி
ஆங்கிலம் / சிங்களம் ஆகிய மொழிகளில் தபால் மூலம் கல்வி போதிக்கும் Bright நிறுவனம்.
புலம் பெயர்ந்த தமிழ் மாணவர்களுக்காக
(வெளிநாட்டவர்களுக்கு)
தாய் மொழி, தமிழ் மொழியின் பாரம்பரியத்துடன் இலக்கண இலக்கிய அறிவை மொழிவிருத்தி நூல்கள் ஊடாக அபிவிருத்தி செய்யும் பாடத்திட்டம்.
விபரங்களுக்கு தொடர்பு கொள்க
BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
S-27 FIRST FLOOR, P. O. BOX NO: 162, C. C. S. M. C. C.-11. SRI LANKA.
TELE: 434770, 074 - 718592. FAX: 333279



உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்
எப்பேர்ப்பட்ட வியாதியாயினும் சரி உடனே என்னை சந்தியுங்கள்

**K. சிவசுப்பிரமணியம்**
M.I.H. Ind. S.M.P.

எவ்வளவு நாள்பட்ட வியாதியானாலும் சரி, காலதாமதம் செய்யாமல் கீழ் கண்ட வியாதிகளுக்கு நேரில் கண்டு ஆலோசியுங்கள். நேரில் வர முடியாது போனால் கடிதம் மூலம் தெரிவித்துக் கொள்ளுங்கள்.

ஆஸ்மா சக்ஷயம், இளைப்பு, பீனிசம், தலைவலி, மலேரியா, கண்டமாலை, சொறி, சிரங்கு, பாண்டு, சோகை, காக்கை வலிப்பு, வாதம், நீரிழிவு, மூலரோகங்கள், இருதய நோய்கள், இடுப்புவலி, நெஞ்சு எரிவு, குடல் வாய்வு, நரம்புத் தளர்ச்சி, வீரியக் குறைவு, இரத்தமின்மை, சொப்பன ஸ்கலிதம், பெண்களுக்கு ஏற்படும் சூதக வாய்வு, மாசம் முன் — பின் காணுதல், சூதக வலி, பிள்ளை இல்லாமலிருத்தல் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்படும் சகல வியாதிகளுக்கும் உத்தரவாத சிகிச்சை அளிக்கப்படும்.

வாரநாட்களில் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரையிலும் விடுமுறை தினங்களில் காலை 9 மணி முதல் பகல் 12 மணி வரை வைத்தியரை சந்திக்கலாம்.

**முருகானந்தா வைத்தியசாலை**
No. G/02, கொழும்பு மத்திய சுப்பர் மார்க்கெட், (நில்மாடி) மீன்கடை மேல், கொழும்பு-11.




## 2வது பிறந்த நாள் வாழ்த்து

**செல்வி சதுர்ஷிகா 01.02.1999**

கருங்காலி, கரைநகரைச் சேர்ந்த ஸ்ரீ அரன்-சிவரதி தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வி சதுர்ஷிகா தனது இரண்டாவது பிறந்த தினத்தை 01.02.1999ல் கனடா மொன்றியல் மாகாணத்தில் உள்ள தனது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடினார். இவரைக் கனடாவில் உள்ள அன்பு அப்பா, அம்மா கொழும்பிலுள்ள அப்பம்மாமார், மாமாமார், மாமிமார், மச்சான்மார்களான கணேஷிராம், யதூஷன் மற்றும் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் கருங்காலி போசுட்டி முருகன் அருளால் எல்லா வளங்களும் பெற்று பல்லாண்டுவாழ வாழ்த்துகின்றனர்.

தகவல்: அப்பா, கனடா.

## 5ம் ஆண்டு நினைவஞ்சலி

**கனகசபை ஐயாத்துரை**

மண்ணுலகில் 23.04.1934 விண்ணுலகில் 02.01.1994



மாசி மாதம் 7ம் திகதி ஞாயிற்றுகிழமை
தமிழ் வெகுதானிய வருடம் (24.01.1999)
தேய்பிறை ஸப்தமி திதி.

பண்பின் பிறப்பிடமாய் பாசத்தின் இருப்பிடமாய் குடும்பத்தின் குல விளக்காய் இருந்த தெய்வத்தின் ஐந்து ஆண்டுகள் கழிந்தும் எங்கள் மனதில் வாழும் அன்பு தந்தையே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

அன்பு மனைவி அருளம்மா, மக்கள், மருமக்கள் பேரப்பிள்ளைகள்.

தகவல்: ஐ.சின்னத்தம்பி(மகன்) 38, வோட்டஸ் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.


THEIVIGA SAKTHY CENTRE – DIVINE MEDICAL AND ASTROLOGICAL SERVICES
**தெய்வீக மருத்துவம்**
சர்வதேச சமூக தெய்வீக சேவை
CHARITY REGED NO. HA\04\BT\219
NTSF துயர் தீர்க்குமிடம்

வாழ்க்கையில் கிரக மற்றும் வேறு தீவினைகளால், தீராத மனத்தாக்கம், காதல், கல்வி, தொழில், விவாகத்தடைகள், கணவன்-மனைவி சந்தோஷமின்மை, வெளிநாட்டுப் பிரயாணத்தடைகள் என்பவற்றிற்கும், வேறு எவ்வித பிரச்சனைகளானாலும் நீங்கி மகிழ்ச்சியாக வாழ இறைவனால் சித்தர்களுக்கு போதித்தருளப்பட்ட புனித புராதன தீங்கற்ற தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்திபளித்து வருகின்றோம். காண்டமெனும் சோதிடத்தினால் உங்கள் பலன்களையும் தெரிந்து கொள்ளலாம்.

ஆயுர்வேத மருத்துவர் பாலுசோதிடர் (SAMP) "நேரில் வரமுடியாதவர்கள், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சனைகளை எழுதினால் கடல் கடந்து உடன் பயன்தரும் தெய்வீக மருந்துப் பொருட்களை தபால்மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். தபால் செலவுகளை அனுப்புபவர்களின் விடயங்கள் முன்னுரிமை அடிப்படையில் கவனிக்கப்படும்."

தெய்வீக சக்தி நிலையம்
கல்லடி-அரசவிடுதி வீதி, மட்டக்களப்பு.

THEIVEEGAM SRI LANKA, HEAD OFFICE
BATTICALOA. SRI LANKA.
T.PHONE: 065-24825

"வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்." – "DISPEL DARKNESS IN LIFE LET LIGHT SHINE"

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# நவீன ஆயுதக் கொள்வனவு

## மாற்றம் வருமா போர்முனையில்?

புலிகளது ஆயுதக் கப்பல் வருகிறது, வந்துவிட்டது என்று நேரடி வர்ணணைபோல அரசின் புலனாய்வுப் பிரிவுகள் கூறிக்கொண்டிருந்தன.

சமீபத்தில் முல்லைத்தீவுக் கடற்பரப்புக்கு புலிகளது கப்பல் வந்து போனதாகவும் புலனாய்வுப் பிரிவு கூறியதாக சண்டே ரைம்ஸ் இருவாரங்களுக்கு முன்பு செய்தி வெளியிட்டுள்ளது.

புலிகளது ஆயுதக் கப்பல் வருவதாக இருந்தால்கூட தற்போதைய சூழலில் முல்லைக் கடலுக்கு வரப்போவதில்லை.

'பேச்சுக்கு தயார் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவை' என்று பிரபாகரன் கூறிய பின்னர் புலிகளுக்கு ஆயுதக் கப்பல் வருவதாக அரச தரப்பு அடிக்கடி கூறிக்கொண்டிருக்கிறது.

புலிகளுடன் பேசுமாறு எதிர்க்கட்சியும் கூறிவருவதால், புலிகள் ஆயுதம் குவிக்கிறார்கள் என்று செய்தி வருவது அரசுக்கு நல்லது. ஆயுதம் குவிக்கும் புலிகளுடன் எப்படிப் பேசமுடியும்? என்று சிங்கள மக்கள் நினைப்பர். எதிர்க்கட்சியின் கோரிக்கைக்கு எதிர்ப்புக் கிடைக்கும்.

ஆனால், புலிகளது ஆயுதக் கப்பல் கதை என்ன நோக்கத்திற்காக கட்டிவிடப்பட்டாலும், கடற்படையினர் தமது ராடர்களை உற்று நோக்கியபடிதான் இருக்கின்றனர்.

முல்லைத்தீவு கடற்பிராந்தியத்தை அண்டியதாக சென்ற இந்திய சரக்குக் கப்பல்களை புலிக் கப்பல்கள் என்று நினைத்து வளைத்து பிடித்திருக்கின்றனர்.

பின்னர்தான் இந்திய சரக்குக் கப்பல்கள் என்ற உண்மை தெரிந்திருக்கிறது. வருத்தம் தெரிவித்துவிட்டு திருப்பி அனுப்பி விட்டனர்.

இதே போக்கு தொடர்ந்தால் இலங்கை கடற்பிராந்தியத்தில் வெளிநாட்டு கப்பல்கள் பயணம் செய்ய அஞ்சும் நிலை ஏற்படக்கூடும்.

தாமே உருவாக்கும் கதைகளை தாமே நம்பி, தமக்கே நஷ்டத்தையும் ஏற்படுத்தப் போகிறது அரச தரப்பு.

5 கோடி அமெரிக்க டொலர்கள் பெறுமதியான விமான எதிர்ப்பு ஆயுதங்களை அரசு கொள்வனவு செய்ய உள்ளது. இத்தகவலையும் அதே 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையே வெளியிட்டிருந்தது.

புலிகளிடம் வானூர்திகள் இல்லை என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் ரத்வத்தை முன்னர் மறுத்திருந்தார்.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் மாவீரர் தின இறுதிநாள் நிகழ்ச்சியில் புலிகளது வானூர்திகள் வலம் வந்ததை அரசின் புலனாய்வு பிரிவு திட்டவட்டமாக உறுதி செய்திருக்கிறது.

வன்னியில் நேரில் கண்ட சிலர் கொழும்பு வந்தபோது அத் தகவல் புலனாய்வுப் பிரிவுக்கு எட்டியுள்ளது.

இதன்பின்னரே விமான எதிர்ப்பு ஆயுதங்களை பெறுவதில் கூடுதல் கவனம் செலுத்த தொடங்கியுள்ளனர்.

தற்போது கலிபர் 50 ரக துப்பாக்கிகளே படைத்தரப்பினால் வானை நோக்கி தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

புலிகளிடம் தற்போதுள்ள வானூர்திகளது பறக்கும் உயரத்தை கலிபர் 50ரக துப்பாக்கிகளால் எட்டமுடியும்.

ஆனால், வானூர்திகள் நெளிவு சுழிவாக பறந்துபோனால் குறி தப்பும். துல்லியமான தாக்குதலுக்கு விமான எதிர்ப்பு ஏவுகணைகளே உத்தரவாதம்.

ஆனாலும் எந்தநேரமும் விமான எதிர்ப்பு ஏவுகணைகளை தோளில் சுமந்தபடியோ, தயார் நிலையிலே வைத்திருக்க முடியாது.

தற்போதும் படையினரிடம் ராடர்கள் உள்ளன. ஆனால் 24 மணிநேரமும் ராடர் திரைகளையே நோக்கிக் கொண்டிருப்பது சாத்தியமில்லை.

வானூர்திகள் கிட்டத்தில் வரும்போது அபாய ஒலி எழுப்பக்கூடிய ராடர்களையும் கொள்வனவு செய்ய உள்ளதாக கூறப்படுகிறது.

எனினும் வான் பிரதேசம் முழுவதையும் கண்காணிக்கக்கூடிய ராடர் வசதிகளை உருவாக்கும் அளவுக்கு நிதிப் பலம் இலங்கை அரசிடம் கிடையாது.

கேந்திர முக்கியத்துவமான பகுதிகளில் மட்டும் அத்தகைய ராடர்களை பொருத்தி வைக்கலாம். அவற்றால் வான்பரப்பு முழுவதையும் கண்காணிப்பது சாத்தியமில்லை.

எப்படியோ, இன்னொரு நாட்டுப் படைக்கு எதிராக போரில் கடைப்பிடிக்க வேண்டிய சகல தற்காப்பு ஏற்பாடுகளையும் இலங்கை அரசு செய்ய வேண்டியிருக்கிறது.

அந்தளவுக்கு புலிகளது இராணுவ பலம் தரை, கடல், வான் மூன்றிலும் அரசுக்கு அச்சுறுத்தலாக மாறியுள்ளது.

5 கோடி அமெரிக்க டொலர்கள் என்பது நம்நாட்டு பணமதிப்பில் 340 கோடி ரூபாய்கள். அந்தளவு தொகைக்கு விமான எதிர்ப்பு ஆயுதங்களை வாங்கித்தான் புலிகளது வானூர்திகளின் அச்சுறுத்தலை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது.

ஆனால் விமான எதிர்ப்பு ஆயு தங்கள் பெறுவதற்கு நம்நாட்டு பணமதிப்பில் ஐந்து கோடி ரூபாய் செலவிடுவதுகூட புலிகளது நிதி நிலைக்கு கட்டுப்படியாகாத விடயம். அவ்வாறு இருந்தும் அரசின் விமானப்படை விமானங்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் அளவுக்கு விமானங்கள், ஹெலிகள் என்பவற்றை தாக்கி வீழ்த்தி உள்ளனர்.

அரசோடு ஒப்பிடும்போது நிதி வளம், ஆட்பலம், ஆயுத பலம் போன்ற மூன்றிலும் புலிகள் தாழ்ந்த நிலையிலேயே உள்ளனர்.

ஆனால் குறைந்த வளத்தோடு நிறைந்த சேதத்தை ஏற்படுத்தும் விதமான உத்திகளும் முக்கியமாக உளவியல் பலமுமே புலிகளது தாக்குதல்களது வெற்றிக்கு காரணமாக அமைகின்றன.

எனவே, நவீன ஆயுதங்கள் மட்டும் போரின் போக்கை தீர்மானிக்கப் போவதில்லை.

–★★–

**28.01.99** அன்று அதிகாலையில் முல்லைக் கடற்பரப்பில் கடற்படையினருக்கும், கடற்புலிகளுக்கும் இடையே சமர் ஒன்று மூண்டது.

கடற்புலிகளது தளம் அமைந்துள்ள சாலை கடற்பரப்பை அண்டியதாக இந்தச் சமர் நடந்திருக்கிறது.

சாலைக் கடற்பரப்பில் டோராடப் படகுகளது நடமாட்டத்தை தமது ராடர்களில் அவதானித்தனர் கடற் புலிகள்.

அதனையடுத்து கடற்புலிப் படகுகள் சண்டைக்கு தயார் நிலையில் கடற்பரப்பில் இறங்கின.

டோராப் படகுகளை நெருங்க கடற்புலிப் படகுகள் முயன்றபோதும், டோராக்கள் புலிகளது தாக்குதல் வியூகத்திற்குள் சிக்கவில்லை.

எனினும் அத்தாக்குதல் திட்டம் எதிர்பார்த்த இலக்கை எட்டவில்லை.

□★□

**யா**ழ் குடாநாட்டில் குருநகர் கடற்பகுதியில் படகுகள் சென்று கொண்டிருந்ததை கடற்படையினர் அவதானித்தனர்.

உடனடியாக தகவல்கள் தரைக்கு அனுப்பப்பட்டன. புலிகளின் தாக்குதல் அணிகள் குருநகர் கடற் பகுதி நோக்கி வருவதாக நினைத்து அப்பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

கடற்கரைப் பகுதிகள் நோக்கியே ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

எம்.ஐ.24 ரக ஹெலிக்கொப்டரும் கடற் கண்காணிப்புகாக விரைந்தது. குருநகர் கடற்கரைப் பக்கம் தரையிரங்க முனைந்த புலிகளின் அணிகள் ஷெல் தாக்குதலை அடுத்து, திரும்பி விரைந்தன.

கடற்பரப்பில் புலிகளது படகுகளை கண்டதும் ஹெலியில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

ஹெலி மேலும் தாழப்பறந்து படகுகளை நெருங்கி சுடும்வரை புலிகள் பதில் தாக்குதல் நடத்தவில்லை.

புலிகளது படகுகளில் இருந்து தாக்குதல் நடத்தப்படவில்லை என்பதால் ஹெலி தாழப்பறந்து சூடு நடத்தியது.

புலிகள் ஹெலியை நோக்கி திடீரென்று சுடத்தொடங்கினார்கள். நீண்டதூர ஆயுதங்கள் எதுவும் புலிகளிடம் இருக்கவில்லை.



கலிபர் 50 துப்பாக்கியுடன் புலிகள்

குறும்தூர ஆயுதங்களே புலிகளிடம் இருந்தன. அதன் காரணமாகவே ஹெலி தாழப்பறக்கும்வரை காத்திருந்து தாக்கினார்கள்.

ஹெலி சேதமடைந்தது. ஹெலியின் உடல் பாகத்தில் சூடு விழுந்ததும் ஹெலி உயரே எழுந்து பறந்துபோனது.

இந்த மோதலில் தமது தரப்பில் எவரும் பலியாகவில்லை என்று புலிகள் கூறியுள்ளனர்.

இதற்கு மறுநாள் வெள்ளிக்கிழமை 29.01.1999 அன்று காலையில் யாழ் குடாநாட்டு பாசையூர், குருநகர் கடற்பகுதிகளில் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டது.

வன்னியில் இருந்து படகு ஒன்று வந்து கொண்டிருப்பதை அவதானித்து, தாக்குதல் நடத்த ஹெலி விரைந்தது.

படகில் பலர் இருந்தனர். உடனடியாக ஹெலி தாக்கத் தொடங்கியது.

படகில் இருந்தவர்கள் தமது கரங்களை உயர்த்தி அபயக் குரல் கொடுத்தனர்.

எனினும் தாக்குதல் தொடர்ந்தது. படகில் இருந்த இரண்டு பேர் சூடு வாங்கி படகுக்குள் சுருண்டு விழுந்தனர்.

இனியும் படகில் இருந்தால் உயிர் தப்ப முடியாது என்று ஏனையோர் கடலில் குதித்தனர்.

படகில் வந்த அத்தனைபேரும் பொது மக்கள். வன்னிக்கு யாழில் இருந்து இடம் பெயர்ந்து சென்றவர்கள். மீண்டும் யாழ் குடாநாட்டில் வசிப்பதற்காக வந்தவர்கள்.

மொத்தம் பதினொரு பேர் படகில் இருந்தனர். கடலில் குதித்த ஒன்பது பேரும் மீனவர்களால் காப்பாற்றப்பட்டனர்.

பலியானவர்களில் ஒருவர் மதபோதகர். யாழ் குடாநாட்டில் மதப் பணியாற்ற வன்னியில் இருந்து வந்தவர்.

இத் தாக்குதல் குறித்து தமிழ்க் கட்சிகள் எக் கருத்தையும் கூறவில்லை.

மனித உரிமை ஆணைக்குழுவும் யாழ்ப்பாணத்தில் இருக்கிறது. அவர்களும் எக் கருத்தையும் தெரிவிக்கவில்லை.

நாரதர்

நான்கு மணிநேர சண்டையில் மூன்று கடற்புலிகள் பலியாகினர். அதில் ஒருவர் கடற்புலிகளது பெண்கள் அணியை சேர்ந்தவர். கடற்புலிப் படகுகளும் சேதமாகின.

இச் சண்டையில் தமது தரப்பில் டோராப் படகு ஒன்று மட்டுமே சேதமடைந்தது என்று கடற்படையினர் கூறியுள்ளனர்.

டோராப் படகு சேதமடைந்தும் படகில் இருந்த படையினருக்கு சேதம் ஏதும் இல்லை என்பது ஆச்சரியம்தான்.

இதற்கு முன்னர் நடைபெற்ற கடற்சமரிலும் தமது டோராப் படகு மட்டுமே சேதமடைந்தது என்று படைத்தரப்பு கூறியிருந்தது.

கடற்சமர் நான்கு மணிநேரம் நீடித்தது. இச் சமரும் கடற் படையினருக்கே சாதகமாக முடிந்திருக்கிறது.

11.01.99 அன்று திருமலை கடற்பரப்பில் கடற்படையினருக்கும், கடற் புலிகளுக் கும் இடையிலான சமரிலும் கடற்படையினரின் கையே மேலோங்கியது. அச்சமரில் ஐந்து கடற்புலிகள் பலியாகி இருந்தனர். அதில் இருவர் கடற்புலிகள் அணியின் தளபதிகள்.

11.01.1999 அன்று கடற்சண்டையில் பலியான கடற்புலிகளின் நினைவாகவும் 28.01.99 அன்று கடற்படைப் படகுகளை கடற்புலிகள் தாக்கியிருக்கலாம்.





இது பிறவுணிங் 50 கனரக இயந்திரத் துப்பாக்கி. விமான எதிர்ப்பு துப்பாக்கியாகவும் பயன்படும். இதனை ஜீப் போன்ற வாகனங்களில் பொருத்தியும் இயக்கலாம். தரைச் சண்டையின்போது தரையில் வைத்தும் இயக்கலாம். பெரும்பாலும் தரைச் சண்டைக்கே இவை உபயோகம். இதன் தலையில் உள்ள கருவி லேசர் கதிர் மூலம் இயங்குகிறது. இதன் ஊடாக தூரத்தை கணிப்பிட்டு தாக்கமுடியும். புலிகளும், அரச துருப்புக்களும் இதனை விமான எதிர்ப்புக்கும் பயன்படுத்தி வருகின்றனர்.



ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு (தரையில்) வேகமாகச் சென்று இலக்கினைத் தாக்கவல்ல லான்ஸ் ஏவுகணை இதுவாகும். இது ஃபிரான்ஸ் படைகளால் வளைகுடாப் போரில் பயன்படுத்தப்பட்டது.

## அதிரடி அப்பாத்துரை



**வாக்காளர்கள்தான்** வேட்பாளர்களுக்கு வாக்குப்போடுவது வழக்கம். புத்தளம் சாஹிரா கல்லூரி சாவடியில் தலை கீழாக நடந்ததாம். அதிகாரம் உள்ள அணி வேட்பாளர் தானே முன்னின்று வாக்குச்சீட்டுக்களை அள்ளிப் போட்டாராம். 'ஒரு வேட்பாளர் வாக்களித்தால், அது ஆயிரம் பேர் வாக்களித்த மாதிரி!'

**தலைநகர தூதரக** விருந்து ஒன்றில் வாக்குச் சீட்டுகளை ஒருவர் விநியோகித்தாராம். அவர் சுதந்திர ஊடக அமைப்பைச் சேர்ந்தவராம். "உமக்கு எப்படி கிடைத்தது?" என்று கேட்கப்பட்டபோது, "ரவுடிகள் தந்தனர். கள்ள வாக்குப் போடத் தந்ததை ஞாபகச் சின்னமாக வைத்திருக்கிறேன்!" என்றாராம். தூதரகத்தினரும் நகைத்தனராம். தூதரக வட்டாரத்திற்கும் மோசடியை ஆதாரமாக தெரியப்படுத்தத்தான் அங்கு வாக்குச் சீட்டோடு போயிருக்கிறார்.

**கிழக்கின் தனித்துவ** கட்சிக்கு தேர்தல் முடிவுகள் அதிர்ச்சிதானாம். அதனால்தான் நிலவர்ணத்தார் குறுக்காலே ஓடியதை கோடிட்டுக் காட்டியிருக்கிறார் தலைவர். ஆனாலும் அதிகார சக்தியானவரை பாதுகாக்கும் விதமாகவும் அபிப்பிராயம் கூறியிருக்கிறார்.

**வெளிநாட்டு வாசம்** முடிந்து வந்தவருக்கு எப்பதவியும் தரும் யோசனை அதிகாரத்தரப்பாருக்கு இல்லையாம். அதனை திட்டவட்டமாக கூறிவிட்டனராம். அப்படியானால் இனிமேல் பின்வருமாறு அறிக்கை விடலாம்: "நாம் பதவியை நாடவில்லை. சில பத்திரிகைகள் பொறுப்பற்ற விதத்தில் பரப்பிய வதந்திதான் அது." சீச்சீ இந்தப் பழம் புளிக்கும் என்ட கதை தெரியும்தானே?

**பச்சைக் கட்சியின்** வெகுஜனப் பிரதிநிதியும், முன்னாள் அமைச்சருமான அஸ்வர் தேர்தல் கால சம்பவங்களை சுவையாக எழுதி சகல பத்திரிகைகளுக்கும் ஃபக்ஸ் பண்ணியிருந்தார். ஒரே ஒரு குறை. அவரது 'ரப்பர் ஸ்டாம்பில், தனிச் சிங்களம் மட்டும்தான். தமிழ் பேசும் அவர் தமிழை மறக்கலாமோ! இனியாவது கவனிப்பாரா?

**வவுனியாவில் வரிவிதிப்பதில்லை** என்று கழகம் முடிவு செய்துள்ளதை சனம் வரவேற்குதாம். "நியாயவிலைக் கடை போடப்போகிறோம்" என்றும் கழகம் கூறியுள்ளதாம். இதன் பின்னணியில் பல நோக்கம் உண்டு என்று ஏனைய இயக்கத்தினர் கூறுகினம். என்ன நோக்கமாக இருந்தாலும் வரி இல்லாமல் பொருள் கிடைத்தால் எமக்குப் போதும் என்று சொல்லுகினம் பொதுசனத்தார்.

**மணி ஓடர்** அனுப்ப வவுனியா தபாலகத்தில் சீருடையினர் குவிகின்றனர். அதனால் சாதாரண மக்கள் முத்திரை வாங்கவும் காத்திருந்து நித்திரை தூங்குகினம். கொஞ்சம் கூடுதலாக ஆட்களைப் போட்டால் சட்டுப்புட்டென்று கருமம் ஆற்றலாம். தபாலக அதிகாரி விரும்பவில்லையாம். குறைந்த ஊழியர்களுடன் பணியாற்றி இலாபம் காட்டினால் பதவி உயர்வுகள் உண்டாம்!

**தொல்லை தவிர்ப்புக் குழு** இருப்பதால் தலைநகரில் கைதுகள் குறைவு என்று சம்பந்தமானவர் கூறியவரல்லோ? வண்டி வண்டியாக கடந்த வாரம் அள்ளப்பட்டபோது அவர் எங்கிருந்தவர்? தினமும் தொகையாக பிடிப்பது நடக்காது. இடையில் ஓய்வு விட்டுத்தானே பிடிப்பினம். ஓய்வு விடப்பட்டபோது, அது தம்மால் விளைந்த சாதனை என்று டமில் கட்சிகள் டமாரம் அடிக்க வேண்டியதுதான்.

**தேர்தல் வன்முறை** பற்றி கருத்துக் கேட்டால், வடக்கு-கிழக்கு மாகாண சபையிலும் மோசடிகள் நடந்தது என்று பேட்டி கொடுத்து கலக்கியிருக்கிறார் சங்கதியார். இதைவிட அபிப்பிராயமே கூறாமல் இருந்திருக்கலாமல்லோ?

**தமிழ்க் கட்சிகள் சில ஆட்கள்** திரட்டுவதில் இறங்கியுள்ளனவாம். வவுனியாவிலும், மட்டக்களப்பிலும் தீவிர திரட்டல் நடக்குதாம். அடுத்த தேர்தலுக்கு தோரணம் கட்ட, போஸ்டர் ஒட்ட ஆட்கள் பிடிக்கினமோ? என்று சனம் குசுகுசுக்குதுகள்.

இவ்வாரப் பொன்மொழி:

"நீ இறக்கும்போது
உனக்காக
அழக்கூடியவர்களை
உன் உயிருள்ளபோதே
தேடி வைத்துக்கொள்!"



படிப்பகம்

www.padippakam.com



## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

### அரசியல் தொடர்

அற்புதன் எழுதுவது

# ராஜீவ்-காசி ஆனந்தன் சந்திப்பு!

# தண்டனை வழங்க பிரபா முடிவு

வெளிநாடுகளில் உள்ள தமிழர்களிடம் அவசரகால நிதியுதவி கோரி 1991 இல் விடுதலைப் புலிகள் வேண்டுகோள் விடுத்தனர்.

அந்த வேண்டுகோளில் அப்போதிருந்த புலிகள் இயக்க பலம், பலவீனம் பற்றியும் குறிப்பிடப்பட்டிருந்தது.

அந்த வேண்டுகோளின் ஒரு பகுதி இது:

“தமிழீழ விடுதலைப் போராட்டம் தலைவர் பிரபாகரன் அவர்களால் தலைமை தாங்கி நடத்தப்பட்டு வருகிறது.

போராட்டத்தை வழிநடத்தும் தலைமையின் அரசியல், இராணுவக் கொள்கைகள், தீர்க்கதரிசனமான முடிவுகள் என்பவை காரணமாகவே தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை யாரும் நசுக்க முடியவில்லை.




இன்று தமிழர்களது பிரதிநிதிகளாக அவர்களது பிரச்சனைகளை தீர்க்கக்கூடியவர்களாக இருப்பவர்கள் புலிகளே.

இதனை தமிழ் மக்களும், சர்வதேச நாடுகளும், சர்வதேச ஸ்தாபனங்களும் அங்கீகரித்துள்ளன.

தற்போதைய நிலையை நாம் போராட்டத்தின் ஆரம்ப நிலை என்றோ அல்லது இறுதி நிலை என்றோ கூற முடியாது.

வடக்கு-கிழக்கின் பலபகுதிகளை புலிகள் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தாலும், வானத்தைக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவர முடியவில்லை.

வானத்தையும் பூரணமாக கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வானத்தை கட்டுப்படுத்துவதற்கான தளபாட வசதிகள் மேலும் தேவையாக உள்ளன.

50 கலிபர் துப்பாக்கிகளால் வானத்தை கட்டுப்படுத்தும் நிலை மாறி, தற்போது அதைவிட நவீன விமான எதிர்ப்பு துப்பாக்கிகளால் கட்டுப்பாடுகள் மேற்கொள்ள வேண்டிய கட்டம் வந்துள்ளது.

பொருத்தமான ஆயுத தளபாடங்களை பயன்படுத்துவதன்மூலமே ஆகாயத்தை கட்டுப்படுத்த முடியும்.

இன்று விடுதலைப் புலிகள் பூரணமாக ஆயுத பாணிகளாக்கப்பட்டுள்ளனர் என்றும் கூறமுடியாது.

இன்று புலிகள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சனை எதுவெனில், கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களை காப்பாற்றும் அதே வேளை, நிலப்பரப்புகளை மீட்க வேண்டியும் உள்ளது.

### மரபுப்படை

கெரில்லா அமைப்பாக இருந்த விடுதலைப் புலிகள் இன்று மரபு இராணுவ அமைப்பாக படிப்படியாக மாறிவருகின்றனர்.

விடுதலைப் புலிகளை அழிக்க முற்படும் அரசு, தனது இராணுவத்தை பலப்படுத்த பெருமளவான ஆயுத தளபாடங்களை கொள்வனவு செய்து வருகிறது.

இன்று அரசு வேண்டி நிற்கும் பாதுகாப்பு நிதிக்கு சகல சிங்கள மக்களும் உதவி வருகின்றனர். இதன் மூலம் பல கோடிகள் நிதியாக திரள்கிறது.

எதிர்காலத்தில் இதன் மூலம் பாரிய இராணுவ படையெடுப்புக்களை அரசு மேற்கொள்ளும். இந் நிலையில் தமிழ் மக்களும் தம்மைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சனை தீர்க்கப்படும் என்று நினைப்பது தவறு.

அரசு ஒருபோதுமே பேச்சுவார்த்தை மூலம் தமிழர்களுக்கான உரிமைகளை கொடுக்க விரும்பாது.

சுயநிர்ணய உரிமையும், ஆயுதங்களும் முக்கியமானவை. புலிகள் ஒருபோதும் ஆயுதங்களைக் கைவிடப்போவதில்லை. அரசும் சுயநிர்ணய உரிமையை ஏற்று இனப்பிரச்சனைக்கு தீர்வு காணப்போவதில்லை.

சர்வதேச சமூகத்தை ஏமாற்ற காலத்திற்கு காலம் பேச்சுவார்த்தை என்ற மாயையை அரசு உருவாக்கும். இதனால் எவ்வித பலனும் ஏற்படப் போவதில்லை.

இந்நிலையில் ஆயுதப் போராட்டத்தை வலுப்படுத்தி விடுதலையை வென்றெடுப்பதே ஒரே வழி.

வெளிநாடுகளில் வாழும் தமிழர்களது பூரண பங்களிப்பு எமது போராட்டத்திற்கு இன்றுவரை பூரணமாக கிட்டவில்லை. ஆயினும் கணிசமானளவு மக்களது ஆதரவு கிடைத்துள்ளது.

ஐந்து இலட்சம் மக்கள் வெளிநாடுகளில் வாழ்வதாக கூறப்படுகிறது. இவர்கள் மாதம் ஒருமுறை ஐந்து டொலரோ, அல்லது ஐந்து பவுணோ போர் நிதியாக வழங்கியிருந்தால் மிகுந்த பயன் கிட்டி இருக்கும்.

இதுவரை காலமும் குறிப்பிட்ட விகிதத்தினரே பங்களித்தனர். இப்போது புலிகள் மீண்டும் அவசரகால உதவி கோரி நிற்கின்றனர். அனைவரும் உதவ வேண்டும்.” மேற்கண்டவாறு புலிகள் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

### சோதிடர் கணிப்பு

கொழும்பில் பிரபலமான சோதிடர் ஒருவர் கூறியதாக ஒரு செய்தி பரவியிருந்தது.

1991 ஜூலை மாதம் பிரபாகரன் இலங்கை அரச படைகளால் கைது செய்யப்படுவார் என்பதே அச் செய்தி.

இதனை அடுத்து யாழ்ப்பாணத்தில் இருந்து பண்டிதர் கணபதிப்பிள்ளை என்னும் சோதிடர் திடுக்கிடும் ஆருடம் ஒன்றைக் கூறினார்.

‘இலங்கை ஜனாதிபதி பிரேமதாசா விரைவில் கொல்லப்படுவார். அதைத் தொடர்ந்து நாட்டில் பெரும் குழப்பம் ஏற்படும்.

அந்தக் குழப்பத்தில் இராணுவம் ஆட்சியை கைப்பற்றும் என்று அவர் கூறியிருந்தார்.

ரஞ்சன் விஜயரத்ன கொல்லப்படுவதற்கு சில நாட்களுக்கு முன்னர் இதே சோதிடர், ‘விரைவில் கொழும்பில் பிரபலமான அரசியல்வாதி ஒருவர், கொல்லப்படுவார்’ என்று கூறியிருந்தார்.

அதனால் அச் சோதிடர் பிரேமதாசா பற்றிக் கூறியதும் பலரது கவனத்தை ஈர்த்தது.

கொழும்புச் சோதிடர் கூறியது பலிக்காது விட்டாலும், யாழ்ப்பாணத்து சோதிடர் கூறியதில் பாதி பலித்தது.

இதே சோதிடர் இந்தியாவில் பிரபலமான அரசியல் தலைவர் ஒருவர் கொல்லப்படுவார் என்றும் கூறியிருந்ததுதான் அடுத்த ஆச்சரியம்.

இந்தியாவில் கொல்லப்படப்போகும் அந்த அரசியல்வாதி யார்? என்று அவர் கூறவில்லை.

### காசி ஆனந்தன் சந்திப்பு

இந்தியாவில் இருந்து வெளியாகும் ‘இந்து’ பத்திரிகை விடுதலைப் புலிகளை ஆதரித்ததோடு, இந்தியப் படையை இலங்கைக்கு அனுப்பியதற்கு எதிரான நிலைப்பாடும் எடுத்திருந்தது.

ராஜீவ் காந்தியுடன் ‘இந்து’ பத்திரிகை குடும்பத்தைச் சேர்ந்த மாலினி பார்த்தசாரதிக்கு நட்பு இருந்தது.

இந்தியாவில் பொதுத் தேர்தல்கள் நடைபெற ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன.

காங்கிரஸ் கட்சி மறுபடி ஆட்சியைப் பிடிக்கும் என்று கணிப்புக்கள் வெளியாகிக் கொண்டிருந்தன.

‘இந்து’ பத்திரிகையின் டில்லி பதிப்பின் துணையாசிரியராகவும் இருந்தவர் மாலினி பார்த்தசாரதி.

மாலினி பார்த்தசாரதிக்கு கவிஞர் காசி ஆனந்தனுடனும் நட்பு இருந்தது.

இந்திய, இலங்கை ஒப்பந்தம், இந்திய அமைதிப்படை நடவடிக்கைகள் போன்றவற்றால் ராஜீவ்மீது புலிகள் கடும் கோபம் கொண்டிருந்தனர்.

அந்தக் கோபத்தை தணித்து ராஜீவுக்கும், புலிகளுக்கும் இடையே நட்பை உருவாக்க நினைத்தார் மாலினி.

காசி ஆனந்தனிடம் “ராஜீவை சந்திக்க விரும்புகிறீர்களா?” என்று மாலினி கேட்டிருக்கிறார்.

காசி ஆனந்தனும் சம்மதித்திருக்கிறார். இச் சந்திப்பு தொடர்பாக லண்டனில் இருந்த கிட்டுவுக்கும் காசி அனந்தன் தகவல் கொடுத்திருக்கிறார்.

இந்திய அரசுடன் மீண்டும் நட்பை உருவாக்க வேண்டும் என்பது கிட்டுவின் விருப்பம்.

இந்தியா எந்தெந்த வகையில் ஈழப் போராட்டத்திற்கு உதவமுடியும் என்பதை விளக்கி கனடா உலகத் தமிழர் பத்திரிகையில் நீண்ட கட்டுரை ஒன்றை 1991இன் ஆரம்பத்தில் கிட்டு எழுதி இருந்தார்.

இந்தியாவை பகைத்துக் கொள்ளக் கூடாது என்பதே கிட்டுவின் எண்ணமாக இருந்தது.

ராஜீவ் காந்தியுடன் காசி ஆனந்தன் சந்திப்பதற்கு கிட்டுவும் பச்சைக் கொடி காட்டிவிட்டார்.

ராஜீவ்காந்தியும் காசி ஆனந்தனை சந்திப்பதற்கு மறுப்புக் கூறவில்லை.


1991 மார்ச் மாதம் ஐந்தாம் திகதி புதுடில்லியில் உள்ள ராஜீவ் காந்தி இல்லத்தில் காசி ஆனந்தன் ராஜீவ் காந்தியை சந்தித்தார்.

ராஜீவ் காந்தி மிக இயல்பாக உரையாடினார். நடந்ததை எல்லாம் மறந்து விடுமாறு காசி ஆனந்தனிடம் கூறினார்.

“பிரபாகரன் எப்படியிருக்கிறார்? எனது வாழ்த்துக்களை அவருக்குத் தெரிவியுங்கள்!” என்று காசி ஆனந்தனிடம் கூறினார் ராஜீவ்.

அந்தச் சந்திப்பை இரகசியமாக வைத்திருக்க இருதரப்பும் விரும்பியதால் ‘இந்து’ பத்திரிகையும் அத் தகவலை வெளியிடவில்லை.

சந்திப்பு முடிந்த பின்னர் அதுபற்றி கிட்டுவுக்கு தொலைபேசி மூலம் தெரிவித்தார் காசி ஆனந்தன்.




### கோபம் தீரவில்லை

இச்சந்திப்பு குறித்து பிரபாகரனுக்கு தகவல் தரப்பட்டது. ஆனால் பிரபா ராஜீவ் கூறியதுபோல நடந்ததை எல்லாம் கனவாக மறந்துவிட தயாரில்லை.

ராஜீவ் காந்தியின் உத்தரவுகளால் ஏற்பட்ட அழிவுகளையும், படுகொலைகளையும், பாலியல் வல்லுறவுகளையும், தமது உறுப்பினர்கள் பல நூறுபேர் பலியானதையும் மறந்துவிட பிரபாகரன் தயாரில்லை.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் கையொப்பம் போடுமாறு தன்னை நிர்ப்பந்தம் செய்ததையும், பணயக் கைதிபோன்று கறுப்பு பூனைகளின் பாதுகாப்பில் தன்னை வைத்திருந்ததையும் பிரபா மறக்கவில்லை.

‘இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி என் முதுகில் குத்திவிட்டார்.’ என்று வை.கோவிடம் அப்போதே கூறியிருந்தார் பிரபா.

ஹெலிகொப்டர் அனுப்பி தன்னை யாழ்ப்பாணத்தில் இருந்து அழைத்துவிட்டு, பின்னர் ஒப்பந்தத்தில் கையொப்பம் போடுமாறு எஜமான மனப்பாங்குடன் ராஜீவ் பேசிய பேச்சுக்கள் பிரபாகரனுக்கு சீற்றத்தை ஏற்படுத்தியிருந்தன.

ராஜீவ்காந்தி மறுபடி பிரதமராக வந்தால், பழைய ஒப்பந்தத்தை புதுப்பித்து உயிர் கொடுக்க முற்படுவார். வடக்கு-கிழக்கில் செத்துப்போன மாகாணசபைக்கு உயிர் கொடுக்க நினைப்பார்.

இலங்கை அரசுக்கும் புலிகளை ஒடுக்க ராஜீவ் உதவக்கூடும். எனவே ராஜீவ் மறுபடி பிரதமராகக் கூடாது என்று தீர்மானித்தார் பிரபாகரன்.

இந்தியப் படை வடக்கு-கிழக்கில் நிலை கொண்டு அத்துமீறல்களில் ஈடுபட்டிருந்த காலத்திலேயே புலிகளால் குறிக்கப்பட்டுவிட்டது இதுதான்:

“ராஜீவ் காந்திக்கு தண்டனை கொடுத்தாக வேண்டும்!”

### தீர்மானம்

மிக இரகசியமான திட்டம் என்பதால் திட்டத்தோடு தொடர்புடையவர்கள் தவிர வேறு யாருக்கும் விபரம் தெரியவில்லை.

புலிகளின் உளவுப் பிரிவுக்கு அப்போது பொறுப்பாக இருந்தவர் பொட்டம்மான்.

ராஜீவ் கொலைத் திட்டத்துக்கான தகவல்களை திரட்டுவது உட்பட பல பொறுப்புக்கள் உளவுப்பிரிவிடமே கையளிக்கப்பட்டன.

ஈ.பி.ஆர்.எல்.எ.ப். தலைவர் க.பத்மநாபா கொலைக்கு பொறுப்பாக இருந்த சிவராசனையே, ராஜீவ் கொலை நடவடிக்கைக்கும் பொறுப்பாக நியமிக்க முடிவு செய்யப்பட்டது.

‘ஆக்கிரமிப்பாளர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு நாம் தரும் தண்டனை இதுதான்’ என்பதை உணர்த்துவதும், இந்தியப் படை காலத்தில் பலியான மக்களதும், தமது உறுப்பினர்களதும் இழப்புக்களுக்கான தீர்ப்பாகவும் ராஜீவ் மீதான தாக்குதல் நடத்தப்படவேண்டும் என்ற முடிவை பொட்டம்மான் சிவராசனிடம் கூறினார்.

முதலில் சிவராசன் சென்று தாக்குதலுக்கான ஆயத்தங்களை செய்வது. தாக்குதலுக்கு செல்வோர் தங்குவதற்கான ஏற்பாடுகளை செய்வது என்று முடிவானது.

முதல் கட்ட ஏற்பாடுகளை செய்வதற்கு சிவராசன் படகு மூலம் தமிழ்நாட்டுக்கு சென்றார்.

ராஜீவ்காந்தியை புதுடில்லியில் வைத்து தீர்த்துக்கட்டவே திட்டமிடப்பட்டது.

புதுடில்லியில் அதற்கான ஏற்பாடுகள், ஒழுங்குகளை கவனிக்க இந்தியன் எயார் லைன் விமானம் மூலம் சென்னையில் இருந்து புதுடில்லிக்கு சென்றார் சிவராசன்.

ராஜீவ் காந்திக்கு குறி வைத்து அதற்கான திட்டங்களும் தயாராகிக் கொண்டிருந்ததை காசி ஆனந்தனோ, இலண்டனில் இருந்த கிட்டுவோ அறியவில்லை.

ராஜீவை காசி ஆனந்தன் சந்திக்கும் போது, அவரை தீர்த்துக்கட்டும் ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன.

புதுடில்லி சென்ற சிவராசன் ராஜீவ் காந்தியின் நடமாட்டங்களை கண்காணிக்க ஆரம்பித்தார்.

(தொடர்ந்து வரும்)

## “மாகாணசபை அரைகுறைத் தீர்வு”

உலகத் தமிழர் பத்திரிகையில் 1991 ஏப்ரலில் கிட்டு எழுதியதில் இருந்து ஒரு பகுதி:

### சமாதான முகமூடிக்குள் பிரேமதாசா

அண்மையில் கண்டியில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் ஜனாதிபதி பிரேமதாசா புலிகளை மாகாணசபைத் தேர்தலில் பங்குபற்றி ஜனநாயக நீரோட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்திருந்தார்.

இன்றும் பேச்சுவார்த்தைக்கான கதவுகள் திறந்து இருப்பதாகவும் புலிகள் பேச்சுவார்த்தைக்கு வருவதற்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவித்து இருந்தார்.

இவ்வழைப்புக்கள் கேட்பதற்கு மிக அழகாகத்தான் இருக்கிறது. இதன் உள் அர்த்தமோ புலிகளை சரணடையுமாறு அழைப்பு விடுப்பதாகவே காணப்படுகிறது.

மாகாணசபை எந்தவிதத்திலும் தமிழ் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்யவில்லை என்பதையும், இதே மாகாணசபைத் தீர்வை இந்தியா திணிக்க முற்பட்டபோது இந்திய படைகளுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் பெரிய மோதல் ஏற்பட்டதும் எமது வரலாற்றின் கசப்பான சம்பவங்கள்.

இந்த கசப்பான சம்பவத்தையும் அதனுடைய தாக்கத்தினால் எமது மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் உணர்வுகளையும், எமது மக்கள் இலகுவில் மறந்து விடமாட்டார்கள்.

### சமாதான அழைப்பும் இராணுவ அர்த்தமும்

மீண்டும் பிரேமதாசா மாகாணசபைத் தீர்வைப்பற்றியே பேசுகிறார். இவர் வேண்டும் என்ற ஒரு சமூக நிலை உருவாகுவதை தவிர்க்க விரும்புகின்றார்.

சமாதானத்தைப் பற்றியும் பேச்சவார்த்தை பற்றியும் பேசிக்கொண்டு இருக்கையிலே, தமிழ்ழப் பகுதியில் பாரிய இராணுவத் தாக்குதலும், பொருளாதாரத் தடையும் தீவிரப்படுத்தப்படுகிறது.

தமிழ்ப் பகுதிகளுக்கு மக்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களும் கொண்டு செல்ல தடைவிதிக்கப்பட்டுள்ளது.

அதேவேளையில் குண்டு வீச்சு தொடர்ந்துகொண்டே இருக்கிறது. தினம் தினம் மக்கள் இறந்துகொண்டும் இருக்கின்றனர்.

தமிழ்ழப் பகுதிகளில் இருக்கும் பாடசாலைகளும் குண்டுவீச்சில் தகர்க்கப்பட்டுள்ளன.

குண்டு வீச்சினால் காயம் அடையும் மக்களை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படுவதற்கு வாகனம் பயன்படுத்துவதற்கு எரிபொருள் கிடையாது.

வைத்தியசாலைகளிலும் மருந்து வகைகள் போதாத நிலை. குழந்தைகளுக்கு பாலுணவு கூட தடைசெய்யப்பட்டுள்ளது. இப்படியாக எம்மக்கள்மீது மிகப்பெரிய அளவில் இராணுவ அழுத்தத்தை பிரயோகித்துக்கொண்டு மறுபுறம் சமாதானத்திற்கு அழைப்பு.

மக்கள்மீது பிரயோகிக்கப்படும் அழுத்தங்கள் இரண்டு நோக்கங்களைக் கொண்டது.

1. மக்களை மிகவும் நெருக்கடி நிலைக்கு உள்ளாக்கி விரக்தி நிலைக்குத் தள்ளி, போராட்டத்திற்கு எதிராக மக்களை திருப்புவது. இது 'கெரில்லா எதிர்ப்பு யுத்த முறை'யில் கடைப்பிடிக்கப்படும் ஒரு பாணி.

2. நேரடியான இராணுவ நடவடிக்கையை போராளிகள் மீது பிரயோகிக்கும் அதேவேளை, மக்கள் மூலமாகவும் அழுத்தத்தை கொடுத்து போராளிகளை பணியவைப்பது.

இக்கட்டத்தில் மாகாணசபை போன்ற அரைகுறை தீர்வுகளை காட்டி அத்தீர்வுகளை போராளிகள் ஏற்றுக் கொள்ளுமாறு நிர்ப்பந்தங்களை ஏற்படுத்துகின்றனர். இப்படியான வழிமுறைகள் காலங்காலமாக அடக்குமுறையாளர்களால் கடைப்பிடிக்கப்பட்டுத்தான் வருகிறது.

ஆனாலும் விடுதலைக்காக போராடும் மக்களும் போராளிகளும் இத்தகைய அழுத்தங்களுக்கு விட்டுக்கொடுக்காது வெற்றியீட்டிக்கொண்டுதான் இருக்கின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

அலசுவது- இராஜதந்திரி

# அதிகாலையில் நடந்த அதிரடிப் பாய்ச்சல்
# வன்முறைக் களமான வடமேல் மாகாணம்

வடமேல் மாகாணசபை தேர்தல் எதிர்பார்த்தபடியே இறுதிநேர மாயாஜாலங்களுடன் அரங்கேறியிருக்கிறது.

இத் தேர்தல் அறிவிக்கப்பட்ட தினத்திலிருந்தே, தேர்தல் ஒழுங்காக நடக்கப்போவதில்லை என்பதற்கான அறிகுறிகள் தோன்றத் தொடங்கியிருந்தன.

பொலிஸ் அதிகாரிகள் பலர் இடமாற்றப்பட்டதுடன், அம் மாகாணசபை ஆளுநரது திடீர் ராஜினாமாவும் பலத்த சந்தேகத்தை தோற்றுவித்திருந்தது.

தேர்தல் நடைபெற்ற தினத்தன்று அந்த சந்தேகங்கள் உறுதி செய்யப்பட்டுவிட்டன.

இலங்கையின் தேர்தல் வரலாற்றில் ஒரே ஒரு மாகாணத்தில் இத்தனை வன்முறைகளும், மோசடிகளும் நடைபெற்றிருப்பது இதுவே முதற்தடவை என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இத் தேர்தல் வன்முறைகளை முடிமறைக்க முடியாத நிலையில்தான், ஜனாதிபதியே அவசர அவசரமாக அறிக்கையொன்றை வெளியிடவேண்டி ஏற்பட்டது.

தேர்தல் கண்காணிப்புக் குழுவும், பத்திரிகைகளும், எதிரணிகளும் தேர்தல் மோசடிகளைப் பற்றி புகார் கூறுவதற்கு முன்னரே, ஆட்சியாளர்கள் நல்ல பிள்ளைகளாக முந்திக்கொள்ள முயன்றனர்.

மறுவாக்குப் பதிவு நடத்துமாறு ஜனாதிபதி விடுத்த பணிப்புரையானது, தமது இமேஜை காப்பாற்றுவதற்கான முயற்சியாகவே விளங்கியிருந்தது.

'அரசியல்தீர்வை வழங்கியே தீருவோம்' என்று கூறியபடியே, இராணுவத் தீர்வுக்கான முனைப்பில் இருக்கின்றனர் தற்போதைய ஆட்சியாளர்.

அதுபோன்றே, 'நீதியான தேர்தலை நடத்தியே தீருவோம்' என்று கூறியபடியே மோசடிகளில் சாதனை படைத்துள்ள தேர்தல் ஒன்றை நடத்தி முடித்துள்ளனர்.

ஆட்சியில் இருப்போரின் பேச்சுக்களுக்கும், அவர்களது செயற்பாடுகளுக்கும் துளியளவு சம்பந்தமும் இருப்பதில்லை.

வடமேல் மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியினரும் வன்முறைகளில் ஈடுபட்டுள்ளனர்.

வாக்குப் பெட்டிகள் இரண்டை கடத்திச் சென்றதுடன், கள்ள வாக்குகள் போட்டும் இருக்கின்றனர்.

ஆயினும் ஆளும் தரப்பினரின் முறைகேடுகளுடன் ஒப்பிட்டால் எதிரணிகளது தேர்தல் முறைகேடுகள் இம்முறை மிகக் குறைந்தளவு விதமே நிகழ்ந்துள்ளன.

நாம் முன்பே சுட்டிக்காட்டியது போன்று, மாகாணசபைத் தேர்தல், உள்ளூராட்சித் தேர்தல் போன்றவற்றில் மத்திய ஆட்சியில் இருக்கும் கட்சிகளுக்கே சகல விதங்களிலும் தேர்தல் முறைகேடுகளுக்கு சாதகம் அதிகமாயிருக்கும்.

வாக்குச் சாவடிகளில் கடமையில் இருந்த அதிகாரிகள் சரியாகப் பணியாற்றவில்லை என்று தேர்தல் ஆணையாளரே புகார் கூறியுள்ளார். பல அதிகாரிகள் அதிகாரத்தில் உள்ள தரப்பிற்கு பணிந்து நடந்தே பழக்கப்பட்டவர்களாவர்.

முக்கிய பதவிகளில் உள்ள சிலரே வாக்குச் சாவடிகளுக்கு துப்பாக்கிகளோடு சென்றுள்ளனர். அவர்களைக் கண்டதும் பொலிசாரே செய்வதறியாது திகைத்து நின்றிருக்கின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சி பதவியில் இருந்தபோதும், பின்னர் பொ.ஜ.முன்னணி பதவிக்கு வந்தபின்னர் தென்னிலங்கையில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல்களிலும் தேர்தல் தினத்தன்று, வாக்களிப்பு முடிவடையும் மாலை நேரத்திலேயே கள்ளவாக்குகள் போடப்பட்டன.

வாக்குச் சாவடிகளை கைப்பற்றி, அங்கு வாக்களிக்கப்படாது இருக்கும் வாக்குச் சீட்டுக்களில் முத்திரை குத்தி வாக்குப் பெட்டிகள் நிரப்பப்படுவதே வழக்கமாகும்.

அதனால் இம்முறை காலையிலேயே சென்று வாக்களிக்குமாறும், சாவடிகளில் வாக்குச் சீட்டுக்கள் மீதியிருக்காதவகையில் அனைவரும் சென்று வாக்களிக்குமாறும் ஐ.தே.கட்சி வாக்காளர்களிடம் கோரிவந்தது.



அதனை அறிந்துகொண்ட மறு அணியினர் இம்முறை அதிகாலையிலேயே அதிரடிப் பாய்ச்சல் நடத்தி பல வாக்குச் சாவடிகளை கைப்பற்றியிருந்தனர்.

இதனால் வாக்களிக்கச் சென்றோர் ஏமாற்றத்தோடு திரும்பியதுடன், பல்லாயிரம் கள்ள வாக்குகள் போடப்படவும் ஏதுவாக இருந்துள்ளது.

இத்தகைய அப்பட்டமான மோசடிகளை முடிமறைப்பதென்பது, முழுப் பூசணிக்காயை ஒரு கோப்பை சோற்றுக்குள் மறைப்பதற்கு ஒப்பானதாகும்.

அவ்வாறு இருந்தும் இம் மோசடி தொடர்பாக எழுதிய பத்திரிகைகளையும், கட்சிச் சார்பற்ற தேர்தல் கண்காணிப்புக் குழுவையும் ஆட்சியாளர்கள் காரசாரமாக கண்டித்துள்ளனர். அவற்றுக்கு ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவானவை என்று முத்திரை குத்தியுமுள்ளனர்.

இதே பத்திரிகைகள்தான் பொ.ஜ.முன்னணியினரை பதவியில் அமர்த்துவதற்காக பாடுபட்டன என்பதை நான்கு வருடங்களுக்குள் அக் கட்சியினர் மறந்து போயுள்ளனர்.

ஜனாதிபதி சந்திரிக்காவின் தீவிர ஆதரவாளர்களாக முன்பிருந்த பலர்தான் தேர்தல் கண்காணிப்புக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர். அவர்கள்தான் ஆட்சியாளர்களை குற்றம் சாட்டியுள்ளதோடு, மறுதேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றும் கோரியுள்ளனர்.

ஜனாதிபதி சந்திரிக்கா அவர்கள் நினைத்தால், மறு வாக்குப்பதிவு ஒன்றை அங்கு நடத்த முடியும். ஆனால், மறுதேர்தலை நடத்தினால், முடிவுகளை தமக்கு சாதகமாக மாற்ற முடியாது என்பதை ஆட்சியாளர்கள் நன்கறிவார்கள்.

எனவேதான் 212 வாக்குச் சாவடிகளில் மட்டுமே மறுதேர்தல் நடத்துவதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது. இங்கு முடிவுகள் பாதகமாக வந்தாலும் ஏற்கனவே பெறப்பட்ட வெற்றியை பாதிக்கப்போவதில்லை.

மொத்தமாக ஆயிரத்தி நூற்றி அறுபது வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றில் பெரும்பாலான சாவடிகளில் மோசடிகள் நடந்துள்ளன. எனினும் 212 வாக்குச் சாவடிகளில் மட்டுமே மறு வாக்குப் பதிவு நடைபெற முடிவானது.

212 சாவடிகளிலும் மொத்தம் 49 ஆயிரம் வாக்குகள் செல்லுபடியற்றதாகியுள்ளன.

நடைபெற்ற தேர்தல் முழுமையாக செல்லுபடியற்றது என்று அறிவித்து, மறு தேர்தல் நடத்துவதற்கு தனக்கு அதிகாரமில்லை என்று தேர்தல் ஆணையாளர் கூறியுள்ளார்.

எனினும், தேர்தல் மோசடி நடைபெற்ற சூட்டோடு சூடாக, தேர்தல் செல்லுபடியற்றது என்று தேர்தல் ஆணையாளர் பிரகடனப்படுத்திருப்பாரேயானால், ஆட்சியாளருக்கு பேரிடியாகவே அமைந்திருக்கும்.

எனினும் தேர்தல் ஆணையாளரும் இன்றைய ஆட்சியினரால் பதவி உயர்த்தப்பட்டவர் என்பதால், ஒரு வரம்புக்கு அப்பாற்பட்டு செயற்படும் உத்வேகம் கொள்ளமாட்டார்.

ஆட்சியாளருடன் முரண்படாத வகையிலும், அதேசமயம் தன்மீது எதிரணிகள் அவ நம்பிக்கை தெரிவிக்காதவகையிலுமே தேர்தல் ஆணையாளர் இம்முறை செயற்பட்டுள்ளார்.

தேர்தல் மோசடிகள் நடைபெற்ற சாவடிகளில் மறுவாக்குப் பதிவு நடத்துமாறு தேர்தல் ஆணையாளருக்கு ஜனாதிபதி பணித்திருந்தார்.



மறுதேர்தல் நடத்துமாறு ஆர்ப்பாட்டம்

மறு தேர்தல் அவசியமில்லை, சில சாவடிகளில் மட்டும் மறு வாக்குப் பதிவு நடத்தினால் போதுமானது என்று சூசகமாக தெரிவிப்பது போன்றும் ஜனாதிபதியின் பணிப்புரை விளங்கியிருந்தது.

எனினும் அரச தகவல் தொடர்பு சாதனங்களும், முஸ்லிம் காங்கிரஸ்போன்ற கட்சிகளும் அப்பணிப்புரையை நீதியான தேர்தலை நடத்துவதில் ஜனாதிபதியின் அக்கறை என்று அதனை சித்தரித்ததையும் அவதானிக்க முடிந்தது.

குறிப்பிட்ட சில வாக்குச் சாவடிகளில் மட்டும் மறுவாக்குப் பதிவு நடப்பது பொதுஜன முன்னணியினருக்கே பயனுடையதாகும்.

பெரும்பாலான சாவடிகளில் நீதியான முறையில் தேர்தல் நடைபெற்றுள்ளது. எங்கோ சில சாவடிகளில் மட்டுமே மோசடிகள் நடந்துள்ளன என்று உலகை நம்பவைக்கவும், தமது வெற்றியை நியாயப்படுத்தவும் ஆட்சியாளருக்கு சாதகமாக இருக்கும்.

எனவே, குறிப்பிட்ட 212 சாவடிகளில் மட்டுமே மறுவாக்குப் பதிவு என்பது ஒட்டுமொத்தமான தேர்தல் மோசடிகளுக்கு வெள்ளையடிக்கும் முயற்சி போன்றதேயாகும்.

எனினும் இம்முயற்சிகள் பயனளிக்கப்போவதில்லை.

உள்நாட்டில் மட்டுமல்லாமல், உலகளாவிய ரீதியிலும், வடமேல் மாகாணசபைத் தேர்தல் முறைகேடானது என்ற பொது அபிப்பிராயமே மேலோங்கியுள்ளது.

வெளிநாட்டு செய்தி நிறுவனங்கள் மட்டுமன்றி, இங்குள்ள வெளிநாட்டு தூதரக இராஜதந்திரிகளும் உன்னிப்பாக அவதானித்து துல்லியமான தகவல்களை பெற்றுள்ளனர்.

சந்திரிக்கா அரசின் நம்பிக்கையான நட்பு நாடான அமெரிக்காவின் தூதரக வட்டாரங்களும் தேர்தல் முறைகேடுகள் குறித்து பகிரங்கமாகவே கவலை தெரிவித்திருக்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

யாழ் குடாநாட்டில் காணாமல் போனோர் விவகாரம், தமிழர்கள் வரைமுறையற்ற முறையில் கைதாகும் விவகாரங்கள் போன்றவற்றாலும், யுத்த பகுதிகளில் மனித உரிமை மீறல்களாலும் ஏற்கனவே சர்வதேச அரங்கில் ஆட்சியாளரது செல்வாக்கு சரிந்திருக்கிறது.

தற்போது தென்னிலங்கையில் அரசியல் ஜனநாயக உரிமைகளுக்கும் ஆட்சியாளர்களால் உத்தரவாதம் வழங்க முடியவில்லை என்பது வெளிப்படையாகியுள்ளது.

ஐ.தே.கட்சிக்கால வன்முறை கலாசாரத்தை வெறுத்த மக்களே உள்நாட்டிலும் ஜனாதிபதி சந்திரிக்காவை அமோகமாக ஆதரித்து நின்றனர். வடமேல் மாகாண சபைத் தேர்தலின் பின்னர் ஐ.தே.கட்சி அன்று எட்டடி பாய்ந்ததால், இன்று பொ.ஜ.மு. பதினாறடி பாய்ந்துவிட்டது என்ற அபிப்பிராயமே ஏற்பட்டுள்ளது.

தவிர்க்க முடியாத நிலையில் தமக்கு முன்பிருந்த ஆட்சியாளர்கள் போன்றே பேரினவாதிகளுடன் இன்றைய ஆட்சியாளரும் சமரசம் ஏற்படுத்திக் கொண்டனர்.

தற்போது, முன்னைய ஆட்சியாளர்கள் போன்ற அரசியல் வன்முறைகளையும் நம்பத் தொடங்கியுள்ளனர்.

ஐ.தே.கட்சிக்கு மாற்றாக பொ.ஜ.முன்னணியை ஆதரிப்பதற்கு முன்வைக்கப்பட்ட காரணங்கள் யாவும் தற்போது இல்லாதொழிந்துள்ளன.

எனவே, பொதுஜன முன்னணியிடம் எதிர்பார்ப்புகளை வைத்திருந்த சக்திகள், தற்போது தூரவிலகி வருகின்றன. அவற்றுக்கும் பொது ஜன முன்னணியினருக்கும் இடையில் முரண்பாடுகள் தோன்ற ஆரம்பித்துள்ளன.

தேர்தல் கண்காணிப்புக் குழுவின் அறிக்கையை ஒரு பக்கச் சார்பானது, ஐ.தே.கட்சிக்கு ஆதரவானது என்று ஆளும் தரப்பின முக்கிய அமைச்சர்களே கூறியிருப்பதும் அந்த முரண்பாட்டின் வெளிப்பாடேயாகும்.

அரசியல் தீர்வு விடயத்திலாகட்டும், தென்னிலங்கையின் அரசியல் ஜனநாயக, அரங்கிலாகட்டும், தாம் இனிப்பாகப் பேசும் கருத்துக்களுக்கு முற்றும் மாறாகவே நடந்துகொள்ளும் நிர்ப்பந்தம் ஆட்சியாளருக்கு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் வடக்கு-கிழக்கு மாகாணசபை தவிர்ந்த ஏனைய மாகாண சபை தேர்தல்களை அரசு நடத்தியாக வேண்டும்.

இவற்றில் தோல்வி கண்டால் வடமேல் மாகாண சபைத் தேர்தலில் முறைகேடுகளே வெற்றியை தீர்மானித்தன என்பது உறுதியாகிவிடும்.

எனவே, அத் தேர்தல்களிலும் தமது ஆள், அம்பு, சேனைகளை வித்தை காட்டுவதை தடுக்க முடியாத நிலையே பொ.ஜ.முன்னணிக்கு ஏற்படக்கூடும்.

ஒரு பொய் கூறினால், அதனை மறைக்க ஒன்பது பொய் கூறவேண்டியிருக்கும். ஒரு தவறு செய்தாலும் அதே போல பல தவறுகளை செய்து முதல் தவறை முடவேண்டியிருக்கும். இந்நிலைதான் அரசியல் கட்சிகளுக்கும் ஏற்படுகிறது.

இன்னொரு [illegible] உற்று நோக்க வேண்டும். [illegible] தனது முன்னைய [illegible] உள்நாட்டில் [illegible].

பொதுஜன முன்னணி [illegible] வடக்கு-கிழக்கில் [illegible] நடத்துவதை பேரினவாத கண்ணோட்டத்துடன் நோக்கி, குதூகலிக்கும் சக்திகள் மட்டுமே இன்று பொதுஜன முன்னணிக்கு ஆதரவு சக்திகளாக மாறியுள்ளன.

எனவே, இத்தகைய சக்திகளை தக்கவைத்துக் கொள்ளும்வகையில்தான், பொ.ஜ.முன்னணி ஆட்சியாளர்களது அடுத்த நகர்வுகளும் அமையப்போகின்றன.

யுத்தத்தை மேலும் தீவிரப்படுத்த அச் சக்திகளை மகிழ்ச்சிப்படுத்தியாக வேண்டியிருக்கும்.

தற்போது பொ.ஜ.முன்னணி ஆட்சியாளர்களுக்கு ஏற்பட்டுவரும் நற்பெயர் வீழ்ச்சியானது, விடுதலைப் புலிகளுக்கு [illegible].

ஒரு காலத்தில் ஜனாதிபதி சந்திரிக்காவும் அவரது அரசாங்கமும் கூறுவதை மறுபேச்சின்றி நம்பிய வெளியுலகம், தற்போது அவர்களது கூற்றுக்களை சந்தேகக் கண்கொண்டு நோக்க ஆரம்பித்துள்ளது.

எதிரணியுடன் ஆளும் தரப்பு வெளிப்படையான பகைமைப் போக்கை காண்பித்துள்ளது. இந் நிலையில் அரசியல் தீர்வுக்கு எதிர்க்கட்சி ஒத்துழைக்கவில்லை என்று செய்யப்படும் பிரசாரமும், இழுத்தடிப்புக்கான நியாயப்படுத்தலும் வலுவிழந்து போயுள்ளன.

தமது பிரச்சனைக்கு மூன்றாம் தரப்பொன்றின் மத்தியஸ்தத்தை நாடி நிற்கும் தமிழ் பேசும் தரப்புக்கு இந்நிலை சாதகமானதேயாகும்.

## சந்திக்கு வராத சங்கதிகள்

நக்கீரன்

யாழ் நகரின் மையப்பகுதியில் புளொட் அமைப்பின் யாழ் மாவட்ட இராணுவப் பொறுப்பாளர் சதீஸ் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

'விடுதலைப் புலிகள் யாழ் கொட்டடிப் பகுதியில் நடமாடுகின்றனர். அவர்கள் பற்றிய தகவல்கள் கூறவேண்டும் என்று ஒருவர் வந்து சதீஸை அழைத்திருக்கிறார்.

அழைத்தவரை சதீசுக்கு நன்கு தெரியும். குருநகரில் இருந்தவர். புளொட்டுடனும் சதீசுடனும் நீண்டநாள் யாழில் பழகியவர்.

புலிகள் பற்றிய தகவல் என்றால் அலுவலகத்தில் வைத்துப் பேசாது வெளியே தேநீர் விடுதியில் போய் பேசுவதுதான் சதீசின் வழக்கம்.

அவருடன் அன்றும் அதேபோல புறப்பட்டுச் சென்றுள்ளார். சதீசுடன் இன்னொரு புளொட் உறுப்பினரும் கூடச் சென்றார்.

குறிப்பிட்ட தேநீர் விடுதியை சமீபித்ததும், அதன் அருகில் காத்திருந்த புலிகள் சதீசையும், அவருடன் வந்தவரையும் சுட்டுள்ளனர். சதீஸ் பலியானார். இதன் பின்னர் சதீசை அழைத்துச்சென்ற நபரைத் தேடி அவர் குருநகரில் தங்கியிருந்த வீட்டை புளொட் உறுப்பினர்கள் முற்றுகையிட்டனர்.

அந்த நபர் எங்கும் இல்லை. முன்கூட்டியே திட்டமிட்டபடி நழுவிப் போய்விட்டார்.

யாழ் நகரில் ஏற்கனவே கரும்புலித் தாக்குதல் இடம்பெற்றது. இப்போது பிஸ்டல் குழுவினரின் தாக்குதல் நடந்திருக்கிறது.

—★—

வவுனியாவில் புளொட், படையினர் இடையே முறுகல் நிலை ஏற்பட்டது. முறுகலுக்கு காரணம் ஒரு நாட்காட்டியும், வாழ்த்து மடலும்.





புதிய ஆண்டை முன்னிட்டு புளொட் வெளியிட்ட நாட்காட்டியிலும், வாழ்த்து மடலிலும் காணப்பட்ட படம்தான் இராணுவத்தினரின் சீற்றத்தைக் கிளறியது.

இலங்கையில் சிங்கமும், புலியும் மோதுவதால் இரத்தம் சிந்தப்படுகிறது என்று சித்தரிக்கும் விதமாக படம் கீறியிருந்தனர்.

புலி மேலேயும், சிங்கம் கீழேயும் இருப்பது போலவும் சிங்கத்தின் கழுத்தில் புலி கடிப்பது போலவும் கீறப்பட்டதால் புலிக்கு வெற்றி என்று அர்த்தப்படுவதாக நினைத்த படையினர் கொதித்தனர். வவுனியாவில் விநியோகிக்கப்பட்ட நாட்காட்டிகள் பறிமுதல் செய்யப்பட்டன.

அந்த நாட்காட்டியை வைத்திருந்த பொது மக்கள் சிலரும் சாத்துப்படி வாங்கினார்கள்.

கொழும்பில் இருந்து விமானப் படை விமானத்தில் யாழ்ப்பாணத்திற்கு தமது நாட்காட்டிகளை புளொட் அனுப்பியிருந்தது.

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் புளொட் என்றதும், தமக்கு உதவும் அமைப்பு என்ற நம்பிக்கையில் பொதியைச் சோதனையிடவில்லை.

## சர்ச்சைக்குரிய நாட்காட்டி

பலாலியில் பொதியை உடைத்திருக்கிறார்கள். நாட்காட்டிகளைப் பார்த்ததும் புலிகளது நாட்காட்டிகள் என்று பெரும் சலசலப்பே தோன்றிவிட்டது.

உடனடியாக விசாரணைகள் ஆரம்பமாகின. புளொட்டின் பொதி என்று தெரிந்த பின்னரும் சந்தேகம் தீரவில்லை.

சோதனையிடாது பொதியை அனுமதித்த கட்டுநாயக்கா விமானநிலைய உத்தியோகத்தர்களுக்கும் மேலதிகாரிகளால் அர்ச்சனை நடந்ததாம்.

காவலரணில் நின்ற சிப்பாய் ஒருவர் புளொட்டின் நாட்காட்டியை பார்க்க விரும்பினார். தனக்கு பழக்கமான இளைஞர் ஒருவரிடம் நாட்காட்டி ஒன்று புளொட்டிடம் வாங்கிவருமாறு அனுப்பி வைத்தார்.

அந்த இளைஞருக்கு கெட்ட நேரம். நாட்காட்டியை வாங்கிச் சென்று கொண்டிருக்கையில், இன்னொரு சிப்பாயிடம் மாட்டினார். இந்த நாட்காட்டியை ஏன் வைத்திருக்கிறாய்? என்று சிப்பாய் நாலு சாத்து சாத்தினாராம்.



படிப்பகம்

www.padippakam.com

# உண்மைத் தொடர்

## அதிர் இடி 47

**கடந்தவாரம்**

**வெளிநாட்டமைச்சர் பகாயாவை தன் ஆசைக்கு இணங்கவைக்க அமீனால் முடியவில்லை. அவள் நாட்டை விட்டு தப்பிச் செல்கிறாள். பாலியல் ஒழுக்கக்கேட்டால் அவளை பதவி நீக்கம் செய்ததாக அறிக்கை விடுக்கிறான் அமீன்.**

இனி....

# இடி அமீன்

கலாசார அமைச்சர் ஹென்றி சியம்பா கூறிய யோசனை அமீனுக்குப் பிடித்திருந்தது.

"இராணுவத்தினருக்கும், மக்களுக்கும் இடையே நல்லுறவு கெட்டு வருகிறது. இதனைச் சீர்படுத்தியாக வேண்டும்" என்றார் சியம்பா.

**"சீர் படுத்தலாம்; என்ன யோசனை வைத்திருக்கிறீர்?"** அமீன் கேட்டான்.

"இராணுவத்தினருக்கும் சிவிலியன்களுக்கும் இடையே விளையாட்டுப் போட்டிகள் நடத்தலாம்."

சியம்பாக கூற, அமீன் தன் கண்களை சிமிட்டிக்கொண்டு, **"அதுதான் அடிக்கடி விளையாட்டுக் காண்பிக்கிறார்களே!"** என்று நகைத்தவன், **"சும்மா தமாஷ் பண்ணினேன். என்ன விளையாட்டு விளையாடலாம் என்கிறீர்?"**

"உதைபந்தாட்டம்..." என்றார் சியம்பா.

**"நல்ல யோசனை"** என்று ஆமோதித்த அமீன், **"இராணுவத்திற்குள் பல உதைப்பந்தாட அணிகள் இருக்கின்றன. எனவே உமது யோசனையை உடனடியாக அமுல்படுத்தலாம்....!"** என்று அனுமதியும் வழங்கினான்.

உகண்டா மக்கள் உதைபந்தாட்டத்தில் மிகவும் ஈடுபாடு கொண்டவர்கள். உகண்டாவில் அடிக்கடி உதைபந்தாட்டப் போட்டிகள் நடப்பதுண்டு.

இராணுவ உதைபந்தாட்ட அணிக்கும், பொதுமக்கள் அணியான 'எக்ஸ்பிறஸ்' அணிக்கும் இடையே முதலாவது போட்டி நடைபெற்றது.

ஏராளமான மக்கள் போட்டிகளைக் கண்டுகளிக்கத் திரண்டு வந்திருந்தனர். உகண்டாவின் உதைப்பந்தாட்ட அணிகளுக்குள் சிறப்பானது 'எக்ஸ்பிறஸ்' அணி.

போட்டி ஆரம்பமானதில் இருந்தே 'எக்ஸ்பிறஸ்' அணிக்கு ஆதரவாகவே இரசிகர்கள் ஆரவாரம் செய்தனர்.

ஆட்டத்தின் முதல் பாதியில் 'எக்ஸ்பிறஸ்' அணி திறமையாக ஆடி பல கோல்களைப் போட்டது.

போட்டியின் இடைவேளையில் இராணுவ அணியினர் கூடிப் பேசினர். 'எக்ஸ்பிறஸ்' அணிக்காரர்களை உதைபந்தாட்டத்தில் வெல்ல முடியாவிட்டாலும், உதை கொடுத்து வெல்ல வேண்டும் என்று முடிவு செய்தனர்.

விளையாட்டின் இரண்டாவது பாதி ஆரம்பமானபோது இராணுவ அணியினர் தாறுமாறாக விளையாட ஆரம்பித்தனர்.

'எக்ஸ்பிறஸ்' அணியினரை முட்டிமோதினர் நடுவர் தடுத்தபோது அவருக்கும் உதைவிழுந்தது.

மைதானத்தில் இராணுவ அணி முறைகேடாக ஆட ஆரம்பித்ததும், அரங்கில் இருந்த மக்கள், இராணுவ அணிக்கு எதிராகக் கூச்சல் போடத்தொடங்கிவிட்டனர்.

ஆட்டத்தைப் பார்வையிட வந்த இராணுவத்தினர் மக்களைத் தாக்க ஆரம்பித்தனர். மக்கள் நாலா புறமும் சிதறி ஓடினார்கள்.

மைதானத்தில் தம்மைத் தாக்கிய இராணுவ அணியை 'எக்ஸ்பிறஸ்' அணியினர் திருப்பித் தாக்கினார்கள். இதனால் இராணுவ அணியைச் சேர்ந்த பலர் காயமடைந்தனர்.

மக்கள்மீது இராணுவம் நடத்திய தாக்குதலால் பலர் படுகாயமடைந்து மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

அமீனுக்கு தகவல் போனது. சியம்பாவே தொலைபேசியில் தகவல் கூறினார்.

இராணுவத்தினர்மீது தான் தவறு என்று சியம்பா கூறத்தொடங்கு முன்னரே அமீனின் குரல் கோபத்துடன் ஒலித்தது.

**"இராணுவ அணி தோற்றால் இராணுவமே தோற்றமாதிரித்தானே? அந்த 'எக்ஸ்பிறஸ்' குழுவுக்கு என்ன துணிச்சல்? நீர் ஃபோனை வையும், நான் அவர்களை கவனித்துக் கொள்கிறேன்!"** என்றவன், உடனடியாக இராணுவ அதிகாரிகளுக்கு உத்தரவுகளைப் பிறப்பித்தான்.

அன்றே, இரவோடு இரவாக 'எக்ஸ்பிறஸ்' அணியினர் அனைவரும் கைது செய்யப்பட்டனர்.

கைது நடந்துகொண்டிருந்தபோதே உகண்டா வானொலி அறிவித்த செய்தியைக் கேட்டு உகண்டா மக்கள் வெறுப்புற்றனர்.

"எக்ஸ்பிறஸ்' உதைப்பந்தாட்ட அணி சட்டவிரோத அணியாக" கருதி தடை செய்யப்பட்டுள்ளது. விளையாட்டுப் போட்டியில் இராணுவ அணியினரைத் தாக்கி கலவரத்தை தூண்டியுள்ளது 'எக்ஸ்பிறஸ்' குழு. அந்நிய சக்திகளது தூண்டுதலே இதற்கான காரணம் என்று விசாரணைகளில் இருந்து தெரியவருகிறது. 'எக்ஸ்பிரஸ்' குழுவினர் நாட்டு நலனை முன்னிட்டு கைது செய்யப்பட்டுள்ளனர்."

இப்படியும் அப்பட்டமாகப் பொய் கூற முடியுமா? என்று உகண்டா மக்கள் மலைத்து நின்றனர்.

'எக்ஸ்பிறஸ்' குழுவில் எவ்வித தவறும் கிடையாது என்பது ஆட்டத்தை நேரில் கண்ட பல்லாயிரம் மக்கள் மூலம் நாடெங்கும் பரவியிருந்தது.

கைதான 'எக்ஸ்பிறஸ்' குழு உறுப்பினர்களை விடுதலை செய்யுமாறு கலாசார அமைச்சர் சியம்பா அமீனிடம் வேண்டுகோள் விடுத்தார்.

**"சியம்பா! இதனை வேறு யாராவது என்னிடம் கூறியிருந்தால் என்ன செய்திருப்பேன் என்பது எனக்கே தெரியாது. உம்மீதுள்ள மரியாதையால் விடுகிறேன். என்ன செய்ய வேண்டும் என்று எனக்கு எவரும் போதிக்க வேண்டியதில்லை. புரிந்ததா?"** என்றான்.

"புரிந்தது..." என்றார் சியம்பா உள்ளூர நடுக்கத்துடன்.

அத்தோடு நிறுத்தவில்லை. சியம்பா முனபாகவே பயங்கரமான உத்தரவையும் தொலைபேசியூடாகப் பிறப்பித்தான்:

**"'எக்ஸ்பிறஸ்' குழுவில் கைதான அனைவருக்கும் 'விசா' கொடுத்து அனுப்பிவிடுங்கள்!"** என்றான்.

'விசா' கொடுப்பது என்றால், கொலை செய்வது என்றுதான் அர்த்தம் என்பது சியம்பாவுக்கும் தெரியும்.



ஆட்களைத் தீர்த்துக்கட்டுமாறு கூறுவதற்கான சங்கேத வார்த்தைகளை அடிக்கடி மாற்றிக்கொள்ளுவான் அமீன்.

'எக்ஸ்பிறஸ்' குழுவுக்கு விசா கொடுக்குமாறு கூறிவிட்டு, சியம்பா பக்கம் திரும்பிய அமீன், விசித்திரமான உத்தரவொன்றைப் பிறப்பித்தான்.

**"சியம்பா! வாரத்தில் ஒரு தடவையாயினும் உதைபந்தாட்டப் போட்டிகள் நடைபெற ஏற்பாடு செய்யும். ஆனால் ஒரே ஒரு நிபந்தனை!"** என்ற அமீனை வினாக்குறியோடு ஏறிட்டார் சியம்பா.

**"போட்டிகளில் இராணுவ அணிதான் வெல்ல வேண்டும். அதற்கேற்ப போட்டிகளை ஒழுங்கு படுத்தும். அப்படி நடந்தால் சிப்பாய்கள் சினம் கொள்ளமாட்டார்கள். நல்லுறவும் வளரும்!"** என்றான் அமீன்.



மெடினா

உதைபந்தாட்டப் போட்டிகள் நடத்தும் யோசனையை முதலில் கூறியதற்காக தன்னைத் தானே நொந்துகொண்டார் சியம்பா.

இனிமேல் நல்ல யோசனை எதனையும் அமீனிடம் கூறுவதில்லை என்றும் தீர்மானித்தார்.

தன் யோசனை தனக்கே தொல்லையாக வந்துவிட்டதை நினைத்து வருந்தியபடி, அமீனின் உத்தரவை நிறைவேற்ற ஆரம்பித்தார்.

உதைபந்தாட்டத்தில் திறமை அற்ற குழுக்களாகத் தேடிப் பிடித்து இராணுவ அணியுடன் போட்டிகளுக்கு ஏற்பாடு செய்தார்.

புதிய உதைபந்தாட்ட கழகங்களும் பொது மக்களிடையே உருவாக்கப்பட்டன.

திறமையான உதைப்பந்தாட்டக் குழுக்கள் சிலவற்றுக்கு பணம் கொடுத்து, இராணுவ அணியுடன் விளையாடி தோற்கவைத்தார்.

சியம்பாவின் இந்த ஏற்பாடுகளை அறிந்த அமீன் அவரை அழைத்து பாராட்டினான்.

**"இராணுவ அணிதான் வெல்ல வேண்டும் என்று நான் கூறியதில் உமக்கு உடன்பாடு இல்லையானாலும், என் கட்டளையை நிறைவேற்றியிருக்கிறீர். அதற்காக உம்மைப் பாராட்டுகிறேன்!"** என்று கூறியவன், சிறிது தாமதித்துக் கேட்டான்; **"நான் ஏன் அவ்வாறு கூறினேன் தெரியுமா?"**

"தெரியாது!" என்றார் சியம்பா. தன் நோக்கத்தை சியம்பாவால் ஊகிக்க முடியவில்லை என்பது அமீனுக்கு திருப்தியாக இருந்தது.

அந்தத் திருப்தியோடு தன் கட்டளைக்கான காரணத்தை அவரிடம் கூறினான்:

**"எங்கள் இராணுவம் எந்த யுத்தத்திலும் இறங்கவில்லை. அதனால் வெற்றி பெறுவதற்காகச் சண்டையிடும் அவா மங்கிவருகிறது. விளையாட்டிலாவது வெற்றி பெற்றால்தான் தம்மால் வெற்றிகளைப் பெறமுடியும் என்ற தன்னம்பிக்கை நிலைக்கும். தோல்வி கண்டால் சோர்ந்துபோவார்கள். தோல்விகள் விரக்திகளுக்கு வித்துப்போட, இராணுவத்துக்குள் குழப்பமும் உருவாகும். இப்போது சொல்லும் என் நோக்கம் சரிதானே?"**

"ஆம்!" என்று பொய் சொன்னார். சியம்பா.

**"இராணுவத்தினரை எப்போதும் குஷியாக வைத்திருக்கவேண்டும். இல்லையென்றால் எங்கள் கதி அதோகதியாகிவிடும்"** என்று கூறி சிரித்தான் அமீன். மிகவும் கஷ்டப்பட்டு சியம்பாவும் சிரித்தார்.

மற்றுமொரு புதிய உத்தரவும் அமீனிடம் இருந்து வந்தது.

**"ஆபிரிக்காவின் இதயத் துடிப்புப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறீரா?"** என்று கேட்டான் அமீன்.

"ஆம், அது ஒரு நடனக் குழு!" என்றார் சியம்பா.

**"வெகு பிரபலமான குழு என்றும் கூறும்"** என்றான் அமீன்.

ஏன் அவ்வாறு அழுத்திக்கூறுகிறான் என்று சியம்பாவின் மனதில் எழுந்த கேள்விக்கு அமீனின் அடுத்த வார்த்தைகளில் பதில் கிடைத்தது.

**"அந்த நடனக் குழுவில் என் மனைவி மெடினாவும் இருக்கிறாள். அவள் நடனமாடுவதைப் பார்த்தால் நீரே பிரமித்துவிடுவீர்!"** என்றான்.

சியம்பா அவசரமாக; "கேள்விப் பட்டிருக்கிறேன். பிரமாதமாக நடனம் ஆடுவார் என்று."

சியம்பா கூறியதைக் கேட்டு புன்னகைத்த அமீன், **"அந்த நடனக் குழுவுக்கு நிதி ஒதுக்கீடு செய்து கொடுப்பது உமது பொறுப்பு. மேலும் அக் குழுவில் அழகான, துடிப்பான இளம் பெண்கள் சேர்க்கப்படவேண்டும். அப்போது தான் புது இரத்தம் பாய்ச்சப்பட்டதுபோன்று இருக்கும்!"** என்றான்.

அமீன் அவ்வாறு கூறும்போது 40 பெண்கள்தான் அக்குழுவில் இருந்தனர்.

நாடெங்கும் இருந்து மிகச் சிறந்த அழகிகளை பொறுக்கியெடுக்க அமீன் செய்த தந்திரம்தான் மேலும் 360 அழகிகளை புதிதாக சேர்க்கும் திட்டம்.

அமீன் ஜனாதிபதியாகு முன்பே உகண்டாவின் தேசிய நடனக்குழு ஒன்று இருந்தது.

அமீன் பதவிக்கு வந்த பின்னர் அக்குழுவுக்கு முக்கியத்துவம் இருக்கவில்லை.

'ஆபிரிக்காவின் இதயத்துடிப்பு' குழுவை உகண்டாவின் தேசிய நடனக்குழுவாக அறிவித்தார் கலாசார அமைச்சர் சியம்பா.

சியம்பா அவ்வாறு அறிவித்தது அமீனுக்கு மகிழ்ச்சியளித்தது.

தமது நடனக்குழுவுக்கு முக்கியத்துவம் அளித்ததுக்காக அமீனின் மனைவி மெடினாவும் மகிழ்ந்தாள்.

அவள் தானே சியம்பாவுக்கு ஃபோன் செய்தாள்.

**"உங்கள் உதவியை என்றும் மறக்கமாட்டேன். உங்களைப் பற்றி நிறைய அறிந்திருக்கிறேன். ஒருமுறை நேரில் வாருங்களேன். பேசலாம், பழகலாம்...!"** என்று களுக்கென்று சிரித்தாள் மெடினா.

## தருவது ரசிகன்

அந்தச் சிரிப்பின் அர்த்தம் என்னவென்று தெரிந்ததால் சியம்பாவுக்கு மரண பயம் பிடித்துக்கொண்டது.

அமீனுக்கு மட்டும் அவள் தன்னுடன் காமம் ததும்ப பேசியது தெரிந்தால், தன் கதி மட்டுமல்ல, அவள் கதியும் கந்தலாகிவிடும் என்று கலங்கிப்போன சியம்பாவுக்கு கைகள் நடுங்கின. நடுங்கும் கரங்களுடன், அவளுக்கு பதிலே சொல்லாமல் ரிசீவரை வைத்துவிட்டார்.

மறுபடி ஃபோன் அடித்தது. ஃபோனை பார்க்கவே சியம்பாவுக்குப் பயமாக இருந்தது.

மெடினாவின் உருவில் விதி விளையாடத் தொடங்கிவிட்டதோ என்று சந்தேகப்பட்டார்.

மெடினாவை ஒரே ஒரு தடவை கண்டிருக்கிறார் சியம்பா.

'அமீனும் பெண்களைத் தேடி அலைகிறான். அவன் மனைவியோ ஆண்களைத் தேடி அலைகிறாள். என்ன சட்டமடா இது'...? என்று சலித்துக் கொண்டார்.

அடுத்த பத்தாவது நிமிடத்தில் அமீனிடம் இருந்து வவந்தது ஃபோன்.

(இடி தொடரும்)

---

## வீடியோவில் பாப்பரசர்



கிறிஸ்தவர்களின் புனிதத் தந்தை பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் இசை வீடியோ ஒன்றில் தோன்றுகிறார்.

பாப்பரசரின் பிரார்த்தனைகள், பேருரைகள் அடங்கிய இந்த இசை வீடியோ 5 மொழிகளில் வெளியிடப்படவுள்ளது.

சோனி நிறுவனமும் வத்திக்கான் சிட்டி வானொலியும் சேர்ந்து உருவாக்கவுள்ள வீடியோ 'கொம்பாக்ட் டிஸ்க்' (சி.டி) வருகிற மார்ச் மாதத்தில் வெளியாகும். இதனை வத்திக்கான் வானொலி அறிவித்துள்ளது.

இலத்தீன், இத்தாலி, ஃபிரெஞ்சு, ஸ்பானிஷ் மற்றும் ஆங்கிலம் ஆகிய 5 மொழிகளில் இவை வெளியாக உள்ளன.

## அம்மணியின் வாக்குறுதிகள்



இஸ்ரேல் நாட்டில் விளம்பரப் படங்களில் தோன்றி அசத்தி வந்தவர் ரோஷன் புளும். அம்மணிக்கு 44 வயது என்று சொன்னால் நம்பமுடியாது. இளமையாகவும், சுறுசுறுப்பாகவும் இருக்கிறார். விளம்பரப் படங்களில் நடித்தே ஏராளமான ஜொள்ளர்களை பெற்றிருக்கிறார்.

அந்த ஜொள்ளர்களை நம்பி அம்மணி சமீபத்தில் புதுக்கட்சி ஆரம்பித்திருக்கிறார்.

'சமூக சீர்திருத்த நீதிக்கட்சி' என்பது கட்சியின் பெயர்.

எதிர்வரும் மேமாதம் 17ம் திகதி இஸ்ரேல் பாராளுமன்ற தேர்தல் நடைபெறவுள்ளது.

அங்குள்ள 120 தொகுதிகளில் எட்டுத் தொகுதிகளை இவரது கட்சி கைப்பற்றும் என்று இப்போதே ஆருடம் கூறப்படுகிறது.

தனது கட்சி சார்பாக அம்மணி கொடுத்துள்ள வாக்குறுதிகள் ஆண்களைக் கவருமா? என்பது கேள்விக்குறி.

பெண்கள் செயற்கை முறையில் குழந்தை பெற அனுமதி.

பெண்களை கைநீட்டி அடித்தால் தண்டனை.

விபச்சாரம் சட்டப்படியான தொழிலாக்கப்படும், என்பவைதான் அந்த வாக்குறுதிகள். பதவிக்குவந்தால் அம்மணி வாக்குறுதிகளை பறக்கவிடுவாரா தெரியவில்லை.

## டயானா மரணம்

### பரிசு 10 கோடி

இங்கிலாந்து இளவரசி டயானாவின் மரணத்திற்குக் காரணமான மர்ம காரின் சாரதியை பற்றி துப்புக் கொடுப்பவருக்கு 10 கோடி ரூபாய் சன்மானம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

டயானாவின் காதலர் டோடி அல்பயட்டின் தந்தையும், பிரபல கோடீஸ்வரருமான முஹமட் அல்பயட் அந்தப் பரிசுத் தொகையை அறிவித்துள்ளார்.

டயானாவின் கார் விபத்தில் சிக்கும் முன்பு ஒரு 'யூனோ பியட்' காருடன் மோதி இருப்பதாகவும், அந்த பியட் கார் அங்கிருந்து மின்னல் வேகத்தில் மறைந்து விட்டதாகவும் பொலிஸார் நடத்திய விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இதைத் தொடர்ந்து டயானாவின் மரணத்தில் சதித்திட்டம் மறைந்து இருப்பதாக முஹமட் அல் அல்பயட் கருதுகிறார்.



எனவே அந்தக் காரின் சாரதியைக் கண்டுபிடித்து விட்டால் துப்புத் துலங்கி விடும் என்பதற்காக இந்தப் பரிசுத் தொகையை வழங்க முன்வந்துள்ளார்.

## சிறை செல்வாரா ஜெமீமா?

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் இம்ரான் கானுக்கும் மனைவி ஜெமீமாவுக்கும் இடையே விரிசல் என்று செய்திகள் வந்தன. அத்தனையும் புரளிகள்.



ஆனால் ஜெமீமாமீது புகார்கள் கிளம்பியுள்ளன. புகாரை கிளப்பியிருப்பது பாகிஸ்தானின் சுங்க இலாகா. வழக்கும் பதிவு செய்துள்ளனர்.

பாகிஸ்தானின் புராதனப் பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ததாகவே வழக்கு போடப்பட்டுள்ளது.

குற்றவாளியாக நிரூபிக்கப்பட்டால் ஜெமீமா மூன்று வருடம் கம்பி எண்ண வேண்டியிருக்கும்.

தம்மை அரசியல் ரீதியாக பழிவாங்குவதற்கு இம்ரானின் மனைவியை குற்றவாளியாக்கப் பார்க்கிறார்கள். இம்ரானின் புகழைக் கெடுக்க ஜெமீமாவை குறிவைக்கிறார்கள் என்று இம்ரான்கானின் கட்சியினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

ஜெமீமா தனது தாயாருக்கு அன்புப் பரிசாக அனுப்பிய புராதனமான ஓடுகளே சர்ச்சையை கிளப்பியுள்ளன.

இந்த ஓடுகள் 700 ஆண்டுகளுக்கு முற்பட்டவை. 1972ம் ஆண்டு இஸ்லாமிய மையம் ஒன்றில் இருந்து திருட்டுப்போனவை என்று சுங்க இலாகா கூறுகிறது.

## பொப் வாழ்த்து

பொப் இசையில் தன் ஆட்ட அசைவுகளால் தூள் கிளப்புபவர் மடோனா.

சென்ற ஆண்டில் கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டைகளில் மடோனாவின் படங்கள் வெளியாகின. அந்த அட்டைகளுக்கு பலத்த மவுசு. துரித கதியில் விற்றுத் தீர்ந்தன. அமெரிக்காவில்தான் இந்த வேக விற்பனை.

சென்ற ஆண்டில் அமெரிக்காவில் அதிகம் விற்பனையானவை மடோனா படம் போட்ட வாழ்த்து அட்டைகள்தான்.

இளைஞர்கள் மட்டுமல்ல வயதானவர்களும் மடோனா படம் போட்ட வாழ்த்து அட்டைகள் மூலமே கிறிஸ்மஸ் வாழ்த்துக்களை தம் நண்பர்களுடன் பகிர்ந்து கொண்டனராம்.

## நள்ளிரவு தொலைபேசி

இந்திப் படவுலகில் தற்போது வரவேற்பு பெற்றிருப்பவர் ராணி முகர்ஜி.

நடிகைகள் என்றாலே பிரபலங்களது தொல்லைகள் இருந்தே தீரும்.

ராணி முகர்ஜிக்கும் ஏகப்பட்ட தொல்லைகள். அனாமதேய தொலைபேசி அழைப்புக்கள் வருகிறதாம்.

இதுபற்றி ராணி முகர்ஜி தொலைபேசி இலாகாவிற்கு புகார் செய்திருக்கிறார்.

தொலைபேசி இலாகாவினர் ராணி முகர்ஜிக்கு வரும் தொலைபேசி அழைப்புக்களைப் பதிவு செய்தனர்.

ராணி முகர்ஜிக்கு நள்ளிரவு நேரம் தொலைபேசி அழைப்பு ஒன்று வந்தது. அவரது உடலை அங்கம் அங்கமாக ஒருவர் வர்ணித்தாராம். ஆபாசமாக பேசினாராம்.

அந்த அழைப்பு எங்கிருந்து வருகிறது என்று கண்டுபிடித்த தொலைபேசி இலாகாவினருக்கு அதிர்ச்சி.

பிரபலமான அரசியல்வாதி ஒருவர்தான் நள்ளிரவில் அவ்வாறு ஃபோன் செய்திருந்தாராம்.




அந்த அரசியல்வாதி ஆளும் கட்சியைச் சேர்ந்தவர். அதனால் தாம் கண்டுபிடித்த விடயத்தை அப்படியே அமுக்கிவிட்டதாம் தொலைபேசி இலாகா.



படிப்பகம்

www.padippakam.com



# தேனீ மனிதர்

மலர்களைத் தேடித்தான் தேனீ வரும் என்றில்லை. சில மனிதர்களைத் தேடியும் வரும்.

இவரது உடம்பெல்லாம் மொய்த்திருப்பது தேனீக் கூட்டம். நம் உடலில் பட்டாலே கொட்டிவிடும் தேனீக்கள் இவர் உடம்பில் பரம சாதுக்களாக ஒட்டி உறவாடுகின்றன.





இவரது பெயர் ஆர்ட்டுரோ ஹீவாமன். தென் அமெரிக்காவில் உள்ள பெரு நாட்டில் வசிக்கிறார்.

மொத்தம் முப்பதாயிரம் தேனீக்களை தன் உடலில் மொய்க்க விட்டிருக்கிறார். இவருக்கு அங்குள்ள மக்கள் சூட்டியுள்ள செல்லப் பெயர்: தேனீ மனிதர். ■

# 150 நொட் அவுட்

↓ நூறு வயதைத் தாண்டியும் இன்றும் உயிர்வாழும் மனிதர்களைப் பற்றிய தகவல்கள் இப்போது பரவலாக வெளிவந்து கொண்டிருக்கின்றன. இவ்வாறு நூற்றாண்டுகாலம் வாழ்ந்ததாகக் கூறப்படும் பலருக்குத் தங்கள் வயதையிட்டு நிரூபிப்பதற்கான ஆவணங்கள் இருப்பதில்லை. பிறப்பு, இறப்புப் பதிவெல்லாம் பிற்பட்ட காலத்தில்தான் அமுலுக்கு வந்தன.

படத்தில் காணப்படுபவர், ஆம் அத்வா மௌசா என்னும் எகிப்திய நாட்டவர். மீன்பிடிக்கும் தொழில் புரிந்த இவருக்கு தற்போது 150 வயதாகிவிட்டது என்று கூறப்படுகிறது.

அத்வா மௌசாவின் பேத்திகளில் ஒருத்தி அவரைக் குளிப்பாட்டுவதைப் படம் காட்டுகிறது. இவர் தனது முதல் மனைவியுடன் வாழ்ந்த 60 ஆண்டுகளின் பின்னர் மேலும் நாலு பெண்களை மணந்தாராம்.

1869ம் ஆண்டில் சுயெஸ் கால்வாய் அமைக்கப்படும்போது, அப்போதிருந்த அரசர் அந்நாட்டு மக்களை கட்டாயமாக- கால்வாய் வெட்டும் பணியில் ஈடுபடுமாறு கோரிக்கை விடுத்தாராம். இதிலிருந்து தப்புவதற்காக இவர் தனது மனைவிகளையும் பிள்ளைகளையும் விட்டுவிட்டுக் இவர் கூறுகிறார்.

இவருடைய வயது பற்றிய கூற்றுக்கு மேற்படி சம்பவம் ஓர் எடுத்துக்காட்டு.

தனது வயதைச் சந்தேகத்துக்கிடமின்றி நிரூபித்து கின்னஸ் சாதனைப் பதிவில் இடம்பிடித்துக் கொண்டவர்- 1997ல் தனது 122வது வயதில் காலமான ஃபிரெஞ்ச் பெண்மணியான ஜியன்னே கால்மென்ற் ஆவார். ●



# புஜ அழகர்



↗ இடைவிடாத தேகப் பயிற்சியினால் உடம்பின் தசைகளை உறுதியாக்குவோர் ஆணழகர் போட்டிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பினைப் பெறுகிறார்கள்.

அமெரிக்க மினசோட்டா மாநிலம் புளூமிங்டனைச் சேர்ந்த டெனிஸ் செஸ்டர் என்பவர், ஆணழகுப் போட்டிகளைப் பற்றிக் கவலைப்பட்டவராகத் தெரியவில்லை. இவர் தனது புஜ பலத்தை உறுதி செய்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தார்.

தனது இளமைப் பருவத்தை இவருடைய பெற்றாரின் பண்ணையில் கலித்தமையினால் அங்கு வளர்க்கப்பட்ட பன்றிகளுடன் எப்போதும் விளையாடுவாராம்.

வேறு பாரங்களைத் தூக்கி தனது புஜ பலத்தைக் கூட்டுவதைத் தவிர்த்து, குண்டான பன்றிக்குட்டிகளைத் தூக்கியே புஜங்களின் தசை நார்களை வலிமையுடையதாக்கிக் கொண்டார். இதனால் இவருடைய புஜங்கள் ஒவ்வொன்றும் 77.8 சென்டிமீட்டர் (30 5/8 அங்குலம்) சுற்றளவு கொண்டவையாக விளங்குகின்றன.

உலகிலேயே அதிக சுற்றளவு கொண்ட புஜம் படைத்தவர் என்று கின்னஸில் பதிவு செய்யப்பட்டுள்ளார்.

உலகில் உள்ள ஆணழகர்கள், மல்யுத்த வீரர்கள் ஆகியோரைவிட இவரது உடலின் ஏனைய அளவுகள் சிறிதாக இருப்பினும், புஜ அளவு மட்டுமே பெரிது.

# தகவல் பெட்டி



# விளம்பர விபத்து

↑ வியாபாரம் பெருக விளம்பரம் தேவைதான். ஆனால் நவீன விளம்பரங்களால் வியாபாரம் மட்டுமல்ல, விபத்துக்களும் பெருகிவிடுகின்றன.

தமிழ்நாட்டில் சென்னை மாநகரில் ஸ்ரீப்ரியா அட்டகாசமாக போஸ் கொடுத்தபடி இருந்த கட் அவுட் ஒன்று வீதி விபத்துக்களை ஏற்படுத்தியது. கட் அவுட்டைக் கண்டு வாயைப் பிளந்த சாரதிகள் நிலை தடுமாறிவிட்டனர். இந்தச் செய்தி படத்தோடு முரசில் வந்ததல்லவா.

இதைப்போன்ற பல செய்திகள் இருப்பினும், அதிக விபத்துக்களை ஏற்படுத்தி உலக சாதனை படைத்த விளம்பரம்தான் மேலே உள்ளது.

பிரபல மொடல் அழகி ஈவா ஹெர்ஸிகோவா என்பவரது அசத்தல் படம்தான் இது. 'வொண்டர் பிரா' என்னும் மார்புக்கச்சை விளம்பரத்துக்காக, ஆள் உயர கட் அவுட்டாக, அவர் உருவத்தை தத்ரூபமாக செய்து வைத்திருந்தனர்.

ஈவாதான் வந்து நின்று போஸ் கொடுப்பதாக நினைத்து, தெருவைப் பார்த்து வாகனம் ஓட்ட மறந்து, ஈவாவின் திரு உருவைப் பார்த்து பிரமித்தனர் சாரதிகள். மொத்தம் நூறு விபத்துக்கள் ஒரே நாளில் நடந்தன. இது உலக சாதனை. இரசித்தவர்களுக்கு வேதனை.

இரு ஜொள்ளர்கள் சொக்கி நிற்கிறார்கள் பாருங்கள். ○



# வயதான அம்மணி

← அமெரிக்காவில் பென்சில்வேனிய மாநிலத்திலுள்ள சுரங்கத் தொழிலாளர்களுக்கான ஹொலிவூட் கிராமத்தில்- 1880ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24ம் திகதி பிறந்தமைக்கான பூரண அத்தாட்சிகளுடன் இன்று தனது 119வது வயதில் வாழ்ந்து கொண்டிருப்பவர்- சாரா நௌஸ் என்ற முதாட்டி.

தனது கொள்ளுப் பேரனுடன் விளையாடிக் கொண்டிருக்கும் இவர், தற்போது அலென் ரவுனில் உள்ள பராமரிப்பு நிலையத்தில் மருத்துவர்களின் இடையறாத கண்காணிப்பில் வாழ்ந்து வருகிறார்.

தனது 119வது பிறந்த நாளை, அவரது குடும்பத்தின் 6 தலைமுறைகளுடன் சேர்ந்து குதூகலமாகக் கொண்டாடினார்.

மேலும் மூன்றாண்டுகளை கடந்து விட்டாரானால் ஃபிரான்ஸ் பெண்மணியான ஜியன்னே கால்மென்ற்றின் உலக சாதனையை முறியடித்துவிடுவார். ■



படிப்பகம்




முரளி
படம்: வட்டாகுடி இரணியன்

## பப்படம்

'காதலுக்கு மரியாதை' தமிழில் ... கலக்கியது. அதனை ... இந்தியில் தயாரித்தார்கள். படம் பப்படமாகி விட்டது. அப்படத்தில் நடித்த நக்மாவின் தங்கை ஜோதிகா கவலையில் இருக்கிறார்.

## மினி சினி

* 'ரட்சகன்' படத்தை இயக்கிய பிரவீன் காந்தி இப்போது தனது பெயரை பிரவீன் காந்த் என்று மாற்றி வைத்துள்ளார்.

* தமிழில் ஒரு படமும் இல்லாமல் இருக்கும் சங்கவி, தெலுங்கில் பிஸியாக நடித்து வருகிறார்.

* தமிழ் நாட்டின் கோவை மாவட்டத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்தை மையமாக வைத்து 'கோவை' என்ற பெயரில் படமொன்று தயாராகிறது.

* 'தச்சிடேலத்து சந்தன்' என்ற மலையாளப்படத்தில் ஊரே பார்த்துப் பயப்படும் அளவுக்கு முரட்டுத்தனமான தாதா வேடத்தில் நடிக்கிறார் மம்முட்டி.

* 'வீட்ல விசேஷங்க' படம் மூலம் அறிமுகமான பிரகதி நீண்ட காலத்திற்குப் பின் செல்வமணி இயக்கும் 'ராஜஸ்தான்' படத்தில் முக்கிய வேடத்தில் நடிக்கிறார்.

* பிரபு கதாநாயகனாக நடிக்க 'மாணிக்கம்' படத்தை இயக்கிய கே.வி.பாண்டியன் இயக்குவதாக இருந்த புதிய படம் கைவிடப்பட்டுவிட்டது.

* 'என்ஜினியர்' படம் மூலம் தமிழில் அறிமுகமாகும் மாதுரி டிக்ஷிட், 'ராம்' என்ற படம் மூலம் கன்னடத்தில் அறிமுகமாகிறார்.

* பிரசாந்த்-புதுமுகம் ஷிவானி ஜோடியாக நடிக்கும் 'என் இனிய காதலர்களே' படத்தை இயக்கி அதில் முக்கிய வேடமொன்றிலும் நடிக்கிறார் சேரன்.

* நெப்போலியன்-நக்மா நடித்துள்ள 'மாயா' படத்தில் இடம்பெறவிருந்த டூயட் பாடல் காட்சி ஒன்றை ஏனோ பின்னர் நீக்கி விட்டார்கள்.

* பாரதிராஜா இயக்கத்தில் மனோஜ் நாயகனாக அறிமுகமாகும் 'தாஜ்மஹால்' படத்தில் புகழ் பெற்ற இந்திய கஸல் பாடகி ரிச்சா சர்மா பாடல் ஒன்றைப் பாடியுள்ளார்.

## 'தலைமுறை' சறுக்கல்

'தொட்டாச்சிணுங்கி' போன்ற வெற்றிப்படங்களை இயக்கியவர் அதியமான். அவரே கதாநாயகனாக நடித்து வெளிவந்துள்ள படம் தலைமுறை.

படம் எதிர்பார்த்தளவு வசூலை குவிக்காவிட்டாலும், போட்ட முதலுக்கு நஷ்டமில்லை.

பார்த்திபன் போலவே வசன உச்சரிப்பை கையாள்கிறார் அதியமான். அதனால் அதியமானுக்கென்று ஒரு தனித்துவம் இல்லாமல் போயிருக்கிறது.

படத்தில் ராஜ்கிரண், ரேவதி ஆகியோர் சோகத்தை பிழிந்துதர, பானுப்பிரியாவும் படம் ஆரம்பித்தது முதல் முடியும் வரை சோகமாகவே வந்து போகிறார். மறந்தும்கூட சிரிக்கவில்லை. முன்னாள் தள தள நாயகிக்கு இந்தக் கதியா?

வில்லனாக வரும் ராஜ்கபூர் வெளுத்து வாங்குகிறார். சத்யராஜ் பாணி ஆங்காங்கே எட்டிப்பார்த்தாலும் உறுத்தவில்லை. ஒரு தடவை பார்க்கலாம். பரவாயில்லை ரகம்.

## சங்கீத நடிகை

பேபியாக இருந்து நாயகியாக மாறியவர் பேபி ஷாலினி. காதலுக்கு மரியாதை அவரை கதாநாயகியாக உச்சிக்கு கொண்டு சென்றது.

சரண் இயக்கத்தில் பேபி ஷாலினி அடுத்து நடிக்கும் தமிழ்ப் படத்தில், அவரே பாடல் ஒன்றையும் பாடியுள்ளாராம். சங்கீதம் கற்று வந்திருக்கிறார் முன்னாள் பேபி.

## நல்ல நேரம் பிரசாந்த்

'கண் எதிரே தோன்றினாள்' வெள்ளிவிழா கொண்டாடப் போகிறது. 'காதல் கவிதை' வெளியாகியுள்ளது. உற்சாகத்தில் இருக்கிறார் பிரசாந்த். இது அவருக்கு நல்ல நேரம். மீண்டும் ஒரு சுற்று.

பல படங்களில் ஒப்பந்தமாகியிருக்கிறார். தற்போது வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் 'பூவேலி' பட இயக்குநர் செல்வாவும் பிரசாந்தை நாடியுள்ளார்.

பிரசாந்த்-கௌசல்யா ஜோடியாக நடிக்க அடுத்த படத்தை இயக்கவுள்ளார் செல்வா. இன்னமும் பெயர் சூட்டவில்லை.

விஜயகுமார், ராதிகா, வடிவேலு, சார்லி, சந்தானபாரதி ஆகியோரும் நடிக்கின்றனர். இசை: தேவா.



ரேவதி-ராஜ்கிரண்
படம்: தலைமுறை

## பிரித்தி ஸிந்தா

### ஜில்ஜில் நாயகி

பிரித்தி ஸிந்தாவுக்கு புதிய படங்கள் குவிந்து கொண்டிருக்கின்றன.

'உயிரே' படத்தில் இரண்டாவது நாயகியாக வந்தாலும், முதல் நாயகியான மனிஷாவையே தூக்கிச் சாப்பிட்டுவிட்டார் பிரித்தி ஸிந்தா.

இந்த ஜில்ஜில் நாயகிக்கு இந்தியிலும் அதிஷ்டம் கொட்டுகிறது. பாபி தியோலுடன் ஜோடியாக நடித்த 'சோல்ஜர்' பிரமாதமாக வெற்றி பெற்றிருக்கிறது. இந்தியில் தொடர்ந்து வாய்ப்புக்கள் இவரை விரட்ட, தமிழ்ப் பட வாய்ப்புக்களும் துரத்துகின்றன.

விஜய்யுடன் இரண்டு படங்கள், பிரசாந்த்துடன் ஒரு படம் என்று தமிழில் முன்னணி நாயகர்களுடன் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

இயக்குநர் மணிரத்னம் நடிகைகள் விடயத்தில் சற்று ஜாக்கிரதையாக ஒதுங்கி இருப்பவர். அவரையே காந்தமாக கவர்ந்திழுத்தவர் இந்த பிரித்தி ஸிந்தா. "என் திறமையை தட்டிக் கொடுத்து முன்னுக்கு கொண்டு வந்தவர் மணி. அதனால் அவரை என்றும் மறக்கமாட்டேன்" என்று கூறுகிறார் பிரித்தி. மணி என்று எத்தனை உரிமையோடு அழைக்கிறார். பார்த்தீர்களா?

## புத்தாண்டு மோதல் படையப்பா–மோனிஷா

சித்திரைப் புத்தாண்டுக்கு ரஜினியின் படையப்பா திரைக்கு வருகிறது. அதனால் தமது படங்களை புத்தாண்டுக்கு வெளியிட பல தயாரிப்பாளர்கள் தயக்கம் காட்டுகிறார்களாம்.

சூப்பர் ஸ்டாரின் படம் வெளியானால், தங்கள் படங்களின் வசூல் சுருண்டுவிடும் என்றுதான் தயங்குகிறார்கள்.

ஆனால் ஒரே ஒருவர் மட்டும் துணிந்து தனது பெரிய பட்ஜெட் படத்தை வெளியிடப் போகிறார். அவர் டி.ராஜேந்தர்.

டி.ராஜேந்தரின் மோனிஷா சித்திரை புத்தாண்டு வெளியீடாக படையப்பாவுடன் மோதப் போகிறது.

ரஜினியுடன் டி.ராஜேந்தர் மோதுவது இது முதல் முறையல்ல. ஏற்கனவே மூன்று முறை மோதியிருக்கிறார். மூன்று முறையும் அவரது படங்கள் வெற்றிவிழா கொண்டாடின. இம்முறை என்னாகுமோ?



கே.எஸ். அதியமான்-லட்சுமிஸ்ரீ
படம்: தலைமுறை

## இரசனை மாறவேண்டும்

'செந்தூரம்' படத்தில் மிக நன்றாக நடித்தும் படம் ஓடாதது குறித்து கவலையுடன் இருக்கிறார் தேவயாணி. "செந்தூரம் ரொம்ப நல்ல படம். அது ஏன் சரியாகப் போகவில்லை என்று எனக்குத் தெரியவில்லை. அந்தப்படத்தின் தோல்வி எனக்கு ரொம்ப வருத்தத்தைக் கொடுத்தது.

மக்களுடைய இரசனை மாறவேண்டும். தொடையையும், தொப்புளையும் பார்த்து இரசிக்கும் போக்கு மாறவேண்டும்." என்று கூறியிருக்கிறார் தேவயாணி.

தேவயாணியும் முதலில் கவர்ச்சி நடிகையாகவே அறிமுகமானவர். 'தொட்டாச்சிணுங்கி', 'சிவசக்தி' போன்ற படங்களில் அதிரடி கவர்ச்சி காட்டியவர்.



www.padippakam.com

www.padippakam.com

## ...ரிப்போர் முடிவு

...நர் சுந்தர்-சி, குஷ்பு பனிப்போர் ...டது. இருவரும் தங்கள் ஊடலை ...கொண்டனர். அதற்கடுத்த ...ரியுஸிலாந்தில் கொண்டாடி ...னர்.

...னத் தேடி' படத்தின் ...க்காக ...து சென்றார் ...வே ...ண்டு ...றார்

## யார் அந்த மிஸ்டர் கே?

'குருபார்வை' தூள் கிளப்பிய தால் பிரகாஷ்ராஜ் காட்டில் மழை. அடுத்தடுத்து பல வாய்ப்புக்கள் கிடைத் துள்ளன.

கன்னடப் படவுலகின் முன்னணி கதா ...யகன் குமார் கோவிந்த் தயாரிக்கும் படம் ...ர் கே.'

...டத்தில் கதாநாயகனாக நடிப்பதோடு, படங் ...ப்பதிலும் ஈடுபட்டுள்ளவர் குமார் கோவிந்த். ...ல் முதன் முதலாக தயாரிக்கும் படம்தான் ...த்தில் கதாநாயகனாக பிரகாஷ்ராஜ் நடிக்க, ...க குமார் கோவிந்த் நடிக்கிறார்.

...மர்மமாக கொலை செய்யப்படுகிறார்கள். ...ளை செய்பவரின் முதல் எழுத்து 'கே'. அடுத் ...ஒருவரை 'கே' கொலை செய்யப்போகிறான் ...ஸார் அறிகிறார்கள். யார் அந்த கே? என்ப ...பிடிக்க மேற்கொள்ளும் திரிலான முயற்சிகள்

...ல் சுருதி, ...ப்லி கணேஷ், ...ாரும் நடிக் ...இயக்குபவர் ...வர் ஆர்.வி. ...உதவியாள ...ர், தெலுங்கு, ...ஆகிய மொழி ...யாராகிறது. ...கே.'

## தேவியும் தயார்

மஞ்களா-விஜயகுமார் தம்பதியின் மூன்று பெண் மக்களும் நடிக்க வந்துவிட்டனர். அடுத்து கடைக் குட்டியாக இருந்த பேபி ஸ்ரீதேவியும் கதாநாயகியாக நடிக்கத் தயாராகி விட்டார்.

பெரும் நட்சத்திரக் குடும்பம் என்று கின்னஸில் இடம்பிடிக்கப் போகிறார்களோ?

## காதோடு சொல்லுகிறோம்

சமீபத்தில் வெளிநாடு ஒன்றுக்கு நட்சத்திர கலை விழா நடத்தச் சென்றனர் தமிழக நடிகர், நடிகையர் சிலர். அக்குழுவில் சென்ற விசித்திரமான கவர்ச்சி நடிகையும், விவேகமான நடிகைச்சுவை நடிகரும் பின்னிப் பிணைந்து கொண்டனராம்.

அமெரிக்காவில் இருந்து திரும்பிய அம்பிக நடிகை நகைச்சுவை வேலுடன் ஐக்கியமாகித் திரிகிறார். இப்போது அம்பிக நடிகையின் தங்கையும் சினிமா உலகுக்கு திரும்ப உள்ளாராம். கணவருடன் தகராறு ஏற்பட்டதால்தான் மறுபடி சினிமா பிரவேசம்.

சென்னையில் பிலிம் சிட்டியில் படப்பிடிப்பு நடந்தபோது, அங்கு திடீரென்று ஆஜரானார் வினிதமான நடிகை. அங்கு தன்னுடன் முன்னர் ஜோடியாக நடித்த நாயகனை சந்தித்தாராம். பின்னர் நாயகனின் அறையில் இருவரும் மூன்று மணிநேரம் 'டிஷ்கஷன்' நடத்தினார்கள். இதனால் நாயகனின் அடுத்த படத்தில் இரண்டாவது நாயகியாக நடிக்கும் வாய்ப்பு கிடைக்கப்போகிறதாம்.

ரம்யமான நடிகை விவகாரமான படத்தில் நடித்து, அந்த கசட்டுக்கள் சிக்கியிருப்பதாக ஒரு கதை. இது வெறும் புரளி. சூப்பர் ஸ்டாரின் படத்தில் வாய்ப்புக் கிடைக்காத நடிகை ஒருவர் கிளப்பிவிட்டுள்ள புரளி என்கிறார் ரம்யமான நடிகை.

## உலக சாதனைக்கு ஒரு படம்

### தமிழ்த் திரையுலகில் புது முயற்சி

இந்திய சினிமா வரலாற்றில் புதிய முயற்சி, புதிய சாதனை.

பதின்மூன்று கதாநாயர்கள் எட்டுக் கதாநாயகிகள் நடிக்கும் தமிழ்ப்படம் ஒன்று தயாராகப்போகிறது.

இப்படத்தை பத்து இயக்குநர்கள் இயக்கவுள்ளனர். இந்த சாதனைப் படத்தின் படப்பிடிப்பை ரஜினியும், கமலும் இணைந்து ஆரம்பித்து வைத்தனர். 24.01.99 அன்று படத் தொடக்கவிழா நடந்தது.

இன்னமும் பெயரிடப்படாத இப்படத்தில் விஜயகாந்த், பிரபு, கார்த்திக், விஜய், பிரசாந்த், முரளி, அர்ஜுன், பாக்யராஜ், பார்த்திபன், பாண்டியராஜன், பிரபுதேவா, பிரகாஷ்ராஜ், மன்சூர் அலிகான் ஆகியோர் நடிக்கின்றனர்.

கதாநாயகிகளாக குஷ்பு, ரோஜா, சிம்ரன், ரம்பா, தேவயாணி, சுவலட்சுமி, கீர்த்திரெட்டி, ப்ரீதா விஜயகுமார் ஆகியோர் நடிக்கின்றனர்.

மேலும் விஜயகுமார், மணிவண்ணன், வடிவேலு, ஜெமினி கணேசன், விவேக், ஸ்ரீவித்தியா ஆகியோரும் நடிக்கவுள்ளனர்.

படத்தை இயக்கப்போகும் இயக்குநர்கள் பட்டியல் இதோ: கே.எஸ். ரவிக்குமார், சுந்தர்.சி, குருதனபால், பி. வாசு, எஸ்.ஏ. சந்திரசேகரன், செல்வா, சிராஜ், ஆர்.கே.செல்வமணி, ஈ.ராமதாஸ், ஏ.ஆர்.ரமேஷ்.

இசையமைப்பதும் ஐந்து பேர். இளையராஜா, தேவா, எஸ்.ஏ.ராஜ்குமார், வித்யாசாகர், சிற்பி.

ஐந்து பெண்கள், மூன்று மகன்களுக்கு ஒரே நேரத்தில் திருமணம் செய்துவைக்கத் துடிக்கும் தந்தையை மையமாக வைத்து கதை பின்னப்பட்டுள்ளது. தந்தையாக ஜெமினி நடிக்கிறார். மனைவி ஸ்ரீவித்யா.

### கின்னஸ்சாதனை

இந்தியாவில் மட்டுமன்றி உலக சாதனையாக கின்னஸில் பதிவு செய்யவே இந்த பாரிய முயற்சியாம்.

ரஜினி நடித்த 'காளி', 'கர்ஜனை' போன்ற படங்களை தயாரித்தவர்களே இப் படத்தை தயாரிக்கின்றனர்.

ஏற்கனவே நடிகர் சங்க கடனை அடைக்க முன்னணி நாயகர்களை வைத்து படம் எடுக்க திட்டமிட்டார் ராதாரவி. சத்யராஜ், பிரபு, விஜயகாந்த், கார்த்திக் போன்றோர் நடிப்பதாக இருந்தது. பின்னர் குறிப்பிட்ட நடிகர்கள் சிலர் ஒத்துழைக்கவில்லை. அதனால் அத் திட்டம் கைவிடப்பட்டது.

அதேபோல புதிய படத் திட்டமும் பாதியில் நின்று போகாமல் இருக்குமா?

## 98இல் வெற்றிப் பட்டியல்

கடந்த ஆண்டு தமிழ்ப்பட முன்னணி கதாநாயகர்களின் படங்களின் நிலை என்ன? பட்டியலைப் பாருங்கள்.

சத்யராஜ் நடித்து ஒரே ஒரு படம் மட்டும் வெளியானது. 'கல்யாண கலாட்டா'. சுமார் வெற்றி.

விஜயகாந்த் நடித்து மூன்று படங்கள் வந்தன. 'வீரம் வெளைஞ்ச மண்ணு','உளவுத்துறை' இரண்டும் தோல்வியல்ல. 'தர்மா' தோல்வி.

பிரபு நடித்த மூன்று படங்கள் அதில் 'பொன்மனம்' மட்டும் சுமார் வெற்றி. 'இனியவளே', 'என் உயிர் நீதானே' இரண்டும் தோல்வி.

சரத்குமார் படங்கள் மூன்று, 'நட்புக்காக' மகா வெற்றி. 'சிம்மராசி' சுமார். 'மூவேந்தர்' தோல்வி.

கார்த்திக் படங்கள் நான்கு வந்தன. மூன்று வெற்றி. 'உதவிக்கு வரலாமா' தோல்வி.

விஜய் படங்கள் மூன்று, 'நினைத்தேன் வந்தாய்', 'பிரியமுடன்' வெற்றி. 'நிலாவே வா' தோல்வி.



அர்ஜுன்-செளந்தர்யா
படம்: மன்னவரு சின்னவரு

"மனக்கோலம் கொண்ட மகளே - புது மாக்கோலம் போடு மயிலே"



...தி லிந்தா

திரையுலக மறுபக்கம் (89)
தமிழ்நாட்டிலிருந்து மயன்

## இந்தியில் புகலிடம் தரும் நடிகர் தமிழுக்கு திரும்பினார் நடிகை

பிரபலமான, உயரமான இந்தி நடிகர் அவர். பெயருக்குள்ளேயே சக்கரவர்த்தியை வைத்திருக்கிறார்.

தமிழ்ப்பட நடிகைகள் இந்தியில் வாய்ப்புத் தேடிச் செல்லும்போது புகலிடம் கொடுப்பவர் அவர்தான்.

தமிழ் சினிமா உலகைவிட இந்தியில் ஊதியமும் அதிகம். புகழும் அதிகம்.

அதனால் தமிழ்ப்பட நடிகைகள் இந்தி சினிமா உலகில் காதல் கொள்கின்றனர். வைஜயந்திமாலா, ஸ்ரீதேவி போன்றோர் இந்தியில் கொடிகட்டிப் பறந்தனர்.

அவர்களைப்போல் தாமும் இந்தியில் கொடி நாட்டலாம் என்ற கனவில்தான் பிறமொழிப்பட நடிகைகள் அங்கு செல்கின்றனர்.

அவ்வாறு சென்ற நடிகைகளில் முன்றெழுத்து நடிகையும் ஒருவர். தமிழில் முன்றெழுத்தால் சுருக்கமாக அழைக்கப்படும் இரண்டு முன்னணி நாயகன்களுடனும் நெருக்கமாக இருந்தவர் இந்த நடிகை. அதிலும் ஒரு நாயகனுடன் ஆஸ்தான நடிகையாகவும் பேசப்பட்டவர்.

இந்திப் பட உலகை நோக்கி இவர் இடம் பெயர்ந்தபோது, அங்கு கைகொடுத்தவர் சக்கரவர்த்தி நடிகர்தான்.

நடிகையின் உடல் அமைப்பை புகழ்ந்து தள்ளிய சக்கரவர்த்தி நடிகர், அந்த உடல் அமைப்பை தான் மட்டுமே முதலில் ரசித்தார். அதற்காக மும்பாயில் தன் பங்களா ஒன்றில் நடிகையை தங்க வைத்தார்.

நடிகையும் தமிழ்ப்பட உலகில் தான் கற்றிருந்த வித்தைகளை காண்பித்து நடிகரை வீழ்த்தினார். உடனடியாக தன் ஜோடியாக நடிகையை நடிக்க வைத்தார் நடிகர்.

### ஜோடியாக நடித்தார்

தமிழிலே காட்டாத கவர்ச்சியை இந்தியில் காட்டினார் நடிகை. நடிகருக்கும் அவருக்கும் உள்ள நெருக்கம் ஒவ்வொரு காட்சியிலும் தெரிந்தது.

நெருக்கமான காட்சிகளில் நடிக்கும்போது, கமராவுக்கு பின்னாலும் நெருக்கமான ஜோடிகளை கண்டுபிடித்து விடலாம். தம்மையறியாமலேயே அவர்களது நெருக்கத்தைக் காட்டி விடுவர்.

நடிகைமீது விழுந்து புரண்டு நடித்தார் நடிகர். நடிகையும் நடிகரை புரட்டி எடுத்திருந்தார்.

தனக்கு இந்தியில் வாய்ப்புப் பெற்றுத்தந்ததால் நடிகருக்கு நன்றியாக நடந்துகொண்டார் நடிகை.

ஒரு சில மாதங்களுக்குள் நடிகைக்கு எதிர்பாராத அதிர்ச்சி ஒன்று ஏற்பட்டது.

இந்திப் பட உலகின் ஜாம்பவான் என்றழைக்கப்படும் தயாரிப்பாளர் ஒருவரை அழைத்து வந்தார் நடிகர்.

நடிகையும் புன்னகையுடன் வரவேற்று உபசரித்தார். 'இருவரும் பேசிக்கொண்டிருங்கள்' என்று கூறிவிட்டு நழுவிவிட்டாராம் நடிகர். அப்போதுதான் நடிகைக்கு சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது.

அந்த சந்தேகத்தை உறுதி செய்தது தயாரிப்பாளரின் நடவடிக்கை.

தன் அருகே அமருமாறு நடிகையை அழைத்தவர், தயக்கத்துடன் அமர்ந்த நடிகையிடம், தேவி நடிகையைக் குறிப்பிட்டு, அவருக்கு பெரிய வாய்ப்புக்களை கொடுத்தது பற்றி கூறுயிருக்கிறார்.

இன்னொரு உண்மையையும் உளறியிருக்கிறார். தன்னிடம் வரும் நடிகைகளை அந்த நடிகர் இப்படித்தான் பங்கு போட்டுக் கொள்ளுவார் என்றும் கூறினார்.

நடிகையின் தோள்மீது சுதந்திரமாக கைபோட்ட தயாரிப்பாளர், அடுத்து செய்த காரியத்தால், சீற்றமான நடிகை, எழுந்து நின்றபடி தயாரிப்பாளரை திட்டியிருக்கிறார்.

அதிர்ச்சியான தயாரிப்பாளர் வெளியேறிவிட்டார். இதனை அறிந்த நடிகருக்கு நடிகைமீது கோபம் வந்துவிட்டது.

நடிகைக்கும் அந்த நடிகர்மீது கசப்பு தோன்றியது. நடிகரின் பங்களாவை விட்டு பெட்டியோடு வெளியேறினார் நடிகை. மறுபடி தமிழுக்கு திரும்பினார்.

## தாமதம் ஏன்? - காரணம் இரகசியம்

சத்யராஜ் நடித்த 'பொண்ணு வீட்டுக்காரன்' தீபாவளிக்கு வந்திருக்க வேண்டிய படம், பொங்கலுக்கு வெளியாகியுள்ளது.

இந்த தாமதத்திற்கு என்ன காரணம் என்ற சங்கதி தற்போது வெளியாகியுள்ளது. விஜயகுமார், மஞ்சுளா தம்பதி வீட்டிற்கு அடிக்கடி திக்விஜயம் செய்பவர் இயக்குநர் பி.வாசு. ப்ரீதா விஜயகுமாரை கதாநாயகியாக நடிக்க வைத்து மஞ்சுளாவிடம் உரிய பலனை பெற்றாராம்.

படத் தயாரிப்பாளர் விஷ்ணுராமையும் நட்சத்திர தம்பதியிடம் அறிமுகம் செய்திருக்கிறார். அவரை வளைத்து சுளையாக கறந்தனராம். கிட்டத்தட்ட 50 இலட்சம் ரூபாய் நஷ்டம். அதில் பாதிப்பணம் நட்சத்திர குடும்பத்திற்கு போய்விட்டது.

இதனால் படத்தை வெளியிட பணம் இன்றி அலைந்தார் தயாரிப்பாளர். அப்படி இப்படி பணம் புரட்டி பொங்கலுக்கு வெளியிட்டிருக்கிறார்.

www.padippakam.com

## வாழ்வுக்கு ஏன் சாவு?

வாழத்துடித்த
வாழ்க்கைக்குள்–ஏன்
சாவு வந்து
சேர்ந்து கொண்டது?
சொல்லித் தருவாயா
பிரிய சகீ...?
–0–
நீபோன பின்னர்
அந்த அழகிய கிராமத்தின்
தேவதைகள் எல்லாம்
நிறைவேறாத
கனவுகள் சுமந்து
நீள் தூரம் போயின;
வெறுமை சூழ்ந்த
இடங்களிலெல்லாம்
சாபங்கள் குடியேறின!
–0–
நிறைவேறாமற்போன
எண்ணங்கள் ஈடேற
செத்துச் செத்து உயிர்த்து
எத்தனை பிறவிகளுக்குக்
காத்திருக்க முடியும்?
–0–
மகிழ்வுகளும், பாக்கியங்களும்
எனது வாழ்வுக்குள்
காலடிவைத்த மறுகணமே
எனைவிட்டு விலகின...
துயரங்களும் கண்ணீரும்
கூடாரமமைத்துக்
குடியேறின!
–0–
எனது ஆனந்தங்களைப்
பழிவாங்கவென்றே
உள்ளத்தின் புண்கள்
ஆறாமலிருக்கின்றன!
–0–
காலம் ஆற்றுமென்று
காத்திருக்கக் காத்திருக்கக்
கவலைகள் எல்லாம்
புரையோடிப் போயின!
–0–
காலமும் பொறுமையும்
காயவைத்த கண்ணீர்
உள்ளத்திலிருந்து மீண்டும்
ஊற்றெடுத்து வழிகிறது!
–0–
கண்களுக்குள்
கண்ணீரைத் தேக்கி
எட்டுத் திக்கிலும்
தேடித் தோற்றபோதும்,
நம்பிக்கை தரக்கூடிய
எதனையும்
காணவே இல்லை!
–0–
எனது அன்பு
எதையும் பொறுத்துக்கொள்ளும்
என்பதால்தானா
எல்லாத் துயரங்களையும்–விதி
எனக்குத் துணிந்து தந்தது?

பஹீமா ஜஹான்–
அட்டாளைச்சேனை.

## சுதந்திர நாள்


தவறு செய்பவர்கள்
நீதிமன்றத்தால்
தண்டிக்கப்படுவதால்
சிறையில் தற்காலிக
கைதிகள்!
**
தவறு செய்யாமலே
போரில்
தண்டிக்கப்படுவதால்
முகாமில் நிரந்தர
அகதிகள்!
**
குற்றம் புரிந்ததால்
அகன்ற அறைக்குள்–
குற்றவாளிகள்!
**
குற்றம் புரியாமலே
குறுகிய அறைக்குள்–
சுத்தவாளிகள்!
**
மணியடித்தால் சாப்பாடு
மூவேளை–
மண்டபத்துக்குள்!
**
மணியடிக்காமலே சாப்பாடு
ஒருவேளை–
மரத்தடியில்!
**
நாட்டுக்கு சுதந்திரநாள்
நாலாயிரம் கைதிகள்–
விடுதலை!
**
அதே
நாட்டுக்குச் சுதந்திரநாள்–
மேலும் நாலாயிரம்
அகதிகள்
முகாமுக்குள்!

கந்தையா காந்தரூபன்–
பூண்டுலோயா.

## சபாஷ்... சதாம்!

அதோ–
அமெரிக்கச் சட்டம்பியார்!
**
சால்வை உதறி
தலை சொறிவோம் வாருங்கள்!
**
வாருங்கள்,
குப்புற விழுந்து
சாஷ்டாங்க நமஸ்காரம் செய்வோம்!
**
சட்டம்பியாரின் சப்பாத்துக் கால்கள்–
எங்கள் பண்பாட்டுத் தலைகளை
நெரிக்கட்டும்!
எங்கள் இறைமை இதயத்தைக்
கசக்கட்டும்!
எங்கள் சுயமெனும் கால்களைத்
தறிக்கட்டும்!
வாருங்கள்
சாஷ்டாங்கமாய் விழுவோம்!
**
அட...யாரது... நிமிர்ந்து
தோளில் துணிவுத் துவாயுடன்...?
ஓ...ஈராக் சதாமா...
இரும்பு மனிதனா...
சபாஷ்...சதாம்!
(நாங்கள் சாஷ்டாங்கமாய்க்
கிடக்கிறோம்.)

எஸ். புஸ்பானந்தன்.



## தேன் கிண்ணம்

### நீர் மேகமாவது போல..!

இந்தக்
கறையான் புற்றைப்
பலமுறை
கலைத்திருக்கின்றாய்;
அது
தொடர்ந்து
கட்டிக்கொண்டே
இருப்பது
உனக்குப்
புரியவில்லையா?
▫▫
எனக்காக நீ
இல்லையென்பது
எனக்குத் தெரியும்;
உனக்காக நான்
உயிர் வாழ்வதை
ஏன் உணரவில்லை?
▫▫
'நீர்'
தெரியும்!
'மேகம்'
தெரியும்!
நீர் மேகமாவது
தெரியாது;
நான் நீயானதும்
அப்படித்தான்!
▫▫
நீ
பட்டை தீட்டும்வரை
இந்த வைரம்
மண்ணுக்குள் இருக்கும்;
உன் காலில்
(கொலு) 'சாவதற்கு!'

மாரிமுத்து யோகராஜன்–
மட்டக்களப்பு.

### எம் இரட்சகர்கள்

நீலமும் பச்சையும்
நிச்சயமாய்க் கூடி
தீர்வைப்
பிரசவிக்கும்.
'ஆமாம்...!'
...
இல்லையேல்
கண்டனக் கணைகளை
வாய்விலிலே
தொடுப்போம்...!
அரிச்சனர்களாகி
அறிக்கைகளை
அம்புகளாய்ப்
பொழிவோம்...!
'ஆமாம்!'
...
பந்தம் பிடிக்கும்
பணிக்காய்
சொந்தக்
கோவணத்தையும்
கொழுத்தத் துணிவோம்
'ஆமாம்!'
...
கஞ்சித்தண்ணிக்கு
நாதியற்ற
வன்னிப் பிஞ்சுகளின்
சோகத்தை
சுகபோகங்களில்
மறப்போம்...!
'ஆமாம்!'
...
குழு அமைப்போம்...
கொமிஷன் வைப்போம்...
'ஆமாம்' சாமிகளை நம்பி
அன்னக்காவடி
தூக்கி ஆடுவோம்...!
'ஆமாம்'

உரும்பராய் சிவன்சுதன்.

### காதலி சொன்ன உண்மைகள்

மேற்கிலும்
சூரியன் உதிக்குமாம்...
என் காதலி சொல்ல
நானும் நம்பினேன்!
..
அமாவாசையிலும்
நிலவு வருமாம்...
அவளே சொன்னாள்
நானும் ஏற்றுக் கொண்டேன்!
..
கடலைவிட்டு
அலையைப் பிரிக்கலாமாம்...
என்னவள் சொல்ல
நானும் மறுக்கவில்லை!
..
காலம் கடந்து
சொன்னாள்...
தன்னை விட்டு
பிரியும்படி!
..
முடியாது என்று
சொல்ல நினைத்த
வார்த்தை
தொண்டைக்குள்ளே
அடங்கிப் போனது;
அவள் கையிலிருந்த
திருமண அழைப்பிதழைப்
பார்த்து!

த. நகுலேஸ்வரன்– கல்லடி
மட்டக்களப்பு.

## கொத்துக் கொத்தாய் விமானங்கள்



'ஓடமும் ஒருநாள் வண்டியில் ஏறும்; வண்டியும் ஒருநாள் ஓடத்தில் ஏறும்.' ஆனால் பெரும்போர்க் கப்பல் ஒருநாளும் விமானத்தில் ஏறாது. காரணம் அதன் பாரத்தை விமானத்தால் சுமக்க முடியாது. ஆனால் விமானங்களை கொத்துக் கொத்தாக போர்க் கப்பல் சுமந்து செல்லும்.

படத்தில் உள்ளது அமெரிக்க விமானம் தாங்கிக் கப்பல். இரண்டாம் உலக யுத்தத்தில் ஜப்பான் போர்முனைக்கு போர் விமானங்களை யுத்தக் கப்பலில் அடுக்கிக் கொண்டு செல்கிறார்கள்.

நம்நாட்டில் லொறிகளில் சைக்கிள்கள்தான் இப்படிப்போகும்!



பெயர்: ப. அம்பிகைகுமார்,
வயது: 21
முகவரி: மகாரம்பைக் குளம், வவுனியா.
பொழுது போக்கு: பத்திரிகை.



பெயர்: ஸ்ரீ சிவனேஸ்வரி,
வயது: --
முகவரி: 98, கடல்முக வீதி, திருகோணமலை.
பொழுது போக்கு: தையல், ரீ.வி.



பெயர்: எம். ஸஹ்பீக்,
வயது: 18
முகவரி: 117/ஏ, எருக்கலம்பிட்டி, பாலாவி.
பொழுது போக்கு: வழமையானவை.

## நில்– கவனி– முன்னேறு



**1. நேரம்:**

நேரத்தை முறையாகச் செலவிடத் தெரியாதவர்கள் எந்தச் சாதனையையும் செய்ய முடிவதில்லை. அலுவல் போக மீதி நேரத்தில் எதையேனும் கற்க முடிந்தால் அது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். போய்ச் சேர வேண்டிய இடத்துக்கு ஒரு ஐந்து நிமிடம் முன்கூட்டியே சென்று பாருங்கள். பெரிய மாற்றங்களையே அது ஏற்படுத்தும்.

**2. கற்றுக்கொடுங்கள்:**

கற்றுக்கொள்வது எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் கற்றுக்கொடுப்பதும். உங்களுக்கு என்னென்ன விஷயங்கள் தெரியுமோ, அவற்றை மற்றவர்களுக்குக் கற்றுக்கொடுங்கள். கசடறக் கற்பதற்கு முதல்படி கற்றுக்கொடுப்பதுதான்.

**3. தலைமை:**

எந்த ஒரு தொழிலையும் முதலில் மாணவனாக இருந்து கற்றுக்கொள்ளுங்கள். நேரம் வரும்போது தலைமை ஏற்று நடத்துபவராக மாறிவிடுங்கள். தலைமைப் பொறுப்பில் இருந்தாலும் பொறுமை, நிதானம் இவற்றை இழக்காமல் இருந்தால் வெற்றி நமதே.



**4. சுயநலத்தைச் சுட்டுப் பொசுக்குங்கள்:**

சுயநலம் ஒரு தீக்குழி போல. அதைப் பெரிதாய் மதிக்க மதிக்க அது நம்மையே சுட்டுப் பொசுக்கிவிடும். 'இறந்த பிறகு ஈட்டிய சொத்துக்களை எடுத்துக்கொண்டா போகப் போகிறோம்?' என்ற கேள்வியை அடிக்கடி உங்களுக்குள் கேட்டுக்கொள்ளுங்கள். மற்றவர்களுக்கு உதவுவதைவிட, மகிழ்ச்சி வேறு எதிலும் கிடையாது என உணர்வீர்கள்.



**5. சிறப்புப் பகுதி:**

உங்களின் வலுவான பகுதி எது என முதலில் கண்டுபிடித்துக் கொள்ளுங்கள். உங்கள் திறமை முழுவதும் செலுத்தி அதில் பிரகாசிக்க முயலுங்கள். பிற்காலத்தில் உங்களுக்கென்று ஒரு தனித்துவம் கிட்டும்.

**6. சுய கட்டுப்பாடு:**

எளிதில் உணர்ச்சிகளுக்கு அடிமையாகிப் போகும் சராசரி மனிதனில் இருந்து மாறுபட்டு இருங்கள். விட்டுக் கொடுக்கும் குணமும் பொறுமையும் உங்களை விட்டுப் போகும் சந்தர்ப்பத்தைக் கூட இழுத்து வந்து உங்கள் முன்னால் நிறுத்தும்.

**7. எளிதாகப் பழகுங்கள்:**

நீங்கள் எப்படி மற்றவர்களிடம் பழகுகிறீர்களோ, அதைப் பொறுத்துத்தான் பிரச்சனைகளுக்கு உங்கள் அணுகுமுறையும் அமையும். எளிமையாகப் பழகுபவர்கள் என்ற பெயரெடுத்தவர்கள் அனைவரும் பெரும்பாலும் சாதனையாளர்களே.



**8. தனிமனிதனாக மாறுங்கள்:**

கும்பலோடு கும்பலாய்க் கோஷம் போடும் மனிதராக வேண்டாம். கும்பலில் உங்கள் குரல் தனித்துக் கேட்கும்படி செய்யுங்கள். பேச்சில் கவர்ச்சி, சிரித்த முகம், அன்புப் பார்வை, நேர்மையான நோக்கம் போன்றவை உங்களை எளதில் தனி மனிதராகக் காட்டும் குணங்கள்.

**9. பயத்தை விடுங்கள்:**

பயமே உங்கள் முதல் எதிரி. 'வீரன் ஒரு நாள்தான் சாவான். கோழையோ தினமும் சாவான்' என்று ஒரு பலகையில் எழுதி அடிக்கடி கண்ணில் படும்படி ஓரிடத்தில் வையுங்கள். 'முடியாது' என்ற வார்த்தையையே மறந்து விடுங்கள்.



**10. குறிக்கோள்:**

குறிக்கோள் இல்லாத வாழ்க்கை இலக்கு இல்லாமல் எய்த அம்பு போன்றது. குறிக்கோளை அடையும் வரை 'ஓயக் கூடாது' என்ற எண்ணத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்.





படிப்பகம்

www.padippakam.com

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## என்றும் இனிய இளமை!

என்றும் இளமையாக இருக்க என்ன வழி? சிரிப்பதுதான்.

★ சிரிப்பு ஆயுளை அதிகரிக்கும் என்பது உங்களுக்குத் தெரியும்தானே! சிரித்தால் ஆயுள் கூடுவதோடு ஆரோக்கியமும் அதிகரிக்கும். நண்பர்களோடு, நண்பிகளோடு, கணவனோடு, மனைவியோடு உறவினர்களோடு மனந்திறந்து பேசி, நன்றாகச் சிரியுங்கள். அதிகம் சிரிப்பவர்களை சில நோய்கள் தாக்குவதில்லை, என்பதை தற்போது கண்டு பிடித்திருக்கிறார்கள்.



★ எப்போதும் வாழ்க்கையில் சிரித்துக் கொண்டே இருக்க முடியாது அல்லவா? சோகம் வரும்போது என்ன செய்வீர்கள்? அழுகை வந்தால் அழுது விடுங்கள். சோகங்களை மனதில் தேக்கி வைக்காமல் அழுதுவிடுவது உடலுக்கும் மனதுக்கும் நல்லது. நிறைய அழுகிறவர்களுக்கு மாரடைப்பு- மன நெருக்கடியால் ஏற்படும் நோய்கள் தோன்றாது.

★ அன்பை எல்லாரிடமும் வெளிப்படுத்துங்கள். இதன் மூலம் மனதுக்கு சுகம் கிடைக்கும்.

★ உங்களுக்குள் ஏற்படும் வெற்றி தோல்விகளை நெருக்கமானவர்களோடு பங்கிடுங்கள்.

## எடையுள்ளோர் கவனிக்கவும்

'குண்டானவர்களே...! சாப்பிடுவதற்கு முன்பு தண்ணீர் குடித்து விடுங்கள். சாப்பிட்ட பிறகு தண்ணீர் குடித்தால் மேலும் எடை அதிகரிக்கும்' என்கிறது ஆயுள்வேதக் குறிப்பு ஒன்று.

காய்கறிகள், பழங்களை அதிகமாகச் சாப்பிடுவதன் மூலம், உடல் பருமனைத் தடுக்கலாம். இவற்றில் கலோரிச் சத்து. குறைவு.

மேலும் உடல் பருமனைத் தடுக்க, உடற்பயிற்சி மிகவும் அவசியம். ஆனால் உடல் பருமன் உள்ளவர்கள் கடுமையாக உடற்பயிற்சி செய்யக்கூடாது. அவ்வாறு கடினமான உடற்பயிற்சிகளைச் செய்தால் மாரடைப்பு ஏற்படலாம்.

## இடுப்புவலி தீர

இடுப்பு வலி பின்னி எடுக்கிறதா?

அந்த நேரம் பார்த்துத்தான் உங்கள் குழந்தை தன்னோடு விளையாடக் கூப்பிட்டு அடம்பிடிக்கும்.

கொஞ்சம் சுடுசோறு எடுத்து வெள்ளைத் துணியில் வைத்து வலியுள்ள இடத்தில் ஒத்தடம் கொடுங்கள். வலி மாயமாகிவிடும். பின், குழந்தையோடு குதிரையேற்றம் விளையாடலாம்.

●●●

பெண்களின் முகம், கழுத்து, கைகள் போன்ற இடங்களில் உள்ள கருந்தேமல்களின் மேல் இரவில் படுக்கப் போகும் முன், கொத்தமல்லி இலையை அழுத்தித் தேய்த்து வர கருந்தேமல் மறையும்.

## கருவளையமா?



கண்களைச் சுற்றிக் கருவளையம் இருந்தால் அழகான பெண்களையும் கூட அவலட்சணமாக்கிக் காட்டும். இதைப் போக்க, தேங்காய் எண்ணெய்யில் மஞ்சள் தூள் கலந்து குழைத்து அதைச் சூடாக்கி, வெதுவெதுப்பான சூட்டில் தினமும் குளிப்பதற்கு முதல் கண்களைச் சுற்றி பூசவேண்டும். பின் பத்து நிமிடம் கழித்து குளிக்க வேண்டும். இப்படித் தொடர்ந்து செய்து வர கருவளையங்கள் மறையும்.

## தங்கமாலைப் பரிசுப்போட்டி அதிஷ்டசாலிகள்

முரசு—அம்மன் ஜுவலர்ஸ் இணைந்து வழங்கிய தங்கமாலைப் பரிசுப் போட்டியில் முதல் மூன்று பரிசுகளான தங்கமாலை, தங்க மோதிரம், சமையல் அடுப்பு போன்றவற்றை பெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரங்களை அறிய ஆவலாக இருப்பீர்கள்.

**அந்த சூப்பர் அதிஷ்டசாலிகளின் விபரங்கள் இறுதியில் அறிவிக்கப்படும்.**

ஆறுதல் பரிசுபெறும் 50 அதிஷ்டசாலிகளில் கடந்த வாரங்களில் 30 பேரின் விவரங்கள் தந்தோம். அடுத்துவரும் 10 பேரின் பெயர் விபரம் பின்வருமாறு:

31. இரா. சாரதாம்பாள்,
இல. 28, இராஜ வீதி, கண்டி.

32. ஜெ. சுபாசினி,
வள்ளிவெல, கவுடு பெலல்ல, மாத்தளை.

33. மு. வேல்விழி,
இல. 42, வெண்டர் வேர்ட் இடம்,
தெகிவளை.

34. செல்வி என். நிஷாந்தி,
இல. 147, டச்பார், கல்லடி, மட்டக்களப்பு.

35. திருமதி புஷ்பராணி நற்குணராசா,
ஆஸ்பத்திரி முன் வீதி, சந்திவெளி,
முறக்கொட்டான்சேனை.

36. எம். ஜெஸ்மின்,
அமானுல்லா வீதி, காத்தான்குடி-06.

37. பா. இந்திராதேவி,
இல 49/92, கோவில் வீதி,
குருமன்காடு, வவுனியா.

38. ப. சுகன்யா,
இல. 95, பிரதான வீதி, பசறை.

39. சி. எம். பாத்திமா சிமாரா
இல. 113, பள்ளிவீதி, வெடகே பொத,
தெல்தோட்டை.

40. மௌஸியா ஆப்டீன்
இல. 63/1, பள்ளிவீதி, நமடகஹவத்த,
கலேவெல.

ஏனைய அதிஷ்டசாலிகளின் விபரங்கள் அடுத்த வாரம் வெளியாகும்.



## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** FE

பெயர்:............................

முகவரி:............................

............................

தொழில்:............................

கையொப்பம்:............................

**உண்மை—நேர்மை—வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 13-02-1999**

அனுப்பவேண்டிய முகவரி- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.





# கண்ணீரில் கரைந்த இரவுகள்

டயானாவுக்கு அக்கியூபஞ்சர் சிகிச்சை அளித்தவர் டாக்டர் திருமதி ஊனா ரொ.்.ப்லோ.

அவரது கணவர் ஜோசப் இருதய சத்திர சிகிச்சைக்காக புறொம்டன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அவரைப்பார்வையிடுவதற்காக சென்றார் டயானா. அவ்வாறு செல்லும்போது, அங்கு தன்னைக் கவர்ந்திழுக்கும் ஒருவரை சந்திக்கப் போவது டயானாவுக்குத் தெரியாது.

இருதய சத்திர சிகிச்சைப் பிரிவில் ஜோசப்புடன் டயானா உரையாடிக்கொண்டிருந்தார்.

அப்போதுதான் அந்த திடகாத்திரமான- உயரமான ஆண் ஒருவர் உள்ளே வந்தார்.

டயானாவைப் பார்த்ததும் அவர் புன்னகைத்தார். அந்தப் புன்னகையில் ஆளுமை இருந்தது. எதிரே இருப்பவரைக் கவர்ந்திழுக்கும் வசீகரம் இருந்தது.

டயானாவை அவருக்குத் தெரியும். அது தவிர டயானா அங்கு வந்துள்ள தகவல் மருத்துவமனை முழுக்கப் பரவியும் இருந்தது.

டயானாவுக்கு அவரை அறிமுகம் செய்து வைத்தார் ஜோசப்.

"இவர்தான் பிரபல இருதய சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் ஹஸ்னற் கான்" எனக் கூறினார்.



டாக்டர் ஹஸ்னற்கான்

"ஹலோ" என்றார் டயானா. இருவரும் கைகுலுக்கிக் கொண்டனர். டாக்டர் ஹஸ்னற் கானின் கரம் அழுத்தமாக டயானாவின் கரம் பற்றி மீண்டது.

"ஜோசப்பின் உடல் நிலை குறித்து ஹஸ்னற் கானிடமே நேரடியாகக் கேட்டு அறிந்து கொண்டார் டயானா.

மறுநாளும் வருவதாகக் கூறிய டயானா, தான் வரும் நேரம் பற்றியும் முன்கூட்டியே ஹஸ்னற் கானிடம் கூறினார்.

தான் வரும்போது டாக்டர் ஹஸ்னற் கானும் அங்கு இருக்க வேண்டும் என்று டயானா விரும்பியிருக்கிறார். அதனால்தான் தான் வரும் நேரத்தையும் அவரிடம் கூறிவிட்டுப் போனார்.

மறுநாள் டயானா எதிர் பார்த்ததுபோலவே மருத்துவமனையில் டாக்டர் ஹஸ்னற் கான் காத்திருந்தார்.

ஜோசப்பை பார்வையிட்டு முடிந்ததும், டாக்டர் ஹஸ்னற் கானுடன் பேசியபடியே புறப்பட்டார் டயானா.

மருத்துவமனையின் மாடிப்படிக்கட்டுக்குள் அருகே நின்று இருவரும் பல நிமிடங்கள் பேசிக் கொண்டிருந்தனர்.



டயானாவின் தனிப்பட்ட தொலைபேசி இலக்கத்தைப் பெற்றுக் கொண்ட ஹஸ்னற் கான், தன்னுடைய 'விசிட்டிங் கார்ட்டை'யும் டாயானவிடம் தந்தார்.

டாக்டரின் பேச்சில் இருந்த இலாவகம் டயானாவைக் கவர்ந்தது. அவருடன் பல மணிநேரங்கள் பேசிக் கொண்டிருக்க வேண்டும் போல இருந்தது. டாக்டரின் நிலையும் அதுதான்.

"நகைச்சுவையாகப் பேசுகிறீர்கள். எப்போதும் சிரித்தபடியே இருக்கிறீர்கள். எனக்கு உங்களைப்பார்க்கும் போது பொறாமையாக இருக்கிறது!" என்று டயானா அவரிடம் கூறியபோது, டாக்டர் முதன் முதலாக டயானாவை காதலோடு நோக்கினார்.

அன்று டயானா மாளிகைக்குத் திரும்பியதும் டாக்டர் ஹஸ்னற் கானிடம் இருந்து .்.போன் வந்தது.

"நான் சிரித்தபடி இருப்பதைப் பார்த்து பொறாமைப்படுவதாகக் கூறினீர்கள்.

சிரித்தபடி இருப்பது இருதயத்துக்கும் நல்லது. நீங்களும் சிரித்தபடி இருக்க வேண்டும். கவலைகளை உதறிவிட்டு, எமக்கு விதிக்கப்பட்ட வாழ்க்கையை நாம் அனுபவிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்!" என்று ஆலோசனை கூறினார்.

டயானா சிரித்தபடி, "தங்கள் ஆலோசனைக்கு நன்றி. உங்களை அடிக்கடி சந்தித்துப் பேசினால், கவலைகளே பறந்து போய்விடும்!" என்றார்.

அரச குடும்ப வாரிசின் தாயார் என்பதையும் மறந்துவிட வேண்டாம்!" என்று கூற, டயானா சோர்வுற்றவராக "சிறிது நேரமாவது சுதந்திரமாகக் கனவு காண அனுமதிக்கமாட்டாயா?" என்று கேட்டார்.

கவலை தோய்ந்த குரலில் தன் சிநேகிதிகளிடம் பின்வருமாறு கூறினார்: "எனக்கும் ஆசாபாசங்கள் இருக்கின்றன. என்னை மனப்பூர்வமாக விரும்பும் ஒருவருடன், குடும்பப் பிணைப்போடு வாழவேண்டும் என்று நான் விரும்புவது தவறா? எனக்கு அதற்கு உரிமை இல்லையா?" என்று கேட்ட டயானா தன் இன்னொரு ஆசையையும் கூறினார்.

"ஒரு பெண் குழந்தைக்குத் தாயாக வேண்டும் என்பது என் நீண்டகால ஆசை. அந்த ஆசை பலித்தால் நான் என் துன்பங்களையெல்லாம் மறந்துவிடுவேன்."

## "பெண் குழந்தை வேண்டும்"

தன்னை அடிக்கடி சந்திக்க விரும்புவதையே டயானா அவ்வாறு சூசகமாகத் தெரிவிக்கிறார் என்று குறிப்பறிந்த டாக்டர், மறுநாளே சந்திப்பதற்கான தன் ஆவலையும் கூறினார்.

மறுநாள் டயானாவும், டாக்டரும்-டயானாவின் நெருங்கிய தோழி ஒருவரது இல்லத்தில் சந்தித்தனர்.


நீண்ட நேரம் மனம் விட்டுப் பேசினார்கள். இருவரும் விடைபெறும் தருணம் வந்தபோது, டயானாவின் கரத்தைப் பற்றிய டாக்டர், புறங்கையில் தன் உதடுகளால் முத்தமிட்டார்.

டயானாவுக்கு டாக்டரின் அச் செய்கை பிடித்திருந்தது. ஒரு புன்னகை அவரிடம் அரும்பியது.

டாக்டர் விடைபெற்றுச் சென்றபோது, தன் சிநேகிதியிடம் டயானா பின்வருமாறு கூறினார்: "டாக்டரை எனக்கு பிடித்திருக்கிறது. அவர் அடிக்கடி சிகரெட் பிடிப்பது தான் பிடிக்கவில்லை!"

டயானாவுக்கு சிகரெட் புகைப்பது பிடிக்காது. அரச குடும்பப் பெண்கள் பலர் சிகரெட் பிடிப்பார்கள். பகிரங்கத்தில் புகைக்க மாட்டார்கள். இரகசியமாக ஊதித் தள்ளுவார்கள். டயானாவுக்கு சிகரெட் வாசனையே பிடிக்காது என்பதால் அவர் முன்பாக அரச குடும்பப் பெண்களும் சிகரெட் பிடிப்பதில்லை.

டாக்டர் ஹஸ்னற் கான் அடிக்கடி சிகரெட் புகைத்தபடியே இருந்தார். உடனடியாக ஆட்சேபிக்கக் கூடாது என்பதால் டயானா எதுவும் சொல்லவில்லை.



"டாக்டரை நீ காதலிக்கிறாயா?" என்று டயானாவின் சிநேகிதிகள் அவரிடம் கேட்டனர்.

டயானா உடனே பதில் கூறிவிடவில்லை. "தெரியாது!" என்று மழுப்பலாக கூறினார்.

ஏற்கனவே கசப்பான அனுபவங்கள் இருப்பதால், டாக்டர் பற்றி தீர விசாரித்து அறியும்படி சிநேகிதிகள் கூறினார்கள்.

மிக நெருக்கமான சிநேகிதிகளிடம் மட்டுமே டாக்டருடன் தனக்கு ஏற்பட்ட நட்பைக் கூறியிருந்தார்.

சிநேகிதி ஒருத்தி டயானாவிடம், "வருங்கால

டாக்டருடன் அடிக்கடி ஏற்பட்ட சந்திப்புக்களை அடுத்து, கென்சிங்டன் மாளிகைக்கே அவரை அழைத்தார் டயானா.

அங்கு வைத்து தடபுடலான விருந்து கொடுத்தார். இரவு ஆரம்பமான விருந்துபசாரம் நள்ளிரவு வரை தொடர்ந்தது.

விடைபெறும்போது முதன் முதலாக டயானாவை மென்மையாகத் தழுவி, அவரது இதழ்களோடு தன் உதடுகளை உறவாட விட்டார் டாக்டர்.

டயானா மறுப்பின்றி அனுமதித்தார்.

நீண்ட நாட்களாக தனிமையில் தவித்த டயானாவுக்கு டாக்டரின் முத்த ஸ்பரிசம் சிலிர்ப்பாக இருந்தது. மேலும் டாக்டருடன் நெருங்கும் ஆவல் உள்ளே கிளர்ந்தது.

கென்சிங்டன் மாளிகைக்கு வெளியே டாக்டரை சந்திப்பதைவிட அங்கேயே சந்திப்பது தான் பாதுகாப்பானது என்பதால், அதற்கேறப திட்டம் ஒன்றை வகுத்தார்.

மாலை ஆறு மணிக்கே பணியாளர்களை வீட்டுக்கு அனுப்பிவைத்து விட்டு டாக்டருக்கு போன் செய்தார்.

"இன்றும் இங்குதான் உங்களுக்கு விருந்து," என்று டயானா அழைத்ததும் டாக்டர் மகிழ்ச்சியோடு சம்மதித்தார்.

"இன்று உங்களுக்குப் பிடித்தமானதையெல்லாம் எடுத்துக் கொள்ளலாம்!" என்றார் டயானா.

டாக்டருக்கு இருப்புக் கொள்ளவில்லை; உடனே கிளம்பினார்.

(அடுத்த வாரமும் வரும்)



## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

## நுவரெலியா வாசகிக்கு அதிஷ்டம்!

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் | திருமதி ரட்னமாலா கணேசன், இல.4, உடபுஸ்ஸல்லாவ வீதி, நுவரெலியா. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.





படிப்பகம்

www.padippakam.com





சிந்தையிற் கள் விரும்பிச்
சிவ சிவ வென்பது போல்
வந்தே மாதர மென்பார்! - கிளியே!
மனத்தில் வதனைக் கொள்ளார்.
- சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# கற்பனைக் கோட்டை

ஓர் ஊரில் மாரிமுத்து என்பவன் வசித்து வந்தான். அவன் தினமும் சம்பாதித்து மாவு வாங்கி வருவான். அதில் ஒரு பகுதியை உணவுக்கு எடுத்துவிட்டு, மீதியை ஒரு மண்பானையில் போட்டு உறியில் தொங்க விடுவான்.

அந்த உறிக்குக் கீழே கட்டிலைப் போட்டுக் கொண்டு, எப்போதும் ஒரு கண்ணால் அதைப் பார்த்து மகிழ்ந்து யோசனையில் ஆழ்ந்திருப்பான்.

வழக்கம் போலவே கட்டிலில் படுத்துக்கொண்டே, மாப்பானையைப் பார்த்தபடியே சிந்தனையில் மூழ்கினான்.

'பானையோ மாவால் நிறைந்திருக்கிறது. எப்போதாவது பஞ்சம் ஏற்படுமானால், இதிலிருக்கும் மாவை விற்றால் நிறையப் பணம் கிடைக்கும். அதை வைத்து ஓர் ஆடு வாங்குவேன்.

ஆறு மாதங்களுக்கு ஒரு முறை ஆடு குட்டி போட்டுக் கொண்டே இருக்கும். இரண்டு வருடங்களில் ஆட்டு மந்தை ஒன்று என்னிடம் இருக்கும். ஆட்டுமந்தையை விற்று மாடுகள் வாங்குவேன்.

மாடுகள் கன்று போட்டு மாட்டுப் பண்ணை உருவாகும். பின் அவைகளை விற்று குதிரைகள் வாங்குவேன். குதிரைகளின் எண்ணிக்கை அதிகரித்ததும் அவற்றை விற்று அழகான மாளிகை ஒன்று கட்டிக்கொள்வேன்.

அதைக் கண்ட பணக்காரர்கள் எவராவது, நிறையப் பணத்துடன் தமது பெண்ணை எனக்குத் திருமணம் செய்து வைப்பார்கள்.

எனக்கு ஒரு குழந்தை பிறக்கும். அந்தக் குழந்தையையும், எனது மனைவியையும் ஆடம்பரமாக வைத்திருப்பேன். எனது மாளிகையில் நிறைய வேலைக்காரர்களை வேலைக்கு வைத்திருப்பேன்.

வீட்டு வேலைகளைச் செய்யச் சொல்லி அவர்களை அதிகாரம் செய்வேன். அவர்கள் ஏதாவது பிழையாகச் செய்தால் அவர்களுக்குத் தண்டனை வழங்குவேன்.

நான் ஏதாவது யோசனையில் மூழ்கியிருக்கும்போது, வீட்டு வேலைக்



காரர்களை எதற்காவது அழைப்பேன். நான் அழைத்தால் அவர்கள் உடனே ஓடி வந்து விடவேண்டும்.

அப்படிவராவிட்டால் இப்படி ஒரு உதை விடுவேன், என்று கூறி தன் கால்களால் ஓங்கி உதைத்தான்.

அவனுடைய உதை, உறியில் இருந்த பானையின் மீது பட்டு பானை உடைந்தது. பானையில் இருந்த மாவெல்லாம் அவன் உடலில் கொட்டி, அவன் உடல் முழுவதும் வெள்ளையாகிப்போனது. அவனது கற்பனைக் கோட்டையும் தகர்ந்தது.

**செல்வமும் செல்வாக்கும் வந்ததும் அதிகாரத்தைக் கையில் எடுக்க நினைக்கக் கூடாது. இல்லாவிட்டால் மாரிமுத்துவின் நிலைதான் எமக்கும் ஏற்படும்.**

## அதிசயம் - ஆனால் உண்மை!

➡ சீனாவில் உள்ள அமாய் என்ற துறைமுகத்தின் அருகே 1933ம் ஆண்டு திடீரென்று 20 அடிக்கு நீர்மட்டம் தாழ்ந்தது. நீர்மட்டம் தாழ்ந்ததனால் தோணியொன்று, ஒரு பாறையின்மீது தங்கிவிட்டது.



➡ ஜெர்மனியில் இருந்த அல்பிரட் கிரப் என்ற இரும்புத் தொழிலதிபர் இரும்பினால் ஒரு மாளிகை கட்டினார். இந்த மாளிகையில் ஒரு மரத்துண்டு கூடப்பயன்படுத்தப்படவில்லை. இந்த மாளிகையின் ஜன்னல்களைத் திறக்கவோ மூடவோ முடியாது. காரணம் தொழிலதிபருக்கு சூடு என்றாலோ, குளிர் என்றாலோ ஒரே பயம்.





⬅ திபெத்திலுள்ள டக்மர் என்ற கிராமத்து வீடுகள் செங்குத்தான மண்குன்றுடன் ஒட்டி அமைக்கப்பட்டவை. இந்த கிராமவாசிகள் வீட்டிற்குச் செல்வதானால் கைகளாலும், கால்களாலும் தவழ்ந்து தவழ்ந்துதான் அவர்களது வீடுகளை அடைவார்கள்.

## உயிரியல் பூங்கா

❖ மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சீனப் பேரரசர் ஒருவர் பலவித விலங்குகளைச் சேகரித்து முதல் உயிரியல் பூங்காவைத் தொடங்கினார்.

❖ முற்காலத்தில் காட்டு விலங்குகளைக் கூட வீட்டில் வளர்க்கும் பழக்கம் மனிதர்களிடம் இருந்திருக்கிறது. கிராமங்களும், நகரங்களும் பெருகப் பெருக வனவிலங்குகளுக்கென தனி இடம் ஒதுக்கப்பட்டது.



❖ இப்படித் தனியே ஒதுக்கப்பட்டவற்றையே மனிதன் தேவைப்படும்போது வேட்டைக்குப் பயன்படுத்திக்கொண்டான். ஒரு சிலர் விலங்குகளுக்கு வித்தைகளைக் கற்பித்து, மக்களை மகிழ்விக்கப் பழக்கினர்.

❖ சிலர் தமது அந்தஸ்தைக் காட்டுவதற்காக வனவிலங்குகளை வளர்த்தனர். 9ம் நூற்றாண்டில் பொதுமக்கள் பார்வையிட உயிரியல் பூங்காக்கள் ஆரம்பமாயின. அதையடுத்து 700 அல்லது 800 ஆண்டுகளில் நிறைய அதிகரித்தன.

❖ உலகின் மிகப் பெரிய உயிரியல் பூங்கா கலிஃபோர்னியாவில் உள்ள 'சான் பீகோ.' இரண்டாவது இடத்தில் நியூயோர்க்கில் உள்ள 'வெஸ்ட் பெர்லின்' என்ற பூங்கா மூன்றாவதாக 'த பிரான்க்ஸ்.' அடுத்தது பெல்ஜியமில் உள்ள 'அன்ட் வேஸ்'.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **13.02.1999.**

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 283**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 281

**பரிசுக்குரியவர்:**
செல்வன் எஸ். லோகிதராஜ்,
கோணேஸ்வரா இந்துக்கல்லூரி, திருக்கோணமலை.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| ஆர். அருண் பாரத், காவத்த தமிழ் வித்தியாலயம், காவத்தை | கரோலினி தெய்வேந்திரராஜா, சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா. |
| பா. நிரோசினி, புளியாவத்தை த.ம.வி., டிக்கோயா. | பா. சுதர்சினி, இந்துக்கல்லூரி, வாழைச்சேனை. |
| றஸ்ஸாக் பர்ஸான், 'கரீம் கார்டன்' ஹாலி எல. | நவரட்ணம் றூபினி, த.ம.வித்தியாலயம், பலாங்கொடை. |
| ஆர். சுரதிஸ், க/ கலாபொக்க த.வி., மடுல்கெல. | ப. விஜயவதனன், விபுலாணந்த மத்திய மகாவித்தியாலயம், காரைதீவு.04. |
| பத்மராஜா சலோஜன், புனித மிக்கேல் தேசிய கல்லூரி, மட்டக்களப்பு. | முத்துலிங்கம் பிரிதிகலா, கோணக்கலை தமிழ் வித்தியாலயம், பசறை. |

## விடுகதைகளும் விடைகளும்

1. நடக்கவும் மாட்டேன்; நகராமல் இருக்கவும் மாட்டேன். நான் யார்?
2. காலையிலும் மாலையிலும் நெட்டை; மதியம் குட்டை. நான் யார்?
3. உள்ளிருந்தபடியே உத்தரவிடுவான்; அவன் யார்?
4. ஓடப்போடக் குறைவேன்; எடுக்க எடுக்க அதிகமாவேன். நான் யார்?
5. வெள்ளையாய் இருப்பேன்; கறுப்பாயும் இருப்பேன்; தண்ணீராகவும் போவேன். நான் யார்?
6. புற்கள் இருக்கும்; கடிக்கமாட்டான். அவன் யார்?
7. கிளை இல்லாத மரத்தில், எலும்பில்லாதவன் ஏடாகூடம் செய்கிறான். அவன் யார்?
8. அரை அடி உயரக் குதிரைக்கு ஆறடிக்கு மேல் வால். அது என்ன?
9. வாழ்நாள் முழுக்க வாயை மூட மாட்டான். அவன் யார்?
10. விதையின்றி முளைக்கும்; வேர் இன்றி வளரும். அது என்ன?

**விடைகள்**

1. கடிகாரம் 2. நிழல்
3. நாக்கு 4. பள்ளம்
5. மேகம் 6. சீப்பு
7. முடி-பேன் 8. ஊசி-நூல்
9. தபால் பெட்டி 10. கொம்பு

தொகுப்பு: ஏ. அகல்யா.

## கடல் முயல்

கடல்வாழ் உயிரினங்களில் ஒரு வகையான மீனுக்கு கடல் முயல் என்று பெயர். தோற்றத்தில் பார்ப்பதற்கு இது முயல் போன்று தோற்றமளிப்பதால் இந்தப் பெயர்.

மீன் இனத்திலேயே அதிக முட்டைகள் இடும் உயிரினம் கடல் முயலே. அதாவது குறிப்பிட்ட 4 மாத காலத்தில் 47 கோடியே 80 இலட்சம் முட்டைகளை இடக்கூடியது.


உலகிலேயே அதிக அளவில் முட்டைகளை இடக்கூடிய உயிரினம் கடல் முயலாகத்தான் இருக்கும்.

## வர்ண நிலவு

நிலவைப் பார்த்தால் வெள்ளையாகத்தான் இருக்கும். ஆனால் நீல நிலவையும் பச்சை நிற நிலவையும் யாராவது பார்த்திருக்கிறீர்களா? அல்லது கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

1950ம் ஆண்டு இங்கிலாந்தில் இருந்தவர்கள் நீல நிலவைப் பார்த்திருக்கிறார்கள். எப்படி? கனடா நாட்டில் உள்ள பிரிட்டிஷ் கொலம்பியா மாநிலத்தில் 2 இலட்சத்து 50 ஆயிரம் ஏக்கர் காடுகள் எரிந்தன. அதனால் ஏற்பட்ட கந்தகத்துகள்கள், காற்று மண்டலத்தின் மேற்பரப்பில் படிந்து, இங்கிலாந்தில் இருந்தவர்களுக்கு, நிலவு நீலமாகக் காட்சியளித்தது.

இதே போல் 1883ம் ஆண்டு ஒகஸ்ட் 27ம் திகதி ஃப்ரக்டோவா என்ற எரிமலை



கொந்தளித்தபோது எழுந்த புகையின் காரணமாக, நிலவு அங்குள்ளவர்களுக்குப் பச்சை நிறமாகக் காட்சியளித்தது.

இதற்கடுத்த ஆண்டான 1884ம் ஆண்டு ஜனவரி 17ம் திகதி சுவீடனின் தலைநகரான ஸ்டோக்ஹோம் நகரத்தில் உள்ளவர்களுக்குப் பச்சையாகக் காட்சியளித்தது.

## உலகின் முதன்மைகள்

★ வீடுகளுக்கு முதன் முதலாக இலக்கம் கொடுப்பது ஃபிரான்ஸ் நாட்டில்தான் 1463ல் தொடங்கியது. அரசருடைய ஆட்கள் திடீரென்று ஒருநாள் வந்து, வீடுகளுக்கு உளியால் எண்களைச் செதுக்கி விட்டுப் போனார்கள்.

★ உலகின் முதல் வானொலி நிலையம் இங்கிலாந்தில் 1921ல் ஏற்படுத்தப்பட்டது.

★ அச்சில் வெளியான முதல் நூல் இலத்தீன் மொழியில் எழுதப்பட்ட புனித வேதாகமம் ஆகும். இது 14ம் நூற்றாண்டில் ஜெர்மனியில் உருவானது.

★ சாள்ஸ் மகடோன் என்ற அவுஸ்திரேலியர்தான் முதன் முதலில் மழைக்கோட்டைக் கண்டுபிடித்தார்.

★ உலகின் முதல் பெண் விமானி இஸ்ரேலைச் சேர்ந்த மிஸ். யேல் பிங்கல்ஸ்டீன் என்பவராவார்.

## முக்கிய வருமானங்கள்

மொனாக்கோ, ஐரோப்பாக் கண்டத்தில் உள்ள சிறிய நாடு. இது இத்தாலி அருகே ஃபிரான்ஸ் நாட்டின் எல்லைக்குள் அமைந்திருக்கிறது. இந்நாட்டின் முக்கிய வருமானம் சுற்றுலாப் பயணிகளின் வருகை மூலம் கிடைக்கும் வருமானம்.




சான்மரினோ என்பது ஐரோப்பாக் கண்டத்தில் உள்ள இன்னொரு சிறிய நாடு. இதுவும் இத்தாலி அருகே உள்ளது. இந்நாடு முத்திரைகளை அச்சிட்டு விற்பனை செய்வதில் முன்னணியில் இருக்கிறது. முத்திரை சேகரிப்பவர்களுக்கென பிரத்தியேக முத்திரைகளை சான்மரினோ வெளியிடுகிறது.

பசிபிக் தீவிலுள்ள ஒரு சிறிய நாடு நவ்ரு. இந்நாட்டின் மக்கள் தொகை 10 ஆயிரத்திற்கும் குறைவுதான். இந்நாட்டிற்கு 'பறவைகளின் உரம்' மூலம் நிறைய வருமானம் கிடைக்கிறது.

இங்குள்ள ஒருவகைப் பறவைகளின் எச்சத்தைச் சேர்த்து உரமாக ஏற்றுமதி செய்து அதன் மூலம் நவ்ரு பணம் சம்பாதிக்கிறது.


படிப்பகம்

www.padippakam.com

# டிசம்பர் பௌர்ணமி

## 15

மர்மம், காதல் குடும்ப நயம் கலந்த விறு விறு தொடர்

க்ரைம் சக்கரவர்த்தி ராஜேஷ்குமார்

**முன்கதை சுருக்கம்**

பிரபல தொழிலதிபர் ருத்ரமூர்த்தியின் ஒரே மகன் நித்தியன். பம்பாயில் சிறையிலிருந்து விடுதலையாகி வருபவனை வெளிநாட்டில் இருந்து வருபவனாகக் கூறி விசாலிக்கு மணம்முடிக்க திட்டமிடுகிறார். நித்தியனோ சாந்தாவைக் காதலிக்கிறான். நித்தியன் சிறையில் இருந்து வந்தவன் என்ற விடயம் விசாலி வீட்டுக்கு எப்படியோ தெரிந்துவிட்டது. அவ்வாறு இருந்தும் கல்யாணம் செய்ய சம்மதம் என்கின்றனர். நித்தியனோ சாந்தாவை கல்யாணம் செய்ய விரும்புகிறான். சாந்தாவை கல்யாணம் செய்தால், தான் தற்கொலை செய்வேன் என்று தந்தை ருத்ரமூர்த்தி மிரட்டுகிறார். நித்தியன் பணிவதாக நடிக்கிறான். இனி......

பொலிஸ் ஸ்டேஷன் வாசலில் காரை நிறுத்தி விட்டு உள்ளே போனார்கள் நித்தியனும் முகுந்தனும். எதிர்ப்பட்ட கான்ஸ்டபிள் ஒருவரிடம் நித்தியன் கேட்டான்,

"இன்ஸ்பெக்டர் ராஜகணேஷைப் பார்க்கணும்!"

"அவர் ரிக்கார்ட்ஸ் ரூம்ல இருக்கார். ஒரு பத்து நிமிஷத்துல வந்துடுவார். உட்காருங்க சார்."

சுவரோரமாய் போட்டிருந்த பெஞ்சில் உட்கார்ந்தார்கள்.

பதினைந்து நிமிஷம் கரைந்து, காணாமல் போயிருந்தபோது, இன்ஸ்பெக்டர் ராஜகணேஷ் நான்கைந்து ஃபைல்களோடு தன் மேஜைக்கு வந்தார். நித்தியன், முகுந்தன் மேல் பார்வையைப் போட்டபடி புருவங்களை மேலே உயர்த்தினார்.

"யாரு?"

நித்தியன் எழுந்து பக்கத்தில் வந்தான்.

"சார்... இங்கே இன்ஸ்பெக்டர் ராஜகணேஷ்?"

"நான்தான்!"

"என் பேர் நித்தியன். உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்."

"உட்காருங்க."

உட்கார்ந்ததும் கேட்டார்.

"என்ன விஷயம்?"

நித்தியன் சற்றே வேகமாய் பேச்சை ஆரம்பித்தான்.

"சார்... சாந்தாங்கிற பொண்ணை அவ இருக்கிற ஹாஸ்டலுக்குப் போய் கீழ்த்தரமான முறையில் மிரட்டிட்டு வந்திருக்கீங்களே... இது எந்த விதத்துல நியாயம் சார்?"

ராஜகணேஷ் முகத்தில் எந்தவித உணர்ச்சியையும் காட்டிக் கொள்ளாமல், குரலில் அலட்சியத்தைக் கலந்து கொண்டு கேட்டார்.

"அந்த சாந்தாவுக்கு நீங்க என்ன வேணும்?"

"நான் அவளைக் கல்யாணம் பண்ணிக்கப் போகிறவன்."

"அப்படீன்னா, இப்போ லவ்வர்ஸ்?"

"ஆமா."

"சரி... இப்போ உங்க புகார் என்ன?"

"சாந்தா ஒரு குடும்பப் பொண்ணு. ஷி ஈஸ் நாட் ஏ ப்ராஸ்டிட்யூட்... அவளை ஒரு மோசமான பொண்ணு மாதிரி நினைச்சுட்டு அவ தங்கியிருக்கிற ஹாஸ்டலுக்கே போய் இன்டீஸண்டா என்கொயரி பண்றது எந்த விதத்துல நியாயம் சார்?"

ராஜகணேஷ் லேசாய் முகம் சிவந்தார்.

"நியாய அநியாயத்தைப் பத்தி ஒரு பொலிஸ் இன்ஸ்பெக்டரான எனக்கு நீங்க சொல்லித்தர வேண்டியது இல்லை. ஒரு புகார் அடிப்படையிலதான் அந்தப் பொண்ணை நான் விசாரிக்க வேண்டி வந்தது."

"என்ன புகார்?"

"டெலிஃபோன் க்ளீனிங் வேலையில் ஈடுபட்டிருக்கிற சில பெண்கள் பணக்கார வீட்டுப் பையன்களோடு ஜாலியா இருந்துட்டு அதுக்கப்புறம் வயித்துல குழந்தை உண்டாயிட்டதா சொல்லி ப்ளாக் மெயில் பண்ணி பணம் பறிக்கிற வேலையைச் செய்யறதா புகார்."

"புகார் யார் கொடுத்தது?"

"அதையெல்லாம் உங்ககிட்ட சொல்லிக்கிட்டிருக்க வேண்டியது இல்லை. எங்களுக்கு வந்த புகார் உண்மையா பொய்யான்னு விசாரிக்கிறதுக்காக டெலிஃபோன் க்ளீனிங் துறையில் வேலை செய்யும் பல பெண்களை இது சம்பந்தமா என்கொயரி பண்ணினேன். அந்தப் பெண்களில் உங்க சாந்தாவும் ஒண்ணு. எஸ்....ஐ...பொலிஸ் ஆபீஸர் ஒரு புகார் சம்பந்தமா யாரையும் விசாரிக்க எனக்கு உரிமை இருக்கு."

"நீங்க சாந்தாவை விசாரிக்கலை. மிரட்டியிருக்கீங்க. அவளை மோசமான வார்த்தைகளால திட்டி கேவலப்படுத்தியிருக்கீங்க. எல்லாத்துக்கும் மேலே ஸ்டேஷனுக்கு வரச் சொல்லி ஸ்டேட்மெண்ட் எழுதிக் கொடுக்கச்சொல்லி நிர்ப்பந்தம் பண்ணியிருக்கீங்க. ஒரு மணிநேரத்துக்குள்ளே ஸ்டேஷனுக்கு வரலைன்னா யூனிஃபார்மோடு ஜீப்ல வந்து இழுத்துட்டு போவேன்னு சொல்லியிருக்கீங்க."

"ஆமா... சொன்னேன்!"

"ஒரு ஃபேமிலி லேடிகிட்ட இப்படித்தான் அநாகரிகமா என்கொயரி பண்றதா?"

"பொலிஸ் என்கொயரி எப்பவுமே கொஞ்சம் ஹார்ஷாத்தான் இருக்கும். விசாரணையில் கொஞ்சி பேசிட்டிருக்க முடியாது. உண்மையை வரவழைக்கிறதுக்காக சில சமயம் கொஞ்சம் வரம்பு மீறியும் பேச வேண்டி வரலாம்!"

"அப்படி நீங்க பேச வேண்டியது ஒரு கிரிமினல்கிட்ட; ஒரு அப்பாவி பொண்ணுகிட்ட இல்லை."

ராஜகணேஷ் தன் சுட்டுவிரலை உயர்த்தினார்.

"லுக் மிஸ்டர் நித்தியன்! யாரை எப்படி என்கொயரி பண்ணணும்னு எங்களுக்குத் தெரியும். நீங்க ஒண்ணும் எங்களுக்குக் கத்துக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை."

"மிஸ்டர் இன்ஸ்பெக்டர்... குற்றவாளிகளைத் தண்டிக்கவும் நல்லவங்களுக்கு பாதுகாப்பாக இருக்கவும்தான் பொலிஸ் டிபார்ட்மெண்ட். உங்களுக்கு அதிகாரம் கொடுத்திருங்காங்க என்கிற ஒரே ஒரு காரணத்துக்காக அதை நீங்க துஷ்பிரயோகம் பண்றது சரியில்லை!"

நித்தியன் அழுத்தம் திருத்தமாய் சொல்லிவிட்டு எழுந்தான்.

அதுவரைக்கும் பேசாமல் இருந்த முகுந்தன் இப்போது வாயைத் திறந்தான்.

"இன்ஸ்பெக்டர்... வீ ஆர் எஜுகேடட் அண்ட் கல்ச்சர்ட் பீப்பிள். ஒரு பொண்ணை யார் டீஸ் பண்ணினாலும் அது குற்றம்தான். இனியொரு தடவை நீங்க அந்தத் தப்பை பண்ணினா, நாங்க உங்கமேல 'டீ பேமேஷன் சூட்' போட வேண்டியிருக்கும். உங்க யூனிஃபார்முக்கு எவ்வளவு அதிகாரத்தை அந்தச் சட்டம் கொடுத்திருக்கோ அதை மட்டும் எடுத்துக்குங்க போதும்..."

ராஜகணேஷ் திகைத்துப் போய் உட்கார்ந்துவிட, நித்தியனும் முகுந்தனும் ஸ்டேஷனை விட்டு வெளியே வந்தார்கள்.

ஸ்டேஷன் படியிறங்கும்போது நித்தியன் சட்டென்று பிரேக் போட்ட மாதிரி நின்றான்.

முகுந்தன் வியப்பாய் பார்த்தான்.

"என்ன நித்தியன் நின்னுட்டே?"

"அங்கே பாரு!"

பார்த்தான்.

விசாலி கைனடிக் ஹோண்டா ஸ்கூட்டருக்கு சாய்ந்து நின்று மார்புக்கு குறுக்காக கைகளைக் கட்டி நின்றிருந்தாள்.

"என்ன நித்தியன்? இவ வந்து இப்படி நிக்கறா?"

"எங்கே போனாலும் துரத்திட்டு வந்துடறாளே?"

"இப்ப என்ன பண்றது?"

"வா பேசிப் பார்ப்போம்."

ரோட்டைக் கடந்து விசாலியை நெருங்கினார்கள். நித்தியன் ஒரு அவஸ்தை சிரிப்போடு கேட்டான்,

"என்ன விசாலி இந்தப் பக்கம்?"

விசாலியின் முகத்தில் இப்போது ஒரு இறுக்கம் பரவியிருக்க, கண்களில் வழக்கமாக காணப்படும் குறுகுறுப்பு மிஸ்ஸிங்.

விசாலி நித்தியனையே சில விநாடிகள் வரை பார்த்துக் கொண்டிருந்துவிட்டு மெல்ல உதடுகளை அசைத்தாள்.

"இனிமேலாவது நாம உண்மை பேசலாமா?"

"உண்மையா? என்ன உண்மை?"

"தெருமுனையிலே ஒரு ரெஸ்டாரெண்ட் இருக்கு. சத்யா ரெஸ்டாரெண்ட். அங்கே வாங்க பேசிக்கலாம்."

ஸ்கூட்டரின் செல்ஃப் ஸ்டார்ட்டரின் மேல் தன் வலது கைக் கட்டை விரலை வைத்து அழுத்தினாள் விசாலி.

❖❖

'சத்யா ரெஸ்டாரெண்ட்.'

கூட்டம் அதிகமில்லை.

ஒரு மூலையோர மேஜையைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு உட்கார்ந்தார்கள். ஆர்டருக்காக வந்து நின்ற பேரரிடம்! "மூணு ரோஸ் மில்க்" என்று சொல்லிவிட்டு நித்தியனை ஏறிட்டாள் விசாலி.

"உங்களைப் பார்த்துப் பேசறதுக்காக உங்க கம்பெனிக்கு வந்தேன். நீங்க வெளியே கிளம்பிட்டீங்க; ஃபாலோ பண்ணினேன். பொலிஸ் ஸ்டேஷன் வரைக்கும் போயிட்டீங்க. என்ன விஷயம்? எதுக்காக இந்த கண்ணாமூச்சி ஆட்டம்?"

"விசாலி... வந்து...வந்து..."

"கற்பனைக் கதை எதுவும் எனக்கு வேண்டாம். எனக்கு வேண்டியது அக்மார்க் உண்மை. எதுக்காக பொலிஸ் ஸ்டேஷன் வரை வந்திருக்கீங்க?"

நித்தியன் முகுந்தனைப் பார்க்க அவன் தன் நெற்றியைக் கீறிக்கொண்டு "இனிமே எதையும் மறைக்க வேண்டாம் சொல்லிடு...!" என்றான்.

"என்னால் முடியாது. நீயே சொல்லிடு?"

"இட்ஸ் ஓ.கே..." தோள்களை குலுக்கிக் கொண்டே முகுந்தன் விசாலியை நேர் பார்வை பார்த்துக்கொண்டு சொன்னான்:

"மிஸ் விசாலி! நித்தியன்-சாந்தா கல்யாணம் நாளைக்கு காலையில கோயில்ல




வச்சு நடக்கப் போகுது. ரெண்டு பேருமே ரொம்ப நாளா லவ்வர்ஸ். நித்தியனோட அப்பாவுக்கு இந்த காதல் விவகாரம் பிடிக்கலை. சினிமாவில் வர்ற வில்லன் மாதிரி ஏதேதோ தொந்தரவு கொடுத்துட்டிருக்கார். அதனோட உச்சக்கட்டம்தான் நாங்க பொலிஸ் ஸ்டேஷன் வரைக்கும் போனது..."

முகுந்தன் சொல்லி முடிக்க நித்தியன் விசாலியின் முகத்தைப் பயமாய்ப் பார்த்தான்.

அவள் உதட்டில் ஒரு புன்னகை ஒட்டியிருந்தது.

"நித்தியன்... என்னை நீங்க கல்யாணம் பண்ணிக்கிற விஷயத்தில் அவ்வளவு தீவிரம் காட்டாதபோதே எம் மனசுல ஒரு சந்தேகம் வந்தது. பட் ஜெயிலுக்குப் போய்ட்டுவந்த கில்டி கான்ஷியஸ் காரணமா ஒருவேளை தயக்கம் காட்டறீங்களோன்னு நினைச்சேன். இப்பத்தான் உண்மையான காரணம் வருது."

"ஸாரி... விசாலி...நான்...வந்து..."

"எதுக்காக ஸாரி?"

"என்னோட இந்த முடிவு உனக்கு அதிர்ச்சியையும் மன வருத்தத்தையும் தரலையா?"

"அதிர்ச்சிதான். மனவருத்தம்தான். அதுக்காக சினிமா கதாநாயகி மாதிரி ஸோலோ ஸாங் பாடச் சொல்றீங்களா? நெவர், எதையுமே நான் ஸ்போட்டீவாத்தான் எடுத்துக்குவேன். ஆசைப்பட்ற பொருள் கைக்குக் கிடைக்கலையேங்கிறதுக்காக அழுது ஆர்ப்பாட்டம் பண்ணி மத்தவங்க சந்தோஷத்தை பாழ் பண்றதுல எனக்குக் கொஞ்சம் கூட விருப்பம் கிடையாது. உங்களுக்கு இப்படியொரு காதல் விவகாரம் இருக்கிறதை லேசா 'ஹிண்ட்' பண்ணியிருந்தாக்கூட போதும்... ஒரு பொக்கேயைக் கொடுத்து வாழ்த்து சொல்லிட்டு நான் பாட்டுக்கு போயிட்டிருப்பேன்."

"விசாலி!"

"ரோஸ் மில்க் வந்தாச்... சாப்பிடுங்க. சாப்பிட்டதும் நாம மூணுபேரும் சாந்தாவைப் பார்க்கப்போறோம். நாளைக்கு நடக்கப்போகிற கல்யாணத்துக்கு யார் தலைமை தெரியுமா?"

நித்தியனும் முகுந்தனும் விழிக்க விசாலி சிரித்துக் கொண்டே சொன்னாள்.

"நான்தான்!"

"விசாலி என்னோட காதல் விஷயத்தை இவ்வளவு ஈஸியா எடுத்துக்குவேன்னு நான் கொஞ்சம் கூட நினைச்சே பார்க்கலை."

"நான் மொதல்ல சாந்தாவைப் பார்க்கணும். பேசணும். சாந்தா இப்போ எங்கேயிருக்கா?"

முகுந்தன் சொன்னான்,

"என்னோட வீட்லதான்."

"உங்க ஃபோன் நெம்பர் என்ன? சாந்தாவுக்கு அட்வான்ஸா ஃபோனிலேயே வாழ்த்துக்களைச் சொல்லிடலாம்."

விசாலி சொல்லிக்கொண்டே தன் வானிடி பேக்கில் இருந்த செல்ஃபோனை எடுத்துக் கொண்டாள். முகுந்தன் தன் வீட்டு டெலிஃபோன் எண்களைச் சொல்ல விசாலி எண்களைத் தட்டினாள்.

மறுமுனையில் ரிங் போயிற்று.

போயிற்று...போயிற்று...

போய்க்கொண்டேயிருந்தது.

மறுமுனையில் ரிஸிவர் எடுக்கப்படவில்லை.

"என்ன மிஸ்டர் முகுந்தன்.... சாந்தா உங்க வீட்ல தானே இருக்கா?"

"ஆமா."

"ரிஸிவரை எடுக்கலியே?"

முகுந்தன் விசாலியிடம் இருந்த செல்ஃபோனை வாங்கி டயல் செய்து பார்த்தான்.

ரிங் போயிற்று

ஒரு நிமிஷம்...இரண்டு நிமிஷம்.. மூன்று நிமிஷம்...

ரிஸிவர் எடுக்கப்படவில்லை.

(பௌர்ணமி தொடரும்)

---

# சதாம் உசேன்

## 27

**அமெரிக்க வல்லாதிக்கத்துக்கு பணியாத இரும்பு மனிதர் ஈராக் அதிபர் சதாமின் உண்மைக் கதை**

ராஜையா



1989 டிசம்பரில் சதாம் புதிய சாதனையை எட்டிப் பிடித்தார்....

சோவியத் யூனியன் தயாரிக்கும் 'ஸ்கட்' ஏவுகணை 300 மைல்கள் மட்டுமே பாய்ந்து சென்று தாக்கக்கூடியது. அந்த ஸ்கட்டை சொந்தத் தொழில் நுட்ப அறிவைக்கொண்டு ஈராக் அபிவிருத்தி செய்தது. சுமார் 1200 மைல் பாய்ந்து சென்று தாக்கக்கூடிய புதிய ஸ்கட்டை தயாரித்தது. 1989 டிசம்பரில் இந்தப் புதிய ஸ்கட்டை ஏவி சோதித்துப் பார்த்தது. சோதனை முயற்சி வெற்றி பெற்றது.

சதாமுக்குக் கிடைத்த இந்த வெற்றியைப் பார்த்து இஸ்ரேல் திடுக்கிட்டது. சதாமுக்கு சுமார் ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருக்கும் எதிரி இஸ்ரேல் மட்டும் தான் என்பதால், தன்னைத் தாக்கவே இந்தப் புதிய ஏவுகணை என்று சரியாய் யூகித்த இஸ்ரேல் வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு அலறியது.

இதைப் பார்த்து இஸ்ரேலின் ஆப்த நண்பனான அமெரிக்கா அதிர்ந்தது...

இப்போது இஸ்ரேல் இருக்கும் திசை நோக்கி புதிய ஏவுகணைத் தளங்கள் அமைப்பதில் சதாம் மும்முரமாக ஈடுபட்டிருப்பதைச் செயற்கைக்கோள் எடுத்த புகைப் படம் காட்டுவதால் இஸ்ரேலின் பயமும், அமெரிக்காவின் சந்தேகமும் உண்மை என்றாகிவிட்டது.

சதாம் இஸ்ரேலைத் தாக்கத் தயாராகி வருகிறார்...

இஸ்ரேலைத் தாக்கினால் அது அமெரிக்காவின் ஆதிக்கத்துக்கு நேரடியாக விடும் சவால்...!

"விடக்கூடாது. சதாமை இனியும் விட்டுவைக்கக்கூடாது. அவர் ஆட்சியில் இருக்கிறவரை இஸ்ரேலுக்கும், அமெரிக்காவின் ஆதிக்கத்துக்கும் ஆபத்து இருந்துகொண்டேதான் இருக்கும். அவரை ஆட்சியிலிருந்து விரட்டினால்தான் நமக்கு நிம்மதி!" என்று அமெரிக்க அதிகாரிகள் தீர்மானம் செய்தார்கள்.

'சதாம் ஆட்சியைத் தூக்கி எறிய என்ன வழி?' என்று ஆலோசித்தார்கள்.

இதற்குமுன் இந்தக் காரியத்தைச் செய்து முடிக்கும் பொறுப்பு சி.ஐ.ஏ.மிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆனால் சி.ஐ.ஏ.யின் முயற்சிகளையெல்லாம் சதாம் சாமர்த்தியமாக முறியடித்து விட்டார்.

ஆகவே, இனி சி.ஐ.ஏ.மிடம் பொறுப்பை ஒப்படைப்பதோடு சும்மா இருந்துவிடக்கூடாது. கூடுதலாக ஏதாவது செய்தாக வேண்டும்...

என்ன செய்யலாம்...?

அமெரிக்க அதிகாரிகள் தங்கள் திட்டத்தை வரிசைப்படுத்தினார்கள்.

சதாம் ஆட்சியைத் தூக்கி எறிய முதலில் பிரசார யுத்தம்!

இரண்டாவதாக பொருளாதார யுத்தம்!

மூன்றாவதாக இராணுவ யுத்தம்!

திட்டம் தயாரானவுடன் அமெரிக்கா, முதல் கட்டமான பிரசார யுத்தத்தைத் தொடங்கியது...

"சதாம் உசேன் உட்பட உலகில் உள்ள எல்லா சர்வாதிகாரிகளையும் தூக்கி எறியுங்கள்...!"

அமெரிக்க ஒலிபரப்பு ஸ்தாபனமான 'வாய்ஸ் ஆஃப் அமெரிக்கா' (VOA) 1990 பிப்ரவரி 14ந் தேதி இப்படியொரு அறைகூவல் விடுத்து பிரசார யுத்தத்தைத் தொடங்கி வைத்தது.

சதாம் எரிச்சலடைந்தார்...

'சர்வாதிகாரிகளைத் தூக்கி எறியணும்! சரி! அமெரிக்காவின் காலை நக்கிப் பிழைக்கும் மன்னர் ஆட்சிகளை...? தூக்கி வைத்துக் கொண்டாடலாமோ?'

அறைகூவல் வெளியான ஐந்தாவது நாள். பாக்தாத்தில் 'அரபு' ஒத்துழைப்பு கவுன்சில் பிரதமர்கள் கூட்டம் நடந்தது. ஈராக், ஏமன், ஜோர்டான், எகிப்து பிரதமர்கள் கலந்துகொண்டார்கள். இக்கூட்டத்தில் சதாம் பேசினார். அப்போது வாய்ஸ் ஆஃப் அமெரிக்காவுக்கும் அதை ஆதரிக்கும் அமெரிக்க அரசுக்கும் வயிற்றைக் கலக்கும் வகையில் ஒரு எச்சரிக்கை வெடிகுண்டை எடுத்து வீசினார்.

"நம் பாரசீக வளைகுடாவில் அமெரிக்க போர்க் கப்பல்களுக்கு என்ன வேலை? அந்நியர் ஆதிக்கத்துக்கு இங்கு இடமில்லை. ஆகவே, அமெரிக்கா உடனே தன் போர்க் கப்பல்களை அப்புறப்படுத்த வேண்டும்!" என்றார்.

அதிரடியும் பதிலடியுமாய் பிரசார யுத்தம் சூடு பிடித்தது...

பிப்ரவரி 24-ந் திகதி ஜோர்டானின் தலைநகரான அம்மானில் 'அரபு ஒத்துழைப்புக் கவுன்சிலின் உச்சி மாநாடு' நடந்தது. இதில் பேசிய சதாம், "அமெரிக்க ஆதிக்கத்துக்கு சவால் விட்டு வந்த சோவியத் யூனியன் இப்போது நாளுக்கு நாள் பலவீனமடைந்து கொண்டிருக்கிறது. இதனால் மத்திய கிழக்கில் தட்டிக் கேட்க ஆளில்லாமல் அமெரிக்கா தன் முழுமையான ஆதிக்கத்தை ஏற்படுத்தி விடும் அபாயம் உருவாகியிருக்கிறது. இனி இஸ்ரேலின் கை ஓங்கிவிடும் என்று சக அரபு நாடுகளை எச்சரிக்கிறேன்.

"அடுத்த ஐந்தாண்டுகளில் அரபுநாடுகள் மீது இஸ்ரேல் மீண்டும் தாக்குதல் தொடுக்கக்கூடும். இஸ்ரேல்- அரபு யுத்தம் மீண்டும் வெடிக்கக்கூடும். அப்போது புனித எருசலேமின் பிரகாசமான விளக்குகள் நம் பார்வையில் படும். எருசலேமை மீட்பதற்கான கதவு அப்போது திறக்கும்!" என்றார்.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# உதட்டில் ஒரு மச்சம்

## 16

### சுபா

**இதுவரை**

அரவிந்த் ஒரு பைலட். அவனது மனைவி ஜ்யோதி. அவர்களது நண்பன் விக்ரம். அவனுக்கு ஜ்யோதி மீது ஆசை. இதற்கிடையே அரவிந்த், அமைச்சர் பிரகாஷ் குப்தாவுடன் பைலட்டாக ஓடக்கரை கிராமத்திற்குச் செல்கிறான். அக்கிராமத்தை வளைத்துப்போட அமைச்சர் திட்டமிட அதை எதிர்க்கிறார்கள் கிராம இளைஞர்கள். பொலிஸ் சுடுகிறது. சீனு இறக்கிறான். கிராம இளைஞர்கள் கொதிக்கின்றனர். அமைதி வழி சரிப்படாது என்று ஆயுதம் ஏந்த முடிவு செய்கின்றனர். நிலத்தை அபகரிப்பதில் அமைச்சர் தீவிரம் காட்டுகிறார். அமைச்சரைக் கொல்ல இளைஞர்கள் திட்டமிடுகின்றனர். அமைச்சரை கொலை செய்ய செல்லும் கைலாஷ் மாட்டிக்கொள்கிறான். மின்சார வயரைப் பிடித்து தற்கொலை செய்கிறான். அடுத்தத்திட்டம் தயாராகிறது.

**இனி....**

ஹேமநாத் ஜ்யோதியின் தலையை அன்பாக வருடிக்கொடுத்தார். "அழாதே மகளே!" என்றார். "தப்பு செய்தவர்களை நாம் சும்மா விட வேண்டாம்... ஆஸிட் ஊற்றியவனைப் பார்த்ததாகச் சொன்னாயே... விவரங்களை பொலிசிடம் சொல்... அந்தக் கயவனைப் பிடித்து விடலாம். ஆஃப் ஆல் தி பர்ஸன்ஸ்- அரவிந்தின் முகத்தில்... சச் ஏ நைஸ் பாய்... பீடா விற்பவனிலிருந்து பிர்லா வரைக்கும் எல்லோரும் அவனிடம் நல்லவர்களாகத்தானே இருந்திருக்கிறார்கள்? அவனை வெறுக்கக் கூட உலகத்திலே ஆள் இருக்க முடியுமா?"

ஹேம்நாத்தைப் பார்த்ததும் பதறி எழுந்த டாக்டரை அமரச் சொல்லி சைகை செய்தார். "அமைச்சர் பர்ஸனல் இன்ட்ரஸ்ட் எடுத்துக் கொள்ளச் சொன்னார். டாக்டர்! அரவிந்தை எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் சரிப்படுத்தி, டிஸ்சார்ஜ் பண்ண வேண்டியது உங்கள் பொறுப்பு!"

"யெஸ் சார்!"

"நீ கவலைப்படாதம்மா... அரவிந்த் முகத்தில் ஆஸிட் ஊத்தியவனை நிச்சயமாக பொலிஸ் பிடித்துவிடும்... எத்தனை நாட்களாகும் டாக்டர், அரவிந்தைச் சரி செய்ய?"

"முதலில் இரண்டு வாரமாவது ஆஸ்பத்திரியில் இருக்க வேண்டும். தோல் காயங்களை ஆற்றுவதற்கு. அப்புறம் பார்ட் பார்ட்டாக சர்ஜரி செய்து முகத்தை மாற்ற வேண்டும். இரண்டு மூன்று மாதங்கள்கூட ஆகலாம்."

"அதுவரை அமைச்சருக்கு நான் வேறொரு நல்ல பைலட் வேறு தேடியாக வேண்டும். அவருக்கு அரவிந்த் வந்தாக வேண்டும். எப்போதும்! டேக் கேர்!" ஹேம்நாத் அன்போடு பேசுகிறாரா, ஆத்திரமாகப் பேசுகிறாரா என்பது அவர் முக அமைப்பிலிருந்து புரியவில்லை.

"டாக்டர், என் அரவிந்தை பழைய படி ஆக்கித் தருவீங்களா, டாக்டர்?"

"முற்றிலும் பழைய முகம் கிடைக்காதம்மா... ஆஸிட் தழும்புகள் இல்லாமல் போக வைக்கலாம். ஆனால் முகத் தோற்றம் சற்று மாறிவிடும். என்னால் முடிந்தவரை பழைய நிலைக்குக் கொண்டுவரப் பார்க்கிறேன். அவருடைய ஃபோட்டோக்கள் இருந்தால் கொண்டு வந்து கொடுங்கள்!"

"யெஸ் டாக்டர்."

"மேடம், பொலிஸ் இன்ஸ்பெக்டர் உங்களிடம் ஸ்டேட்மெண்ட் வாங்க காத்திருக்கிறார்," என்றாள் வெள்ளை உடுப்பு நர்ஸ்.

● + ○

"வெற்றி... என்று சொல்லி என்னால் கொண்டாட முடியவில்லை ஷிவா. வேதனைதான் அழுத்துகிறது. நம்முடைய தேவைக்காக ஒரு அப்பாவியின் முகத்தில் ஆஸிட் ஊற்றியது நான் சம்மதத்தோடு செய்த வேலை இல்லை."

"நானும் மனிதன் தானே ஷிவா...?"

"இல்லை இப்போது தலைவன்!"

"இவ்வளவு ஏற்பாடுகள் செய்தபின், திட்டத்தில் வேறு எந்தக் கோளாறும் வந்து விடக்கூடாதே என்று கவலை வேறு என்னை அரிக்கிறது."

"வெற்றி நிச்சயம் தேவ்."

"விமானப் பயிற்சி உனக்கு முடிந்த பிறகுதான் உன்னை நான் உபயோகப்படுத்த முடியும், ஷிவா."

"இன்னும் நான்கே நாட்கள்... எனக்கு பிரத்தியேக ஆர்வத்துடன் அதிக நேரம் சொல்லித்தருகிறார் உன் நண்பர்."

"இந்த ஃபோட்டோவைப் பார் ஷிவா. இதில் இருப்பவன்தான் அரவிந்த்."

தேவேந்திரன் அடிவானத்தைப் பார்த்துக்கொண்டு பேசினான்.

கடற்கரைக் காற்று அவர்களுடைய சட்டைகளுக்குள் புகுந்து பலூன் ஏற்படுத்தி வீசிக் கொண்டிருந்தது.

ஷிவா மணலைக் கையில் எடுத்து விரலிடுக்குகள் வழியாக அதை சரிய விட்டுக் கொண்டிருந்தான்.

"மேம் போக்காகத் திட்டமிடாமல் அழுத்தமாகத் திட்டமிட வேண்டும் என்று யோசித்ததால், வந்தது தானே தேவ் இவ்வளவு வேதனையும்?"

"ஆமாம்... அடுத்து உன்னையும் வேதனைப்படுத்தப் போகிறேன் என்ற நினைப்பே கசப்பாயிருக்கிறது."

"உணர்ச்சி வசப்படக் கூடாது என்று எங்களுக்கெல்லாம் சொல்லிக்கொடுத்து விட்டு இப்போது நீயே..."

ஷிவா சற்று நேரம் அந்தப் புகைப் படத்தைக் கண்கொட்டாமல் பார்த்தான்.

"ஆச்சரியம்! உடல் அமைப்பு, உயரம், சுருள் முடி எல்லாமே என் சாயலில் இருக்கிறது."

"தப்பு.... அவன் சாயலில் நீ இருப்பதால் தான் உன்னைத் தேர்ந்தெடுத்தேன். முகம் மட்டும்தான் காட்டிக்கொடுக்கும் என்பதால் அவன் முகத்தை அழித்துவிட்டோம். அவனுக்கு ஒவ்வொரு கட்டமாக பிளாஸ்டிக் சர்ஜரி நடக்கப்போகிறது. அதைச் செய்யும் அல்போன்ஸ் காஸ்மெட்டிக் எக்ஸ்பர்ட். அவருடைய அஸிஸ்டென்ட் டாக்டர் மகேஷ் அதே அளவு எக்ஸ்பர்ட். அவர்தான் நம்முடன் ஒத்துழைக்கப் போகிறவர். டெல்லியில் நடக்கும் சர்ஜரியின் ஒவ்வொரு கட்டத்தையும் உடன் இருந்து கவனிக்கப் போகிறவர். மெட்ராஸில் ஐ.ஜே.நர்ஸிங் ஹோமில் அவர் விசிட்டிங் டாக்டர். அங்கே நமக்காக ஒரு பிரத்தியேக ரூம் ஒதுக்கப்படுகிறது. அங்கே நீ இருப்பாய்."

"இதற்கெல்லாம் எக்கச்சக்கமாகச் செலவாகுமே தேவ்!"

"செலவாகிறதுதான். ஆனால் எக்கச் சக்கமில்லை. பல துறைகளில் நமக்கு உதவ நண்பர்கள் இருக்கிறார்கள். ஆர்மியில்கூட நண்பர்கள் இருப்பதால்தான் காரியங்கள் சுலபமாக நடந்துகொண்டிருக்கின்றன. பணம் டொனேஷன் தருவதற்குப் பணக்கார நண்பர்கள் இருக்கிறார்கள். நான் என் வாழ்க்கையில் இழந்தது ஒரு கால்... சம்பாதித்தது நிறைய நண்பர்கள், ஷிவா."

"பிளாஸ்டிக் சர்ஜரி மூலம் என் முகத்தை அரவிந்தின் முகம் போல மாற்றிவிடமுடியுமா தேவ்?"

"அப்படியே ட்வின்ஸ் போல-இரட்டைப் பிறவி போல-மாற்ற முடியாது. உயரம், அகலம், கழுத்து நீளம் எல்லாம் ஆச்சரியமாக இருவருக்கும் ஒரே அளவு. தலைமுடி கூட அதே போல இருப்பதால் சில மைனர் மாற்றங்கள் போதும். அரவிந்தின் முகத்தை ஆஸிட் கரைத்து விட்டது. தோல் சுருங்கியதால், கண் இரப்பை இழுக்கப்பட்டு இடது விழியின் வெள்ளை அதிகம் தெரிகிறது. தவிர மாதத்திற்கொரு தரம் அவன் முகம் கொஞ்சம் கொஞ்சமாக சர்ஜரி மூலம் மாறிக் கொண்டே வருவதால் சின்னச் சின்ன மாற்றங்களை உன் முகத்தில் பார்த்தால்கூட யாரும் பொருட்படுத்த மாட்டார்கள். என்ன ஒரே ஒரு பிரச்சனை என்றால், தொழிற்சாலை திறக்குமுன் அவன் மறுபடி பிளேன் ஓட்டப் போவானா, அல்லது இன்னமும் நாளாகுமா என்பது புரியவில்லை. எத்தனை நாளானாலும்.... மாதமானாலும் நாம் பொறுமையுடன் காத்திருக்கத்தான் வேண்டும்."

"ஒருவேளை அவனை பைலட் வேலையிலிருந்து விலக்கி விட்டு, வேறொருத்தரை நிரந்தரமாக அங்கே போட்டு விட்டால்.....?"

"அப்படியொரு அபசகுனமாக நான் நினைத்தே பார்க்கவில்லை. அரவிந்த் அமைச்சரின் செல்லப்பிள்ளை. அவனைத்தான் அவர் மிகவும் விரும்புவார். ரொம்ப நாள் விலகி இருக்க மாட்டான்."

"நம்பேரில் சந்தேகம் வராதே?"

"அரவிந்த் டில்லியில். நீ சென்னையில். இரண்டு பேரையும் உடனே உடனே ஒப்பிட்டுப் பார்க்க டாக்டர் மகேஷைத் தவிர, வேறு யாரும் இல்லை அதனால் சந்தேகப் படுவதற்கு வாய்ப்பு இல்லை."

அடிவானம் கறுத்து நட்சத்திரங்கள் உறுமத்துவங்கின. அரைநிலா சிவந்த மேகங்களுக்குப் பின்னிருந்து எட்டிப் பார்க்கத் துவங்கியது. தூரத்தில் புள்ளியாகத் தோன்றிய ஒரு விமானம் குருவியாகி, கழுகாகி, விமானமாகி இரைச்சலிட்டுப் போனது. ஷிவா கனவுகளுடன் அந்த விமானத்தைக் கண்களால் தொடர்ந்தான்.

★★★



விக்ரம் தெருவைக் கடக்கும் போது, தன் ரூம் வாசலில் நின்ற இரண்டு பேரைப் பார்த்தான். 'யார் இவர்கள்? எதற்காக இங்கே வந்திருக்கிறார்கள்? நான்கைந்து நாட்களாக ஆபீஸ் போகாததால் யாரையாவது அனுப்பியிருக்கிறார்களா?'

நடைபாதையில் ஏறி கட்டடத்தை நெருங்கினான்.

"யார் நீங்கள்?"

"விக்ரமுக்காகக் காத்திருக்கிறோம்!"

"நான் தான் விக்ரம்."

ஒரு ஆள் ஓரடி முன்னால் வைத்து விக்ரமின் காலரைப் பிடித்து நெருங்கினான். "ராஸ்கல் நான்கைந்து நாட்களாக எங்கேடா போயிருந்தாய்?"

"ஏய்... யார் அது... என்னை யாரென்று தெரிந்தால்..."

"ஜனாதிபதியின் கஸின் பிரதர்! உன்னைத் தெரியாதாடா? டில்லி பொலிஸ்!" என்று பேட்ஜைக் காட்டி, "உன்னை அரஸ்ட் பண்ணக் காத்துக் கிடக்கிறோம்!"

"என்னையா? அரெஸ்ட்டா? பிராந்தி சாப்பிடுவது ஈ.பி.கோ. குற்றமா?"

"அடுத்த ஆள் முகத்தில் ஆஸிட் அடிப்பது.....?"

"ஆஸிட்டா? வாட் டு யூ மீன்?"

"இத்தனை நாளாய் எங்கே போனாய்? முதலில் அதைச் சொல்!"

"மனசு சரியில்லை. ஆக்கராவில் என் நண்பனுடன் தங்கிவிட்டு வருகிறேன். ஆஸிட் என்றீர்களே... என்ன அது?"

"அரவிந்த் முகத்தில் ஆஸிட் ஊற்ற ஜலால் என்பவனுக்கு நீ ஐயாயிரம் ரூபாய் கொடுத்ததைப் பார்த்த சாட்சி இருக்கிறது."

"அபாண்டம்! அரவிந்த் என் நண்பன். அவன் முகத்தில் நான் ஏன் ஆஸிட்டை... நோ... நீங்கள் எங்கோ தவறு செய்கிறீர்கள்."

"உன்னை இன்னும் ஜீப்பில் நெட்டித் தள்ளி ஏற்றாமல் இருக்கிறேனே அதுதான் தவறு."

விக்ரம் திமிறத் திமிற ஜீப்பிற்குள் திணிக்கப்பட்டான்.

(○ – வரும் – ○)

# கவியரசுவின் சுயசரிதை

## 35

**கவியரசு கண்ணதாசன் எழுதிய–அவரது சுயசரிதத்தின் முக்கிய பக்கங்கள் உங்கள் முன் விரிகின்றன. 'எப்படி வாழ வேண்டும் என்பதற்காக அல்ல; எப்படி வாழக்கூடாது என்பதற்கான வழிகாட்டிகள்' இவை....**

"இப்பொழுதே கட்சியில் இருந்து எல்லோரும் ராஜிநாமாச் செய்யவேண்டும்!" என்றொருவர் கூறினார். மதியழகன்தான் இதில் தீவரமாக இருந்தார். சம்பத் எல்லோரையும் அமைதிப்படுத்தினார். சம்பத் செய்த இரண்டாவது தவறு இது. தனது ஆதரவாளர்களின் ராஜிநாமா யோசனையை அன்றைக்கே அவர் ஒப்புக்கொண்டிருந்தால் அண்ணாத்துரையும் கருணாநிதியும் சம்பத்திடம் சரணடைய வேண்டியிருக்கும். காரணம் அன்று பெரும்பான்மையான ஆதரவு சம்பத்துக்கே இருந்தது.

நீலிக்கண்ணீர் வடித்த சம்பத்தின் ஆதரவாளர்கள் பலபேரைத் தன்பக்கம் இழுப்பதற்கு அண்ணாதுரைக்கு ஒரு வாய்ப்பை சம்பத் கொடுத்துவிட்டார். ஏராளமானவர்கள் ராஜிநாமா யோசனை சொன்னபோது அதை மறுத்துவிட்டார்.

ஆத்திரப்படாமல் நிதானமாக இருந்து மறுநாள் பொதுக்குழுவில் கலந்துகொள்ளும்படியும் தீர்மானங்களை வலியுறுத்தும் படியும் கூறினார். பொதுக்குழுவுக்கு சம்பத் வரக்கூடாதென்றும் வந்தால் அவரிடம் கண்ணீர் வடித்து தீர்மானங்களை வாபஸ் வாங்க அண்ணாதுரை வைத்து விடுவாரென்றும் சிலர் கூறினார்கள். அப்படியே பொதுக்குழுவில் சம்பத் கலந்துகொள்வதில்லையென முடிவு செய்யப்பட்டது. அன்று இரவு, எல்லோரும் அங்கேயே தங்கினார்கள். யார் தூங்கினார்கள்! ஒருவரோடொருவர் காரசாரமாக விவாதித்துக் கொண்டு தூக்கத்தையே மறந்துவிட்டார்கள்.

அந்த இரவு ஒரு வேடிக்கையான இரவு, போர்க்களத்தில் முகாமிட்டிருக்கும் படைகள் மறுநாள் பொழுதைப் பற்றியே பேசிக்கொண்டிருப்பதைப் போல அவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். இதுமாதிரி நேரங்களில் அவன் மிகவும் உற்சாகமாக இருப்பான். டீயும் சிகரெட்டுமாக அன்றைய இரவைத் தூங்காமல் கழித்தான்.

பொழுது விடிந்தது. வேலூரிலும் சூரியன் கிழக்கே தான் உதித்தான். கட்சியிலே சிலருடைய இதயங்களைத் தவிர வேறெங்கேயும் இருள் இல்லை. எல்லோரும் அவசர அவசரமாகக் குளித்தார்கள். குழு உறுப்பினர்களுக்கு குழுக் கூட்டம் நடக்கும் இடத்திலேயே பலகாரம் உண்டு. ஆனாலும் "ஓட்டலிலேயே சாப்பிட்டுப் போய்விடுவோம்" என்று அவன் யோசனை சொன்னான்.

"கூடாது, இன்று கண்டிப்பாக அங்கே போய்த்தான் சாப்பிட வேண்டும்!" என்றார்கள் மற்றவர்கள். சாப்பிடும் இடத்திலேயே சண்டை வந்தாலும் தயார் என்பது போல அவர்கள் இருந்தார்கள்.

கட்டட வாசலுக்குள் அவர்கள் நுழைந்தனர். எதிரே ஜீப் கார்கள் பறந்து கொண்டிருந்தன. அடியாட்கள் அங்கு மிங்கும் அலைந்து கொண்டிருந்தார்கள். அதிலே ஆச்சரியம் என்னவென்றால்.... அரசியலையே ஜீவனாம்சமாகக் கொண்டவர்கள் மட்டுமே அண்ணாதுரையின் ஆதரவாளர்களாக இருந்தார்கள். ஆகவே அங்கே அவர்களை அடையாளம் கண்டு கொள்வதும் சுலபமாக இருந்தது. உண்மையிலேயே அது ஒரு போர்க்களம் போலக் காட்சியளித்தது. சம்பத் ஆதரவாளர் அனைவரும் சாப்பாட்டு விடுதிக்குள் நுழைந்தார்கள். அங்கே பயங்கரமான மௌனம் நிலவியது. "இங்கே யாரும் எதையும் பேசக்கூடாது!" என்று ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அவர்களே பேசாமலிருக்கும்போது நாம் பேசலாமா? இவர்களும் பேசாமல் இருந்தார்கள்.

சாப்பிட்டு முடித்து பொதுக்குழு நடக்க விருந்த மண்டபத்திற்குள் நுழைந்தார்கள். அங்கே மூன்று பகுதிகளாக நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. நாலாவது புறத்தில் பொதுச்செயலாளரும் மற்ற நான்கு செயலாளர்களும் அமர்வதற்காக நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. சம்பத் குழுவினர் அனைவரும் ஓர் இடத்தில் அமராமல் மாவட்ட வாரியாகப் பரவலாக அமர்ந்தனர். அண்ணாதுரையின் ஆதரவாளர்களும் ஒவ்வொருவராக வந்து மற்ற நாற்காலிகளில் அமர்ந்தனர்.

வழக்கம் போல் காலதாமதமாகவே அண்ணாத்துரை வந்தார். அவரது ஆதரவாளர்கள்



கை தட்டினார்கள். மற்றவர்கள் கையைக் கட்டிக்கொண்டு சும்மா இருந்தார்கள். குழுவுக்கு வந்திருக்கும் தீர்மானங்களை அந்தந்தச் செயலாளர்கள் பரபரப்பாகப் பிரித்து எடுத்துக் கொண்டிருந்தார்கள். தகராறுக்கு இடமில்லாத பொதுத் தீர்மானங்கள் மளமள வென்று நிறைவேற்றப்பட்டன. பிறகு சம்பத் குழுவின் தீர்மானங்களைக் கையில் வைத்துக் கொண்டு அண்ணாதுரை எழுந்து பேசினார்.

கருணாநிதி ஒன்றும் அறியாத கன்னி போல் உட்கார்ந்திருந்தார். அண்ணாதுரை உருக்கமாகவே தனது பேச்சை ஆரம்பித்தார். "கட்சியில் குழப்பம் வந்து ஏதாவது ஆகுமென்றால் என்னை உயிரோடு காண முடியாது!" என்று அவர் கூறியதும், "ஐயோ அண்ணா" என்று சில பேர் அழுதார்கள். அழுதவர்களின் நடிப்பு, அண்ணாதுரையின் நடிப்பையும் மிஞ்சி நின்றது. அவன் மட்டும் புன்னகை புரிந்து கொண்டிருந்தான். உண்மைக்கும் நடிப்புக்கும் உள்ள வித்தியாசத்தை ஓரளவு கண்டு கொள்ளக் கூடியவன் தானே அவன்!

அவன் சிரித்துக் கொண்டிருப்பதைப் பார்த்து பலபேர் ஆத்திரமாகக் கத்தினார்கள். அண்ணாதுரை தொடர்ந்து பேசினார். "சம்பத் குழுவின் தீர்மானங்களை இப்போது விவாதிக்க வேண்டாம் இந்தச் சூடு தணிந்த பிறகு விவாதிக்கலாம். அதுவரை தீர்மானங்களை ஒத்தி வைக்க விரும்புகிறேன். நான் ஒத்திவைப்பதை ஆமோதிப்பவர்கள் கையைத் தூக்குங்கள்!" என்றார்.

அவர்களுடைய ஆதரவாளர்கள் மட்டுமே கையைத் தூக்கினார்கள். எண்ணிக்கை அதிகமாகத் தெரிய வேண்டும். என்பதற்காக சிலபேர் இரண்டு கைகளையும் தூக்கினார்கள். கை தூக்காதவர்களைப் பற்றி அண்ணாதுரை பேசினார்.

(சரிதம் தொடரும்)

www.padippakam.com

# கண்டுபிடி

# அவளைக் கண்டுபிடி

படலையைத் திறந்துகொண்டு வந்த ராசாத்தியை ஆதரவாய்ப் பார்த்தார் பெரியவர். அவரையறியாமலே பெருமூச்சொன்று வெளிப்பட்டது. எத்தனை அழகுடன்- புதுப் பொலிவுடன்- துடிதுடியென சுற்றி வருபவள். இப்போது எல்லாமே ஓய்ந்து போய் விட்டதான தோற்றம். பதினாறு வயது. படிப்பிலும் கெட்டிக்காரி. ஆனால் எல்லாமே போயிற்று இப்போது.

இரண்டு மாதங்களின்முன் யுத்தம் அவள் தகப்பனைப் பலிகொண்டது. தாய்மட்டுமே. சின்னவயதில் பெரியவர் தூக்கிக் கொஞ்சிய குழந்தை ராசாத்தி. தந்தையை இழந்ததும் அவள் துடிப்பு அடங்கிவிட்டதான தோற்றம். துப்பாக்கிச் சூட்டுக்கு தவறுதலாக (அப்படித்தான் சொன்னார்கள் அவர்கள்!) பலியான தந்தையின் சடலத்தைக் கண்டு அவள் கதறிய காட்சி பெரியவருக்கு



இன்னமும் நெஞ்சில் வலியைத் தரும்.

"மாமி இருக்காங்களா மாமா?" சோர்ந்து போன குரல். "ஏம்மா, ஸ்கூலுக்குப் போகேல்லியா?" பெரியவர் கேட்டார். நிதானமாக, "இல்ல மாமா.. பிடிக்கல!" சொல்லிவிட்டு உள்ளே போனாள் அவள். பெரியவருக்கு நெஞ்சுக்குள் பாரமான உணர்வு. இவள் படிப்புக்கும் அறிவுக்கும் தொடர்ந்து படித்தால் டாக்டராகவோ, என்ஜினியராகவோ வருவாள். அதுதான் அவள் தகப்பனின் கனவும்கூட. கைப்படாத கனவோ? பெரியவருக்கு தன் பிள்ளைகளின் நினைவு வந்தது. பெற்ற பிள்ளைகள் இரண்டுபேர் பெரியவருக்கு- மூத்தவன் பாலா. சந்தேகத்தின் பெயரில் கொண்டு போகப்பட்டவன்; திரும்பி வரவில்லை இதுவரைக்கும். அடுத்தவன் குமாரை இழந்துவிடாமலிருக்க- அவன் மறுக்க மறுக்க வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்துவிட்டார். சொந்த நாட்டிலேயே மகன் உயிருடனா- இல்லையா? என தினம் நினைத்து கண்ணீர் விட்டு அவர் மனைவி நோய் வாய்ப்பட்டுவிட்ட பரிதாபம். பெரியவர் மனம்கூட பாலாவை நினைத்து மருகும். வெளிக்காட்ட மாட்டார். யாரிடம்தான் என்ன சொல்லி என்ன பயன்?

கொஞ்ச நாளாகவே பெரியவருக்கு மனதில் ஓர் எண்ணம். மனைவியிடம்கூட இன்னும் சொல்லவில்லை. யோசித்தார். குமாருக்கும் திருமண வயது. ராசாத்தியை முடித்து வைத்தால் என்ன? தாயை விட்டுப் போவாளா?' கேள்வி வேறு எழுந்தது.

முடிவாக மனைவியிடம் விஷயத்தைச் சொன்னார். அவள் சந்தோஷப்பட்டாள்.

ஆனாலும் ராசாத்தி ஓ.எல். பரீட்சையை எழுத வேண்டுமென விரும்பினார் பெரியவர். ராசாத்தியின் அம்மாவும் திருமண விடயத்தை மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டாள். மகள் வாழ்வு சிறக்க வேண்டுமென்பதே அவளது ஒரே ஆசை. "என் வாழ்வு முடியும் காலம். உன் வாழ்க்கை இன்னும் மீதமுள்ளது. உயிருக்கு உத்தரவாதமில்லாத வாழ்க்கை எங்களது. நாளைக்கு எனக்கொன்று என்றால், பின் உன்னை யார் பார்ப்பது?" என ஆதுரத்துடனும் ஆதங்கமாகவும் எடுத்துக் கூறினாள். ராசாத்தி பிடிவாதமாக மறுத்து விட்டாள்.

"உன்னை விட்டுப்போய்த்தான் எனக்கு ஒரு வாழ்க்கை வரும் என்றால் அது வேண்டாம். அப்பாவை இழந்த காயம் இன்னும் ஆறவில்லை. அதற்குள் நானும் உன்னைப் பிரிவதா? முடியாதும்மா!" என மறுத்தே விட்டாள்.

இதில் பெரியவருக்கும் மனைவிக்கும் ஏமாற்றம்தான். என்றாலும் ராசாத்தியின் பக்க நியாயத்தை உணர்ந்து கொண்டார்கள். உண்மைதானே!" ஆனால், கல்யாணம் தான் வேண்டாம். கல்வியையாவது தொடரு!" என்ற பெரியவரின் வேண்டுதல் ராசாத்தியின் மனதை இளக்கிவிட்டது. அப்பாகூட ஆசைப்பட்டாரே. தன் ஒரே மகள் படித்துப் பெரியவளாக ஆக வேண்டுமென்று. ராசாத்தி தன் பிடிவாதத்தை தளர்த்திக் கொண்டாள்.

'செக்- பொயின்ற்'றுகளைக் கடந்து நடந்தும் பள்ளிக்குப் போவதில் ஏகப்பட்ட வேதனையும் சோதனையும்தான். ஆனால் அதையெல்லாம் பார்த்தால் முடியாதே! அப்பாவின் மரணத்துக்குப் பின்-அந்த 'அவர்களை'ப் பார்க்கும் போதெல்லாம் ராசாத்தியின் மனது தகிக்கும். உடம்பு பதறும். கால்கள் தயங்கும். இதையெல்லாம் தவிர்க்கத்தான்

**ஷர்மிளா இஸ்மாயில்**


அவள் பள்ளிக்குப் போக மறுத்தாள். இப்போது வேறு வழியில்லை. போய்த்தான் ஆகவேண்டும்; படிக்க வேண்டுமென்றால்...

ஓ.எல். பரீட்சை வந்துவிட்டது. அம்மாவினதும் பெரியவரின் ஆசியுடனும் ராசாத்தி புலர்ந்த பொழுதில் விடைபெற்றாள். மாலை... இரவாக இருட்டிக்கொண்டு வந்த பொழுதும் ராசாத்தி வீடு திரும்பவில்லை. அம்மா பதறித் துடித்துக் கதறினாள். பெரியவர் உடம்பில் வலுவை வரவழைத்து ஓடோடினார். தேடினார். யாருமே காணவில்லையாம் அவளை. முறையிட்டபோது தேடிப்பார்ப்பதாகச் சொன்னார்கள். தேடினார்களா? பாடினார்களா? யாருக்குமே தெரியவில்லை. தெரியவும் வராது. அப்படியே தெரிந்து கொண்டாலும் என்னதான் ஆகப்போகிறது?!

# பக்தி

எனது வசிப்பிடத்திலிருந்து அலுவலகத்திற்கு செல்லும் வழியில் அமைந்திருந்தது அந்த இந்துக் கோயில். இன்று வெள்ளிக்கிழமையோ வேறெந்த அனுஷ்டான தினமோ கிடையாது. அப்படியிருந்தும் எனது கவனத்தைக் கவருமளவில் பக்தர் கூட்டம் வழமைக்கு மாறாக இருந்தது!

'என்னவென்று பார்த்துவிட்டால் போகிறது' என்ற மன உணர்வு உந்த, 'மோட்டார் சைக்கிளை' ஒருபுறமாக தள்ளிவிட்டு உள்ளே சென்றேன். சந்நிதானக் கதவு திறந்திருந்தது.



ஆனால், பூஜை, வழிபாடு என்று ஆரவாரம் எதுவும் இல்லை. திண்ணைக் குந்தில் திகைப்புற்றிருப்பதுபோல கோயில் பூசாரி தாழ்வாரக் குந்தில், அமர்ந்திருந்தார். ஒரு சிலர் அவரை ஏதோ விசாரித்து தெரிந்து கொள்வதும் சந்நிதான வளவில் காணப்பட்ட வேப்ப மரத்தைச் சுற்றி வலம்வந்து வணங்குவதுமாகக் காணப்பட்டனர்.

நிலைமையை அவதானித்ததிலும் விசாரித்து அறிந்ததிலும், அதிசயமாக அந்த கோயில் வேம்பில் பால் வடிவது தெரிய வந்தது!

கடவுள், தான் இருப்பதை வெளிப்படுத்த எத்தனயோ தேவைகளும் அவசியங்களும் வழிமுறைகளுமிருக்க அதையெல்லாம் புறக்கணித்து வேப்ப மரத்தில் பாலாக சுரப்பதற்கு என்ன அவசியம் ஏற்பட்டதென்ற சிந்தனையே இல்லாத மக்கள் கூட்டத்தின் மேல் எனக்கு அனுதாபமே ஏற்பட்டது.

'மோட்டார் சைக்கிளை' சற்று விசையுடன் கிளப்பினேனாயினும், 'இழந்த நேரத்தை ஈடுசெய்யும் முயற்சி, விபத்தினை ஏற்படுத்திவிடக் கூடா'தென்ற அவதானத்துக்கு குந்தகமில்லாமல் அலுவலகம் சென்றடைந்தேன்.

அரச அலுவலகங்களாயினும் சரி, தனியார் நிறுவனங்களாயினும் சரி, இப்போதெல்லாம் பெரும்பான்மை ஸ்தானம் வகிப்பது பெண்கள்தானே! அப்படியிருக்க வதந்திகளுக்கும் அரட்டைப் பேச்சுக்களுக்கும் குறைவா இருக்கும்? அன்றைய தினம் எமது அலுவலக அரட்டை அரங்கில் வேப்ப மர அதிசயம் முக்கிய இடத்தைப் பிடித்திருந்தது.

பிள்ளையார் சில காலத்துக்கு முன்னர் துதிக்கையால் பால் குடித்தமை பெருமிதத்துடன் நினைவு கூறப்பட்டது. அகதிகள் சார்பில் மாதா சிலை ஆடியது நன்றியுடன் கவனத்தில் எடுக்கப்பட்டது. அவ்வூர் பணக்காரன் வீட்டில் நடைபெற்ற பஜனை தொழுகையின்போது அவதாரத்தின் உருவப்படத்திலிருந்து விபூதி சிந்தியமை பாராட்டப்பட்டது.

இவை போதாதென்று அலுவலக கருமங்களுக்காக வெளியே சென்ற பணியாளர்கள் இது சம்பந்தமான புதுப் புதுத் தகவல்களுடன் வந்தார்கள்.

அண்மையில் உள்ளோர் 'ஆட்டோ' பிடித்தும் தூர இடங்களில் வசிப்போர் 'வான்' பிடித்தும் இந்த அதிசயத்தைக் காண வந்து கொண்டிருந்தார்கள். நகருக்கு உணவுப் பொருட்கள் ஏற்ற வந்த இராணுவத்தினரும் தமது 'ட்றக்' வண்டியை நிறுத்தி விட்டு சந்நிதானத்தைத் தொழுது சென்றார்கள். வீடியோ படப்பிடிப்பாளர் சிலரும் ஒரு கலக்கல் கலக்கியிருக்கிறார்கள்!

வருவோர் தொகை கூடக்கூட பூசாரியும் சில கட்டுக்கதைகளை உருவாக்கிவிட்டதோடு உண்டியல் ஒன்றையும் ஸ்தாபித்துவிட்டார்.

மதியத்துக்குப் பின்னர் அலுவலகங்களில் வேலையில் தொய்வு ஏற்பட்டுவிடும்.

**திருமலை வீ.என். சந்திரகாந்தி**

மாலையில் கட்டாயமாக நிறைவேற்றப் பட வேண்டிய காரியம் ஒன்று வெளியே காத்திருந்தது. அத்துடன் கோயில் புதினத்தையும் பார்த்துக்கொண்டு வழமைபோல விளையாட்டுப் பயிற்சிக்கும் போகவேண்டுமாயின் குறுகிய கால 'லீவில்' போனால்தான் முடியும்.

தீர்மானித்தபடியே 'லீவுக்கு' விண்ணப்பித்துவிட்டு நேரே கோயிலுக்குச் சென்றேன்.

பணியாளர்கள் கூறியவாறு சனக்கூட்டத்தைக் காண முடியவில்லை. கடவுள் நேரில் வந்தாலே, 'பார்த்துவிட்டு உடனே போய் விடவேண்டும்' என்ற அவசரத்தில்தான் மனிதன் வாழ்ந்து கொண்டிருக்கின்றான். இனி, கடவுள் விடயத்தில் மனிதனை உடனே நம்ப வைக்கவும் முடியாது. மரத்தில் பால் தான் சுரந்தாலும் அதனை 'லிற்றர்' போத்தலில் வீட்டுக்கு அனுப்பிவைத்தால் தான் நல்லது என்ற கருத்தும் இல்லாமலிருக்காது.

வேப்ப மரம் ஒய்வாக இருந்தது. மரத்தைச் சுற்றி புதிதாக பட்டுத் துணிகள் கட்டப்பட்டிருந்தன. பால் சுரப்பதாக கூறப்பட்ட வெடிப்புக்கு நேரே கீழே ஒரு சில்வர் பாத்திரம் வைக்கப்பட்டிருநதது. வெள்ளைப் பதார்த்தம் ஒன்று சொட்டுப் போட்டுக் கொண்டிருந்தது.

பாத்திரத்தை எடுத்து சிறிதளவு உள்ளங் கையில் ஊற்றி சுவைத்துப் பார்த்தேன். கயர்ப்புடன் கூடிய புளிப்பு சிரசுவரை அடித்தது.

"இது பால் இல்லை! வேப்பம் கள்ளு!"

சற்று உரக்கத்தான் கூறிவிட்டேன். நம்பிக்கை இல்லாத சனமெல்லாம் போய்விட எஞ்சி நின்ற சனம் ஒரு வெறியுணர்வுடன் தான் நின்றிருக்கிறது. பிடரியில் விழுந்த அடியைத் தொடர்ந்து பல கைகள் தாறுமாறாக விழ நான் நிலத்தில் புரண்டு சமாளித்தபடி எழுந்து நின்று தள்ளாடினேன்.

அப்போதுதான் எனக்கொரு உண்மை உறைத்தது.

சனத்துக்கு சில விஷயங்கள் புரியுதோ இல்லையோ, எனக்கு சில விஷயங்கள் காலம் தாழ்த்தித்தான் விளங்குது!

'எந்த ஒரு மதத்தையோ, தனியார் அமைப்பையோ, அரச ஸ்தாபனத்தையோ தனித்து நின்று எதிர்க்கவோ, மாற்றுக் கருத்து கூறவோ கூடாது!'

# ஊனம்

உமாவிற்கு எப்படித் தொடங்குவது என்று புரியவில்லை. வெள்ளைத்தாள் அவள் முன் அவள் எழுத்துக்களை எதிர்பார்த்து விரிந்து கிடந்தது. அவனுக்காக பல கடிதங்கள் எழுதியவள். இக்கடிதத்தைத் தொடங்க முடியாது தவித்தாள். ஆம்- இது தான் மலைபோல் நம்பிய தனது காதலனுக்கு எழுதும் கடைசிக் கடிதம்.

'காதல் புனிதமானது. தூய்மையானது. அது அடி மனதில் இருந்து வரவேண்டும்.' என்று பல வியாக்கியானங்கள் கூறியவன். இவள் மனதில் நம்பிக்கையின் சிகரமாய் இருந்தவன். இன்று எப்படி இப்படி மாறினான்?

அவளது கண்கள் பனித்தன. அழுது அழுது அவள் கன்னம் இரண்டும் வீங்கிச் சிவந்திருந்தன.

அவளது கை மெல்லக் கீழ் இறங்கி அவளது வலது காலைத் தொட்டுப் பார்த்தது. ஆம்! அது பொய்க்கால். மரத்துப்போய் இருக்கும் மரக்கால். இங்கு நடக்கும் கொடிய யுத்தம் அவளுக்குத் தந்த பரிசு. ஓ! இந்த பொய்க்கால்தான் அவள் காதலையும் பொய்யாக்கியதோ?

மீண்டும் அவள் கண்களில் கண்ணீர், இதயச் சூட்டைக் குறைக்கும் நோக்கோடு சூடாக கண்கள் இரண்டிலும் கண்ணீர் வழிந்தது. அவள் எதிர்பார்ப்புக்கள் எல்லாம் ஏமாற்றமாய் இந்தக் கண்ணீர் வழியே கரைந்து கொண்டு இருந்தன. அவள் மனமோ காலையில் நடந்த நிகழ்வை அசை போட்ட வண்ணம் இருந்தது.

அவள் காலையில் அம்மாவிற்கு வேண்டிய உதவிகளைச் செய்துவிட்டு பாடசாலைக்குப் புறப்படத் தயாராகிக்கொண்டு இருந்தாள். அவள் அவ்வூர்ப் பாலர் பாடசாலையில் ஓர் ஆசிரியை. அச்சமயம் படலையடியில் 'விசில்' சத்தம் கேட்டது.

"பிள்ளை! காகிதம் போல இருக்கு. போய்ப் பார்!" என்று குசினிக்குள் இருந்து அவள் தாய் குரல் கொடுத்தாள்.

உடனே உமா தனது ஊனமுற்ற காலைத் தாண்டித் தாண்டி படலையடிக்குச் சென்றாள். கடிதக்காரன்தான்.

"தங்கச்சி; வெளிநாட்டுக் கடிதம் வந்திருக்கு. இதில் ஒரு கையெழுத்து போடும்!" என்றான் காகிதக்காரன்.

கையெழுத்துப் போடும்போது உமாவிற்கு கை நடுங்கியது. "பயப்பிடாதையும். காசு வந்திருக்குப்போல..." என்று கூறிக் கடிதத்தைக் கொடுத்துவிட்டுச் சென்றான்.

அது அவளது காதலன் குமார் ஃபிரான்சில் இருந்து போட்ட கடிதம். அக் கடிதத்திற்குள் இருநூறு பிராங்க் அனுப்பியிருந்தான். அவள் கடிதத்தை வாசிக்க வாசிக்க அவள் உடம்பு பதறித் துடித்தது.

சினிமாவில் என்றால் எரிமலை வெடிப்பது போலவும்,சூறாவளி கிளம்புவது போலவும் பல விளையாட்டுக் காட்டிமிருப்பார்கள். அவ்வளவும் அவள் இதயத்திற்குள் இடம் பெற்றுக்கொண்டு இருந்தன.

இறுதியில் அவள் மயங்கிச் சரிய அம்மா கூக்குரலிட பெரும் அமர்க்களப்பட்டுவிட்டது அவள் வீடு.

அக் கடிதத்தின் சாராம்சம் இதுதான்.

அவளது சுகநலன்களை விசாரித்த பின்பு, கீழ்க்கண்டவாறு எழுதியிருந்தான்!



*"மேலும், உனது கால் ஒன்றை நீ வீடு பார்க்கச் சென்றபோது, மிதி வெடியில் சிக்கி இழந்ததாக அறிந்தேன். அதனால் மிகவும் அதிர்ச்சி அடைந்தேன். ஒரே அழுகை. இங்கு என்னைத் தேற்றாதவர் யாரும் இல்லை. நான் உன்னை இங்கு எடுக்க முயற்சிக்கும் நேரத்தில் இப்படி நடந்தது எமது துரதிஷ்டம். நான் இப்பவும் உன்னை எண்ணியே கலங்கிய வண்ணம் உள்ளேன். உனக்காக நான் எதையும் இழக்கத் தயாராக உள்ளேன்.*

**எஸ்.எஸ். ரங்கன்**

*நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால்,*

*நீ இங்கு வருவது மிகவும் கஷ்டமான விடயம். காசு எனக்குப் பெரிய விடயமல்ல. நீ கொழும்பு வந்து நிற்பதுதான் மிகவும் கஷ்டம். உனது காலைப் பார்த்து பொலிஸ் அங்கு கஷ்டங்கள் பல கொடுக்கும். கொழும்பில் இப்பொழுது கெடுபிடிகள் அதிகம். உன்னைக் கைது செய்து துன்புறுத்தினால் என்னால் தாங்கவே முடியாது. எனவே நீ எமது காதலை ஒரு தூய நட்பாக நினைத்துக்கொள். அங்கு ஒரு நல்ல வாழ்க்கையை அமைத்துக்கொள். நான் உனக்கு பண உதவி செய்கின்றேன்!" என்று கூறி முடித்திருந்தான்.*

எவ்வளவு தூரம் நோகாமல் வாழைப் பழத்தில் ஊசியை ஏற்றியுள்ளான் என்று எண்ணிச் சிரித்துக்கொண்டாள். வறண்ட வெறும் சிரிப்பு. மணி பன்னிரண்டு அடித்து ஓய்ந்தது.

ஒரு விதமாக கடிதத்தை எழுதத் தொடங்கினாள். அரை மணித்தியாலத்தில் எழுதி முடித்துவிட்டு, விளக்கை அணைத்தாள் படுப்பதற்காக. ஆனால் அவள் மனக் குமுறல்கள் மட்டும் அணையவில்லை. எரிமலைக் குளம்புகள் போல் கொதித்துக் கொண்டு இருந்தன. அவள் எழுதிய கடிதத்தின் சுருக்கம் இதுதான்:

*அன்புக்குரியவருக்கு!*

*உமது கடிதமும், பணமும் கிடைத்தது. நீர் என்மேல் கொண்ட அனுதாபத்திற்கு நன்றிகள். நான் ஒரு காலைத்தான் இழந்துள்ளேனே தவிர, இரண்டு கைகளும் மற்றைய காலும் உண்டு. அதைவிட மிகுந்த மன உறுதியும் தன்னம்பிக்கையும் உண்டு. உழைத்து வாழ என்னால் முடியும். உமது பணத்தை இத்துடன் வைத்து அனுப்புகின்றேன். ஏற்றுக்கொள்ளவும். இப்பணத்தை அநாதை ஆச்சிரமங்களுக்கு தானம் செய்தால் உமக்குப் புண்ணியம் உண்டு. நான் இவ்வளவு நாளும் இந்தக்கால் ஊனத்திற்காக கவலைப்பட்டதுண்டு. ஆனால் உமது மனமே ஊனம் என்று இப்பொழுது தெரிந்து கொண்டேன். எனவே நீர் நல்லதொரு உள மருத்துவரை நாடுவது நல்லது. அப்பொழுது தான் உமது எதிர்காலம் சிறப்பாக அமையும். நான் இனி ஒருபோதும் என் கால் ஊனத்திற்காகக் கவலைப்பட மாட்டேன். கவலைப் படப் போவதும் இல்லை!"*

கடிதத்தை எழுதி முடித்தபோது அவள் மனதின் சுமை கரைந்திருந்தது.

# ஒரே ஒரு பொய்

ஒரு தனியார் நிறுவனத்தின் விளம்பரத்தைப் பார்த்து நேர்முகத் தேர்வுக்காக சென்ற நான் நாலாவது ஆளாக காத்திருந்தேன்.

மனத்திற்குள் இதயம் வேகமாக அடித்துக் கொண்டிருந்தது. நேர்முகத் தேர்வு ஒன்றும் எனக்குப் புதிதில்லை. இருப்பினும் இந்த நேர்முகத் தேர்வு எனக்கு வித்தியாசமாகவேபட்டது.

'திருமணம் ஆகாத இருபத்தைந்து வயதிற்குட்பட்ட பெண்கள் வேலைக்குத் தேவை' என்று அந்த நிறுவனம் விளம்பரம் அளித்திருந்ததைப் பார்த்துவிட்டு; நேர்முகத் தேர்விற்கும் வந்துவிட்டேன். விளம்பரத்தில் கூறப்பட்டிருந்த எல்லாத் தகுதியும் என்னிடம் இருக்கிறது. ஆனால் ஒரே ஒரு பொய் சொல்லப் போகிறேன்.

'எனக்குத் திருமணம் ஆகி ஆறேழு மாதங்கள் ஆகிவிட்டன.' பின் விளைவுகளைப் பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்ற எண்ணத்தில் வந்துவிட்டேன்.


என் முறை வந்தபோது நான் உள்ளே செல்ல கதவு சாத்தப்பட்டது. இருபத்தேழு இருபத்தெட்டு வயது மதிக்கத்தக்க இளைஞர் என்னை வரவேற்றார். அவர் முன்னால் சென்று வணக்கம் சொல்லிவிட்டு நின்று கொண்டிருந்த என்னை உட்காரச் சொன்னார்.

முதலில் அறிமுகத்திற்குப் பின்பு கேள்விகளைக் கேட்கத் தொடங்கினார். ஒரு நிறுவனத்திற்கு சம்பந்தமில்லாத கேள்விகளை எல்லாம் கேட்டார். நானும் சளைக்காமல் பதில் சொன்னேன். கடைசியாய் அந்தக் கேள்வியைக் கேட்டார்.

"நீங்க திருமணம் ஆகாதவர்தானே?"

"ஆமா" தயக்கமாய்ச் சொன்னேன்.

"எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்குது. உங்க அழகு. உங்க பதில், உங்க பேச்சு எல்லாமே- கடைசியா ஒரு உண்மையைச் சொல்லப்போறேன்- இது வேலைக்காக நடத்தப்பட்ட இன்டர்வியூ அல்ல. எனக்காக நடத்தியது. பெண்பார்க்கும் படலம்னு




சொல்லி ஒவ்வொரு வீட்டுப் படியையும் ஏறி இறங்கி பொண்ணு பிடிக்கலைன்னு சொல்லிவிட்டு வாறது... இதெல்லாம் எனக்கு கொஞ்சம்கூட பிடிக்கல. அதனாலதான் இப்படியொரு இன்டர்வியூவுக்கு ஏற்பாடு பண்ணினேன். உங்களை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. நீங்க சம்மதிச்சா நாளைக்கே பொண்ணு கேட்டு வாறேன்." அவர் முடிக்க, இப்போது என் இதயம் வேக வேகமாக அடிக்க ஆரம்பித்தது.

www.padippakam.com

## இலக்கிய நயம்

# அப்போது கூடாது!



பூவில் தேன் இருக்கும்
தீ இருக்குமா?

இருக்கிறது!- அவளை
தீண்டும் போதெல்லாம்
தீ பரவுகிறதே!

தீ- இனிய தீ
தீண்டும் போதெல்லாம்
தகிக்க வைக்கும் தீ!

அவளே யாவையுமாக
இருக்கிறாள்!

அவளே- பூவாகவும்
புயலாகவும்!
அவளே தேனாகவும்
தீயாகவும்!

ஜான்சிராணியின்
படையணியில்தான்
அவன் அவளை
சந்தித்தான்!

வெள்ளைக் கழுகுகளை
விரட்டும் விரதம்
பூண்டவள்!

சொந்த மண்ணை
பங்கமாக்கும்
அந்நிய வல்லூறுகளுக்கு
மண்ணின் வீரத்தை
பெண்களும் புரியவைப்போம்!
என்று புறப்பட்டவள்!

வாளேந்தி களம்
பல கண்டவள்!

பெண் என்றால்
பேதையல்ல!
புயல் என்பதை
வெண் மேனியருக்கு
புரியவைத்தது
ஜான்சிராணியின் படை!

"அமைதியாக இருக்கும்
போதெல்லாம்
பெண் பூவாய் இருப்பாள்!
அமைதி குலைந்துபோனால்
பெண் புயலாவாள்!"
ஜான்சிராணி கூறிய
சத்தியமான வார்த்தைகளை
இதயத்தில் பத்திரப்படுத்தியவள்!

'ப்பூ பெண்கள் தானா?'
என்று இளக்காரமாக
நினைத்த வெள்ளைப்படை
ஒருமுறை சுற்றிவளைத்தது!

சுற்றிவளைத்தவர்களின்
பிணங்கள் மட்டும்தான்
திரும்பிச் சென்றன!

வெள்ளைக் கழுகுகளின்
தலைகளைச் சீவி
மலைகளில் இருந்து
உருட்டி விட்டனர்!

அந்த வீரநங்கையைத்தான்
அவன் காதலித்தான்!

அவன் கவிஞன்
எழுத்தால் தீ
விதைப்பவன்!

கவிதைகளை இதயங்களில்
விதைப்பவன்!
அந்த விதைகளிலிருந்தும்
எழுச்சி தோன்றும்!
என்று நினைப்பவன்!

அவன் கவிதைகளை
அவளும் காதலித்தாள்!
பின்னர் அவனையே
காதலித்தாள்!

"பூக்களும் இங்கு
முட்களாகும்!
பாக்களும் இங்கு
வாட்களாகும்!
இது விடுதலை
நாடும் பூமி!"
என்றவன் எழுத
நன்று என்றவள்
பாராட்டுப் பூ தூவினாள்!

"எழுதுகோல் என்னிடம்
எழுபடையில் ஏந்தும்
படைக்கலம் உன்னிடம்!"
என்றான் அவன்!

"நாம் வாழ்வதற்காக
போராடுகிறோம்!
போராடுவதற்காகவே
வாழ்கிறோம்!"
என்று உரைத்தாள்
அந்த தீ விழிக்காரி!

"நீ சொன்னதே
ஒரு கவிதைதானே!"
என்று வியந்தான்
அவன்!

"களத்தில் நிற்கும்
ஒவ்வொருவரும் கவிஞர்களே!
புதியதை ஆக்க
தடைகளை அழிக்கிறார்கள்!
தாய்நாட்டை நேசித்து
தங்களையே தருகிறார்கள்!"
என்றாள் அவள்!

"உன்னை எனக்கு
பிடித்திருக்கிறது!"
என்றான் கவிஞன்!

"உங்கள் கவிதைகளை
படித்திருக்கிறேன்!
இப்போதுதானே
உங்களை படிக்கிறேன்!"
என்றாள் அவள்

"அதனால் என்ன
காதலித்தபடியே
படிக்கலாமே?"
என்று தொடுத்தான் வினா.

"காதல் என்பது
கல்வெட்டு!
அவசரத்தில்
அள்ளித் தெளிக்கும்
கோலமல்ல காதல்!
அவசரக் காதல்
நமக்கு வேண்டாம்!

நண்பர்களாக இருப்போம்
நமக்குள் ஒத்துவந்தால்
நல்ல காதலர்களாவோம்!"

அவள் சொன்னதை
கவிஞனும் ஏற்றான்!

நிதானமாக காதல்
மலர்ந்தது!

தமிழும் சுவையும் போல
மனங்கள் ஒன்று கலந்தன!

ஜான்சிராணி
மலர்தூவி வாழ்த்த
மணமக்கள்
மாலை மாற்றிக்கொண்டனர்!

"பெண் என்றால்
என்ன?
கவிஞனுக்கும்
பாதிதான் தெரியும்!

ஆண் என்றால்
என்ன?
அவளுக்கும்
பாதிதான் தெரியும்!

தொட்டபோது
சுட்டதும் வியந்தான்!

தீக்குள் விழுந்ததுபோல்
தேகம் மாறியதே!
தீண்டும் போதெல்லாம்
தீயை தூண்டுகிறதே!
என்று தித்தித்தான்!

இதழ்களை விரலால்
தொட்டுப் பிரித்தான்!
உள்ளே முத்துக்களை
அடுக்கி வைத்திருந்தாள்!

'மோக இதழ்கள்
முத்துப் பற்கள்!"
என்று முணுமுணுத்தான்!

மோகம் மட்டுமா?
தாகமும் உண்டு
மேகமே வா!
அவள் கண்களால்
அழைத்தாள்!

அவள் இதழ்களில்
இறங்கி நடந்தன
அவன் உதடுகள்!

முதல் முத்தம்
முத்தான முத்தம்!

புதிய கதவு
ஒன்று
திறந்து கொண்டதா?

புதிய உலகு
ஒன்று
பிறந்து விட்டதா?

சொர்க்கம் என்பது
இதுதானா?

வசந்தத்தின் திறவுகோல்
இங்குதானா?"

கவிஞன்
அர்த்தம் தேடினான்!

முத்தமிட்டபோது
மூடிய விழிகளை
அவளும் திறக்கவில்லை!

எதையும் தடுக்க
விரும்பாதபோது
கண்களை
மூடிக்கொள்வது
காம தந்திரம்!

புறக் கண்ணை
இறுக மூடி
அகக் கண்ணை
திறந்துகொண்டு
அவனது காமத்தில்
மெய் மறந்து
போனாள் அவள்!

இதுதான் காமமா?
நெஞ்சு படபடக்க
நினைவு தடுமாற
மூச்சு முட்டுகிறதே
இதுதான் காமமா?

கண்களை திறக்காது
மனதுக்குள் கேள்விக்
கணை தொடுத்தாள்.

அவனது மூச்சு
அவள் கழுத்தை
சுட்டது!

சுட்ட இடத்தில்
சுகமாக இருந்தது!

அவளுக்குள்
ஒரு குறும்பான
ஆசை உதித்தது!

'பிடிக்காதது போல
ஊடல் கொண்டு
இவரை
ஆட்டிப் படைக்கலாமா?
எட்ட நிற்கவைத்து
ஏங்க வைக்கலாமா?'

நினைத்தபோதே
அவளை நிறுத்தியது
திருக்குறள் பாடல்
ஒன்று:

பனையளவாய்
ஆசையுள்ளபோது
சிறு தினையளவுகூட
ஊடல் உள் வரக்கூடாது!

கூடல் முடிந்ததும்
ஊடல் கொள்ளலாம்.
ஊடல் முடிந்ததும்
கூடல் கொள்ளலாம்!

ஊடலின் போது
கூடல் கூடாது!
சிவ பூசைக்குள்
கரடி புக விடலாமோ?

'கூடாது கூடாது!'
அவளுக்குப் புரிந்தது!
மேலும் புரியாதவை
கூடலில் புரிந்தது!

**"திகைத்துணையும் ஊடாமை வேண்டும்**
**-பனைத்துணையும்**
**காமம் நிறைய வரின்"**

அதிகாரம்: 129, குறள்: 1281

## தருவது ரசிகன்

*** சாமியார்களால் புத்திரபாக்கியம் கொடுக்க முடியுமா?**

ரா.ஜவாஹர், பசறை.

முடியும். அதைத்தானே பிரேமானந்தா செய்து சிறையானந்தாவாகியிருக்கிறார்! இன்னொரு வகையான சாமியார்களும் இருக்கிறார்கள்.

"சாமி! எனக்கு புத்திரபாக்கியமே கிடையாது. ஏதாவது வழி கூறுங்கள்!" என்று ஒருத்தர் கேட்டாராம்.

"கவலைப்படாதே. ராமேஸ்வரத்துக்கு போய் வா, குழந்தை பிறக்கும்!" என்றார்.

உடனே வந்தவர் சொன்னாராம், "சாமி! என் சொந்த ஊரே ராமேஸ்வரம் தானே!"

*** பாகிஸ்தானில் இராணுவ நீதிமன்றங்கள் அமைக்கப்படுகிறதே?**

ஆர்.பஸ்வான், கல்கிசை.

இராணுவத்தினரோடு முரண்பட்டு ஆட்சியைப் பறிகொடுத்தார் பெநாசீர் பூட்டோ. இராணுவத்தினரை முன்னிறுத்தி தன் ஆட்சியைப் பாதுகாக்க நினைக்கிறார் நவாஸ் ஷெரீப். ஒரு பழைய கதை-நீங்களும் அறிந்த கதையாக இருக்கலாம்.

பாகிஸ்தானில் ஜெனரல் ஷியா பதவியில் இருந்த காலத்தில், பிரஜை ஒருவருக்கு கடுமையான பல்வலி.

அவர் உடனே புறப்பட்டு ஜனநாயக நாடு ஒன்றுக்குச் சென்றார். அங்கு பல் டாக்டரை சந்தித்தார்.

"ஏன் உங்கள் நாட்டில் பல் வைத்தியரே கிடையாதா?" என்று கேட்டார் டாக்டர்.

அதற்கு அவர் கூறினார்: "எங்கள் நாட்டில் பல் டாக்டர்கள் இருக்கிறார்கள். இருந்தாலும் அங்கு நாங்கள் வாயைத் திறக்க முடியாது!"

*** உடல் எடையைக் குறைக்க உணவைக் குறை என்கிறார்கள். நாவைக் கட்டுப்படுத்த முடியவில்லை. நான் என்ன செய்வது?**

பி.சுமித்திரா, மூதூர்.

ஃபிரான்ஸ் டாக்டர் கிஸ்டல் பெரும் புகழ்பெற்றவர். அவரிடம் ஒரு பருமனான பெண் வந்தார்.

"டாக்டர்! எனக்கு ஒல்லியாக வேண்டும் என்று ஆசை, அதற்காக எங்கு போனாலும், அதை சாப்பிடாதே, இதை சாப்பிடாதே என்று தடை போடுகிறார்கள். என்னால் இருக்க முடியாது. என் உடம்பைக் குறைக்க ஒரு வழி சொல்லுங்கள்?" என்றார்.

அதற்கு டாக்டர்: "உங்களுக்குப் பிடிக்காத உணவு வகைகளையெல்லாம் எவ்வளவு வேண்டுமானாலும் சாப்பிடுங்கள். தடையே கிடையாது!" என்றார்.

*** நிம்மதியாக வாழ்வதானால் எங்கே வாழலாம்?**

ஆர்.பாலச்சந்திரன், மட்டக்களப்பு.

எங்கேயும் வாழலாம்!

புகழ்பெற்ற மனநல நிபுணர், மற்றும் சுய முன்னேற்ற நூல்கள் எழுதிப் புகழ்பெற்றவர் நார்மன்வின்சென்ட் பீல். அவரிடம் ஒரு ஆசாமி வந்து;

"ஐயா! நான் நீண்ட காலம் வாழ்ந்து உலக இன்பங்களை எல்லாம் அனுபவிக்க ஆசைப்படுகிறேன். அதற்கு என்ன வழி?" என்று கேட்டான்.

நார்மன் சொன்னார்:

"நீ நீண்டகாலம் வாழ்ந்து, எவற்றை எல்லாம் அனுபவிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறாயோ அவற்றையெல்லாம் ஒதுக்கி விடுவதுதான் நீண்டகாலம் நிம்மதியாக வாழ வழி!"

*** அவுஸ்திரேலியாவில் இலங்கை அணி தோல்வியடைய யார் காரணம்?**

கே.புவிந்திரன், கொழும்பு-09.

அங்குள்ள இரசிகர்களும் ஒரு காரணம்! எனினும் அது மட்டும் காரணமல்ல!

*** சனத் ஜெயசூர்யா உடனடியாக ஆட முடியாதே, அணியின் நிலை என்ன?**

வி.ஜெயந்த், குருநாகல்.

ஆரம்பம் அமர்க்களமாக இருக்காது! இலங்கை அணிக்கு இது கெட்ட நேரம்! அடிக்கு மேல் அடி!

*** 'உயிரே' படத்தில் உங்களுக்கு பிடித்தது எது?**

செல்வி க.பிருந்தா, ஹற்றன்.

பாடல் காட்சிகள் படமாக்கப்பட்டுள்ள விதம்!

*** பணம் அதிகமானாலும் ஆபத்துத்தானே?**

எம்.ஜுனைதீன், கல்முனை.

அறிஞர் பிளாட்டோ என்ன சொல்கிறார் என்று பாருங்கள்:

"அளவுக்கு மீறிய செல்வமோ, அளவுக்கு மீறிய பணமோ, மனிதர்களை ஒழுக்கம் கெட்டவர்களாகவும் திறமையற்றவர்களாகவும் செய்து விடுகிறது!"



'துள்ளாத மனமும் துள்ளும்' படத்தில் விஜய்-சிம்ரான்

## சிந்தியா பதில்கள்

*** 'படையப்பா'வில் ரஜினி என்ன புதுமை செய்கிறார்?**

கா.குணாளன், சுவிற்ஸர்லாந்து.

15 வருடங்களின் பின்னர் திறந்த மார்புடன் சண்டைக்காட்சியில் நடிக்கிறார். சுருட்டைப் பிடிப்பதிலும் ஸ்ரைல் காட்டுகிறாராம்.

*** இந்த ஆண்டிலும் சிம்ரான் கொடி பறக்குமா?**

எஸ்.கீதா, கொழும்பு-12.

மேலும் ஆடைகள்தான் பறக்கும்!

போட்டி பலமாக இருக்கிறது!

*** சிந்தியா! வாழ்க்கை பற்றி ஒரு தத்துவம் கூறுங்கள்?**

லெ.உசானார், மாத்தளை.

பிரபல ரசிய எழுத்தாளர் டால்ஸ்டாய் என்ன கூறியிருக்கிறார் தெரியுமா?

"நாம் எல்லோரும் மரண தண்டனைக்கு உள்ளானவர்கள். தூக்கிலிடும் தினம்தான் வித்தியாசம்!"

*** "தேர்தல் வன்முறைகளால் ஏற்பட்ட அவப்பெயரை நீக்க, எதிரணியுடன் ஜனாதிபதி அனுசரித்துப்போக வாய்ப்புண்டு!" என்று அரசியல் விமர்சகர் ஒருவர் கூறியுள்ளாரே?**

என்.சீவரத்தினம், கொழும்பு-05.

வாய்ப்பே இல்லை! இனிமேல்தான் மேலும் முரண்பாடுகள் வெடிக்கும்! பொறுத்திருந்து பாருங்கள்!

*** இந்தியாவில் மத மோதல்களை கண்டித்து பிரதமர் வாஜ்பேயி உண்ணாவிரதம் இருந்துள்ளாரே?**

எஸ்.கனிஸ்ரா, முகத்துவாரம்.

வேடிக்கையாக இருக்கிறது! அவர் பணி உண்ணாவிரதம் இருப்பதல்ல; மத மோதலைத் தூண்டும் சக்திகளை உள்ளே தள்ளுவதுதான்!

*** "தேர்தல் வன்முறைகள் பற்றி ஜனாதிபதி அறியமாட்டார்!" என்று அமைச்சர் அஷ்ரப் கூறியுள்ளாரே?**

பா.இலியாஸ், புத்தளம்.

அவரை ஜனாதிபதி சட்டத்தரணியாக அன்று நியமித்ததுக்காக ஜனாதிபதி இன்று மகிழ்ந்திருப்பார்.

*** வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கு தேர்தல் தேவையா?**

கா.யோகன், திருமலை.

தேவையானது அரசியல் தீர்வே தவிர, தேர்தலல்ல!

*** சிந்தியா! வடக்கு-கிழக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு தமிழ், முஸ்லிம் கட்சிகள் வழக்குத் தொடுக்க உள்ளனவாம். உண்மையா?**

பி.ரட்ணசோதி, வவுனியா.

பொய்! தமிழ், முஸ்லிம் கட்சிகளுக்கு அரசிடம் மனுப்போட்டு காத்திருந்துதான் பழக்கம். அரசை எதிர்த்து வழக்குப் போட துணியமாட்டார்கள்!

*** ஹலோ சிந்தியா! வரவர பிச்சைக்காரர்கள் தொல்லை அதிகமாகிவிட்டது. சில்லறை போட்டால் அடிப்பது போல முறைக்கிறார்களே?**

எஸ்.ரேணுகா, கொழும்பு-13.

கௌரவப் பிச்சைக்காரர்கள்! சமீபத்தில் கண்ணுற்ற காட்டூன் ஒன்று உங்களுக்காக.




(ஸ்போர்ட்ஸ்)

# புதுடில்லியில் டெஸ்ட்

இந்தியாவுக்கு எதிராக சென்னையில் நடந்த முதலாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி 12 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது. இரண்டாவது டெஸ்ட் போட்டி பெப்ரவரி 4ம் திகதி முதல் 8ம் திகதிவரை புதுடில்லியில் நடைபெறுகிறது.

முதலாவது டெஸ்ட் போட்டியில் பங்குபற்றிய இந்திய அணியே இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும் எதுவித மாற்றமின்றிக் கலந்து கொள்கிறது.

1952-53 தொடக்கம் இதுவரை (இப்போது நடக்கும் டெஸ்ட் தொடரைச் சேர்க்காமல்) 10 டெஸ்ட் தொடர்களில் இந்தியா-பாகிஸ்தான் அணிகள் விளையாடியுள்ளன. 44 டெஸ்ட்களில் 33 டெஸ்ட்கள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ளன.

மீதமுள்ள 11 டெஸ்ட்களில் ஏழில் பாகிஸ்தான் வென்றுள்ளது. நான்கில் இந்தியா வெற்றி பெற்றுள்ளது.

இந்தியா-பாகிஸ்தான் அணிகளுக்கிடையே குறைந்தது 3 வருடங்களுக்கு ஒருமுறை கிரிக்கெட் டெஸ்ட் போட்டிகள் நடக்க வேண்டும் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை விருப்பம் தெரிவித்துள்ளது.

இத்தகவலை இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தலைவர் ராஜ்சிங் துங்காபூர் கூறியுள்ளார்.

# மோதுகிறார் டைசன்



அதிபாரக் குத்துச் சண்டை வீரர் மைக் டைசன் இன்னொரு குத்துச்சண்டை வீரரான இவான் ஹோலிஃபீல்டின் காதைக் கடித்ததால், குத்துச்சண்டை போட்டிகளில் கலந்துகொள்ளத் தடை விதிக்கப்பட்டிருந்தார்.

ஒன்றரை வருடகாலத் தடைக்குப் பின் அண்மையில் மைக் டைசன் போட்டி ஒன்றில் கலந்துகொண்டார்.

இந்தப் போட்டியில் தென்னாபிரிக்க வீரர் போத்தாவை எதிர் கொண்டு மைக் டைசன் வெற்றியும் பெற்றார். இதை அடுத்து மைக் டைசன் இன்னொரு குத்துச் சண்டைப் போட்டியில் கலந்து கொள்ளத் தயாராகிறார்.

டைசன் கலந்துகொள்ளும் இப்போட்டி ஏப்ரல் மாதம் 24ம் திகதி நடக்கிறது. இதில் டைசனுடன் மோதவிருப்பவர் ஜெர்மனி வீரர் சுல்ட்ஸ்.

இப்போட்டியில் மைக்டைசன் எளிதில் வெற்றி பெற்று விடுவார் என்று அவரது மனேஜர் கூறியுள்ளார்.

# ஆசிய கோப்பைப் போட்டி

ஆசியாவில் உள்ள கிரிக்கெட் விளையாடும் நாடுகளான இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய 4 நாடுகள் ஆசியக் கோப்பைக்காக ஒருநாள் போட்டிகளில் மோதுவது தெரிந்ததே.

இப்போது ஆசியக் கோப்பைக்காக டெஸ்ட் போட்டிகளில் ஆசிய நாடுகள் முதன் முறையாக மோதவுள்ளன. இதில் இந்தியா, இலங்கை, பாகிஸ்தான் ஆகிய 3 நாடுகள் கலந்துகொள்ளவுள்ளன. பங்களாதேஷிற்கு இன்னமும் டெஸ்ட் அந்தஸ்து வழங்கப்படாததால் இதில் விளையாடவில்லை.

இதில் ஒவ்வொரு அணியும் மற்றைய அணிகளுடன் தலா ஒவ்வொரு போட்டிகளில் மோதும். இதன் அடிப்படையில் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் இரு அணிகள் இறுதிப் போட்டியில் மோதும்.

ஆசியக்கோப்பை (டெஸ்ட்) போட்டிகள் பற்றிய விவரங்கள் வருமாறு:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| முதலாவது போட்டி- | பெப்ரவரி | 16-20 | இந்தியா எதிர் பாகிஸ்தான்- | கல்கத்தா | (இந்தியா) |
| இரண்டாவது போட்டி- | பெப்ரவரி | 24-28 | இந்தியா எதிர் இலங்கை- | கொழும்பு | (இலங்கை) |
| மூன்றாவது போட்டி- | மார்ச் | 04-08 | இலங்கை எதிர் பாகிஸ்தான்- | லாகூர் | (பாகிஸ்தான்) |
| இறுதிப் போட்டி- | மார்ச் | 12-16 | ......... எதிர் ......... | டாக்கா | (பங்களாதேஷ்) |



படிப்பகம்

www.padippakam.com

# திருமறை தரும் போது நெறி 47

## பாபிலோனியரின் படையெடுப்பு

இராஜகுமாரன்

ஆண்டவர் தமது மக்களான இஸ்ரயேல் சமுதாயத்தினரை செம்மையாக வழிநடத்தும் பொருட்டு இறைதூதர்களை அவ்வப்போது திருப்பொழிவு செய்து வருகிறார். பலநூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர்-மோசே மூலம் அருளப்பட்ட திருக்கட்டளைகளைக் கொண்ட கற்பலகைகள் இரண்டையும் இறைவனுக்காக அமைக்கப்பட்ட திருக்கோவிலின் மூலத்தில் வைத்துள்ளனர். இதற்கு குருமாரைக் கொண்டு பூசைகள் செய்து, பலிபீடங்களில் திருப்பலிகளையும் நிறைவேற்றி வந்தனர். ஆனால் பெரும்பாலான யூதா மக்களும் இஸ்ரயேல் மக்களும் அத்திருக் கட்டளைகளில் பொறிக்கப்பட்ட வாக்கியங்களை தம் வாழ்க்கையில் கடைப்பிடிப்பதாகத் தெரியவில்லை.

ஆண்டவருக்கு ஏற்புடையதல்லாத தீயவழிகளிலேயே மக்கள் நடக்கலானார்கள். இதனால் ஆண்டவரின் விரோதத்தையே மக்கள் சம்பாதித்துக்கொண்டனர். ஆண்டவரால் மக்களின் வழிகாட்டலுக்காக அனுப்பிவைக்கப்பட்ட எரேமியாவின் வாய்மொழியைக் கேட்போரின் தொகை மிகக்குறைவாகவே காணப்பட்டது.

மக்கள் மனம் மாறி நல்வழி நாடாதிருந்தால், கோவிலையும் தகர்த்து மக்களனைவரையும் அழித்தொழித்துவிட ஆண்டவர் தீர்மானித்திருப்பது பற்றி இறைவாக்கினர் எரேமியா எச்சரிக்கை விடுத்த வண்ணமே இருந்தார். இதனால் மக்களாலும் யூதாவின் மன்னர்களாலும் சிறைப்பிடிக்கப்பட்டு பல கொடுமைகளுக்கும் அவர் ஆளாக்கப்பட்டார்.

### மண்பானை

ஒருநாள் ஆண்டவர் கூறியபடி எரேமியா மண்பாத்திரங்களை உருவாக்கும் குயவனிடம் சென்று ஒரு பானையைப் பெற்றுக்கொண்டார். அதனை எடுத்துக்கொண்டு மக்கள் கூடும் இடங்களுக்கெல்லாம் சென்றார். இறைவனால் தனக்கு அருளப்பட்ட தீர்க்க தரிசனங்களை அவர்களிடம் கூறினார். சிலர் நம்பினர்; பலர் நம்பவில்லை.

ஒரு தடவை தன்கையிலிருந்த பானையைத் துண்டு துண்டாக உடைத்தெறிந்தார். இவ்வாறு பானையை உடைத்தெறிந்ததைப் பார்த்த மக்களிடம் எரேமியா: "இப்பானை உடைபட்டுச் சிறுசிறு துண்டுகளாகச் சிதறிப் போய் விட்டது. இதேபோல் ஆண்டவர் இந்த நகரத்தை உடைத்து மக்களனைவரையும் சிதறடிக்கப் போகிறார்!" என்று கூறினார்.



இதனைக் கேட்ட ஆலயத்தின் பிரதம அதிகாரியான பஸ்கூர், காவலர்களை ஏவி எரேமியாவைக் கைது செய்யும்படி கட்டளையிட்டான். அவர்களால் கைது செய்யப்பட்ட எரேமியா சங்கிலிகளால் பிணைக்கப்பட்டார்; சவுக்கால் அடிக்கப்பட்டார். ஒருநாள் முழுவதும் இத்துன்பத்தைத் தாங்கிக்கொண்டிருந்த எரேமியா, ஆண்டவரை நோக்கி "ஆண்டவரே! உம்முடைய வார்த்தைகளைக் கூறும்போது இத்தகைய கொடுமைகளை எனக்குச் செய்கிறார்கள். ஆனால் இக்கொடுமைகளுக்குப் பயந்து நான் மௌனமாக இருக்க முடியவில்லை. நான் வாய் திறவாமலிருக்கும்போது என்னுள்ளேயே- ஆண்டவரே! தங்கள் திருவாக்குகள் நிறைந்து தீபோல் எரிந்துகொண்டு வாய்மூலம் வெளியாகின்றனவே...!" என்று பிரார்த்தித்தார்.

அடுத்தநாள் காலையில் எரேமியாவிடம் வந்த பஸ்கூர், அவரை விடுதலை செய்தான். எரேமியா, நேரியா என்பவரின் மகனான பாருக்கை அணுகினார். ஆலயத்துக்குச் செல்லத் தனக்கு அனுமதி இல்லை என்பதனால், தான் கூறும் வாசகங்களை ஓர் ஏட்டுச் சுருளில் எழுதிக்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார். பாருக்கும் எரேமியா கூறிய இறைவாக்கு முழுவதையும் ஏட்டுச் சுருளில் பதித்துக் கொண்டார்.

எரேமியாவின் இறைவாக்குகளைக் கொண்ட ஏட்டுச் சுருளிலுள்ள வாசகங்களை பாருக் அவ்வப்போது ஆலயத்தில் கூடும் மக்களுக்கு வாசித்துக்காட்டுவார். இதனை அறிந்த மன்னர் யோயாக்கிம், அந்த ஏட்டுச் சுருளைத் தன்னிடம் வந்து வாசித்துக் காட்டுமாறு பாருக்குக்குக் கட்டளையிட்டார்.

ஏட்டுச்சுருள் வாசிக்கப்பட்டதும் சினமடைந்த மன்னர் அதனைச் சின்னாபின்னமாகக் கிழித்துத் தீயிலிட்டுப் பொசுக்கினார். எரேமியாவை வரவழைத்து "இவ்வாறு ஏன் எழுதினாய்?" என்று கேட்டார்.

"இஸ்ரேல் மக்களும் யூதா மக்களும்- அவர்களை ஆட்சிபுரியும் மன்னர்களும் செய்துவரும் பாவங்களுக்காக ஆண்டவர் தரப்போகும் தண்டனைகள் இவை என்று அதே ஆண்டவர் எனக்கு உணர்த்தியமையினாலேயே நான் இவ்வுண்மைகளை மக்களுக்கு எடுத்துக் கூறிவருகிறேன்!" என்றார்.

எரிக்கப்பட்ட சுருளுக்குப் பதிலாக மற்றுமொரு புதுச்சுருளை பாருக்கிடம் கொடுத்து மற்றுமொரு பிரதியை எழுதுமாறு எரேமியா கேட்டுக்கொண்டார்.

### சூறையாடப்பட்ட எருசலேம்

எரேமியா கூறிய இறைவாக்கின்படி, யோயாக்கிம் ஆட்சி பீடமேறிய நான்கு வருடங்களின் பின்னர் பாபிலோனிய மன்னரான நெபுகட்நேசர் யூதா நாட்டின்மீது படை எடுத்தார்.

இதற்கிடையில் ஆண்டவர் எரேமியாவின் மூலம் விடுத்திருந்த எச்சரிக்கைகளின்படி பாபிலோன் மன்னர் நெபுகட்நேசர் நாட்டை அடிமைப்படுத்தினார். மக்களை அடிமைகளாக்கித் தனது நாட்டுக்குக் கொண்டுசென்றார். இறைவனுடைய இல்லத்திலிருந்த மிகவும் அரிய பொருட்களையும் தனது நாட்டுக்கு எடுத்துச் சென்றார். இத்தகைய தண்டனையை இஸ்ரயேல் மற்றும் யூதா மக்களுக்கும் வழங்க வேண்டுமென்பதே ஆண்டவரின் திருவுளமாக இருந்தது.

எருசலேம்மீது பாபிலோன் மன்னரான நெபுகத்நேசர் படையெடுத்ததைத் தொடர்ந்து அந்நகர் சின்னாபின்னப்பட்டது. மழை பெய்யவில்லை; வறட்சி தாண்டவமாடியது; பயிர்கள் எதுவும் விளையவில்லை; கால்நடைகளும் அழிந்தன.

அரண்மனைகள், செல்வச்சீமான்கள் வசித்த மாளிகைகள் தீக்கிரையாக்கப்பட்டன. நகரத்தைச் சுற்றியிருந்த மதில்களும் தகர்க்கப்பட்டன.

கல்விமான்கள், சிறந்த தொழில்வல்லுநர்கள், கலைஞர்கள் ஆகியோரெல்லாம் கைது செய்யப்பட்டு பாபிலோனுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். விவசாயிகள், திராட்சைத் தோட்டப் பணியாளர்கள் மற்றும் ஏதுமற்ற வறியவர்கள் மட்டும் கைது செய்யப்படவில்லை.

### பொய் வாக்குரைத்த அனனியா

யூதாவின் மன்னரான செதேக்கியாவினுடைய ஆட்சியின்போது அனனியா என்றொரு பொய்வாக்கினர், இறைவாக்குரைப்பதாகப் பல தகவல்களைக் கூறி வந்தார். எரேமியாவிடமே வந்து பலபொய்களைக் கூறத் தலைப்பட்டார். பாபிலோனியர்களிடமிருந்து இஸ்ரயேல்-யூதா மக்கள் இரண்டாண்டுகளில் விடுதலை பெற்றுவிடுவார்கள் என்று கூறினார். எருசலேம் நகரிலிருந்தும் ஆண்டவரின் இல்லத்திலிருந்தும் பாபிலோனியர்களால் அபகரித்துக் கொண்டு செல்லப்பட்ட அனைத்துப் பொருட்களும் இரண்டாண்டுகளில் திருப்பிக்கொண்டு வரப்பட்டு விடும் என்றும் அனனியா கூறினார்.

நேபுகட்நேசரின் ஆட்சிக்கு யூதா மன்னர் யோயாக்கிம் சில ஆண்டுகள் விசுவாசமாக நடந்தார். சிலகாலம் சென்றதும் பின்னர் நெபுகட்நேசரின் ஆட்சிக்கு மாறாகக் கலகம் செய்யலானார். ஆனால் அவருடைய ஆட்சி நீடிக்கவில்லை. அவருக்குச் சடுதியான மரணம் ஏற்பட்டது. யோயாக்கிமின் தம்பியான யோயாச்சின் அரசராக்கப்பட்டார். இதே காலகட்டத்திலும் பாபிலோனியர்களால் யூதா நாடு சீரழிக்கப்பட்டது. ஆலயத்தில் எஞ்சியிருந்த பொக்கிஷங்களும் சூறையாடப்பட்டன.

ஆண்டவரிட்ட கட்டளைப்படி எரேமியா, மரத்தால் ஒரு நுகத்தைச் செய்து தன் கழுத்திலேயே மாட்டிக்கொண்டார். இறைவன் இஸ்ரயேல் மக்களுக்குக் கொடுக்கவிருந்த தண்டனையின் ஒரு பாகமாகவே தனது ஊழியனான பாபிலோனிய மன்னர் நெபுகட்நேசரை இஸ்ரயேல்- யூதா மக்களை அடிமை கொள்ளும்படி செய்திருந்தார். ஆகவே இறை விசுவாசிகளை எரேமியா நெபுகத்நேசருக்குக் கீழ்படிந்து நடக்கும்படி கேட்டுக்கொண்டார். நெபுகத்நேசரின் ஆதிக்கத்தைத் தானும் ஏற்பதனைக் குறிக்கும் ஒரு சின்னமாகவே ஒரு நுகத்தை எரேமியா தன் கழுத்தில் மாட்டியிருந்தார்.

அனனியா, தானே உண்மையான இறைதூதர் என்று பொய் கூறிக்கொண்டு, மன்னரையும் மக்களையும் தவறான பாதையில் வழி நடத்தலானான். எரேமியாவின் கழுத்திலிருந்த நுகத்தையும் முறித்தெறிந்தான். ஆண்டவரின் ஆணைப்படி தான் கழுத்தில் அணிந்திருந்த நுகத்தை அனனியா முறித்தெறிந்தமையால் எரேமியா பெரிதும் மனம் வருந்தினார். அதே மனக்கிளர்ச்சியிலேயே அனனியாவைச் சபித்தார்.

"நீ பொய் வாக்குரைத்துவிட்டு, அத்தனையும் ஆண்டவரால் அருளப்பட்டவை என்று துணிந்து கூறுகிறாய். இதற்காக இவ்வருட முடிவுக்குள் நீ இறந்துவிடுவாய்!" என்றார். இவ்வாறு எரேமியா கூறி இரண்டு மாதங்களுக்குள் அனனியா மரணமானான்.

(தொடர்ந்து வரும்)

**திருமறை 45 விடை** - இரத்த ஆறு போன்ற தோற்றத்தைக் கண்டு பயந்தனர்.

**பரிசு பெறுவோர்:**

1. முத்தையா இந்திராதேவி, இல-88, கிளெனி வீதி, கொழும்பு-02.
2. செல்வி மயூராஜினி, 897, கட்சன் வீதி, வட்டகச்சி, கிளிநொச்சி.
3. திச்சர்ட் எஸ்.செல்வநாயகம், மாகலை தோட்டம், சாமிமலை.
4. வே. சிவகுமார், குலோடன் தோட்டம், துடுகளை பிரிவு, நேபொட.
5. கு. சிந்துஜா, இல.55, பாண்டியர்வளவு, உக்கிளாங்குளம், வவுனியா.

**திருமறை 47 வினா:-** பாபிலோனிய மன்னரின் பெயர் என்ன?

பெப். 13க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை 47 – தினமுரசு வாரமலர், த.பெ.இல – 1772, கொழும்பு.**

## பயோடேட்டா

| | |
|---|---|
| பெயர் | : வடமேல் மாகாணசபை தேர்தல்! |
| தொழில் | : மாகாணசபை ஆட்சியை உருவாக்குதல்! |
| நண்பர்கள் | : வன்முறையாளர்கள் |
| எதிரிகள் | : பத்திரிகையாளர்கள் |
| சாதனை | : வரலாறு காணாத மோசடி! |
| சோதனை | : கண்காணிப்புக் குழுவின் அறிக்கை! |
| ரசித்தது | : பெட்டிகள் நிரம்பிய வேகத்தை! |
| இலட்சியம் | : நிறைவேறிவிட்டது. |

## வரலாறு காணாத சாதனை

ஆச்சரியம், ஆனால் நடந்துதான் இருக்கிறது.

ஆவிகளோடு பேசலாம் என்று விளம்பரங்கள் வெளியாவதுண்டு, பார்த்திருப்பீர்கள்!

ஆவிகளைக் கண்டதாக பலர் அலறியடித்து புலம்பியிருக்கிறார்கள், கேட்டிருப்பீர்கள்!

இறந்தவர்கள் எழுந்து வந்து, வாக்குச் சாவடியை தேடிக்கண்டுபிடித்து, வாக்குச் சீட்டில் புள்ளடியிட்டதை அறிந்திருக்கிறீர்களா?

நீங்கள் அறிந்திருக்காது விட்டால் அந்த அரிய சம்பவம் வடமேல் மாகாணத்தில் நடந்துள்ளது.

அதுவும் ஒன்று, இரண்டு பேரல்ல, வடமேல் மாகாணத்தில் சமீபகாலத்தில் இறந்தவர்களது தொகையில் முக்கால்வாசிப்பேர் மறுபடி எழுந்து வந்து வாக்களித்துள்ளனர்.

இது ஒரு வரலாறு காணாத சாதனை என்று அரசியல் விமர்சகர்கள் கூறியதாக வானொலிச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

இந்த வரலாறு காணாத சாதனை படைக்கப்பட்டதை அடுத்து இலங்கையின் பெயரும், புகழும் மேலும் பலபடிகள் உலக அரங்கில் உயர்ந்துள்ளன.

கல்லறைக்கு காவல் போட போதிய சீருடையினர் இல்லை என்று அரசு கூறியுள்ளது.

## பேய் விரட்டிகளை நிறுத்துக!

அடுத்து நடைபெறப்போகும் தேர்தல்களில், வாக்குச் சாவடிகளுக்கு மட்டுமன்றி, மயானங்களுக்கும் பாதுகாப்பளிக்க வேண்டும் என்று சுதந்திர தேர்தல் இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

தங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்த இறந்தவர்கள் காட்டும் ஆர்வம் வரவேற்கத்தக்கதே. ஆயினும் அவர்கள் நடமாட்டத்தால் பிணிகள் பரவும் வாய்ப்பு இருக்கிறது. எனவே மயானங்களை 24 மணி நேரமும் கண்காணிப்பதோடு, ஆவிகளை மொத்த குத்தகைக்கு எடுத்து வரும் அரசியல்வாதிகளது வீடுகளுக்கு முன்பாக பேய் விரட்டிகளை நிறுத்துமாறும் அந்த இயக்கம் ஆலோசனை கூறியுள்ளது.

## தமிழ்க் கட்சிகள் கண்டனம்

வடமேல் மாகாணசபைத் தேர்தலில் நடைபெற்றுள்ள முறைகேடுகளை டமில் கட்சிகள், ஜனநாயக உணர்ச்சி கொப்பளிக்க கண்டித்துள்ளன.

எங்கு ஜனநாயக மீறல் நடந்தாலும் எங்கள் கைகள் துருதுருக்கும் கண்டிப்பதற்கு!

எங்கு ஜனநாயக மீறல் நடந்தாலும் எங்கள் உதடுகள் படபடக்கும் கண்டிப்பதற்கு.

ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் என்பதால், வடமேல் மாகாணசபை தேர்தலை கண்டிக்காமல் தூங்க முடியவில்லை.

ஜனநாயகத்திற்கு விடப்பட்ட சவாலை நாம் வன்மையாகவும், உண்மையாகவும், உறுதியாகவும் மேலும் பல விதமாகவும் கண்டிக்கிறோம்.

புலிகளை மட்டும்தான் நாம் கண்டித்து, யார் யாரிடமோ நற்பெயர் பெறுவதாக யாராவது நினைத்தால் அது பெரும் பிழையான கணக்கு.

ஜனநாயகத்தில் ஒரு துரும்பு பட்டால்கூட கரும்பு கிடைத்தால்கூட நம்மால் சுவைக்க முடியாதளவு கசப்பு ஏற்படுகிறது.



ஆகவே அந்த ஜனநாயகத்தின் பெயரில் தேர்தல் வன்முறைகளை கண்டிக்கிறோம்!"

இவ்வாறு தமிழ்க் கட்சிகளது மனித நீதிக்கான குழு அறிக்கை ஒன்றை தயாரித்து விட்டு, மறுநிமிடமே கிழித்தெறிந்துவிட்டது.

## புதிர் பொன்ராசா



ஒரு அரசியல் கட்சியின் பொதுச் செயலாளர் அவர். துப்பாக்கியுடன் சாவடிகளுக்கு போனயூராம். அவரைக் கண்டதும் சீரான உடையோர் தங்கள் ஆயுதங்களைப் போட்டுவிட்டு ஓடிவிட்டனராம். அவரது பெயரில் தோல்விக்கு எதிர்ச்சொல் இருக்கிறது. அவரிடம் தற்போது எல்லாமும் இருக்கிறது. யார் அவர்? யார் அவர்? அதை நீங்கள்தான் அலசிப் பிடிக்கவேண்டும்.

## பேச்சாளர் பேரம்பலம்

மாண்புமிகு மகாஜனங்களே! அவர்கள் என்ன வங்கியைக் கொள்ளை அடித்தார்களா? வழிப்பறி செய்தார்களா? ஏன் கண்டிக்க வேண்டும் நாங்கள்? ஏதோ சில ஆயிரம் வாக்குகளைத் தானே கொள்ளையடித்தனர். சில ஆயிரம் வாக்குச்சீட்டுக்களைத்தானே வழிப்பறி செய்தனர். இதற்கெல்லாம் கண்டிக்க ஆரம்பித்தால், ஜனநாயகம் கைகொட்டிச் சிரிக்காதா? அதுதான் நாம் கண்டிக்கவில்லை.



காதிலை பூ கந்தசாமி

www.padippakam.com

Regd. as a News Paper at the G.P.O.(QD/21/NEWS/98)




அருள் ஜுவலர்ஸ்

ARUL JEWELLERS

பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.

கிளை:

105, காலி வீதி, வெள்ளவத்தை, கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு 11

436331


## தவளைப் பாய்ச்சல்

➜ மல்யுத்தம் மனிதர்களுக்கு மட்டுமான போட்டியல்ல. மிருகங்கள், பறவைகள், பூச்சிகள், ஊரும் பாம்புகள் போன்ற பிராணிகளும் மல்யுத்தத்திலீடுபட்டு தத்தமது திறமைகளைக் காட்டுகின்றன.

தென் அமெரிக்கக் காடுகளில் காணப்படும் நச்சுத் தவளைகள் இரண்டு இதோ மல்யுத்தத்திலீடுபட்டுள்ளன. ஏதாவதொன்று மரண மடைந்தால்தான் முடியும் என்று கருதப்பட்டது. ஆனால் ஒரு தவளை தனது பிடியைத் தளரவிட்டுத் தப்பி ஓடத்தொடங்கியதும் போட்டி முடிவடைந்தது.



↑ போட்டியில் வெற்றி பெற்ற தவளைதான் குறிப்பிட்ட அந்தப் பகுதிக்குரிய தவளை. தன்னுடைய ஆதிக்கப் பிரதேசத்துக்குள் அத்துமீறிப் பிர வேசித்த மற்றத் தவளைக்கு ஒரு பாடம் படிப்பிக்கவே இந்த மற்போர் தொடங்கியிருக்க வேண்டும்!

இந்த மல்யுத்தப் போரில் மனிதர்களுக்கான மற்போரில் கடைப்பிடிக்க வேண்டிய கட்டுப்பாடு எதுவும் கடைப்பிடிக்கப்படவில்லை.

கடித்தல், புராண்டுதல் போன்ற முறைகளும் வெகு தாராளமாக கடைப்பிடிக்கப்பட்டுள்ளன. பிரதேச வெறியாரைத்தான் விட்டது!




ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு 11

323657


## வீட்டுக்குஞ்சு

↘ இயற்கையான நீர்நிலைகளில் இயல்பாக ஓடித்திரியும் அழகான மீன்கள் இப்பொழுது வீடுகளில்-நன்நீர்த் தொட்டிகளில் வளர்க்கப்படுகின்றன.

இவை இயற்கைச் சூழலில் வளர்ந்தாலும் செயற்கைத் தொட்டிகளில் வளர்க்கப்பட்டாலும் வளர்ச்சி குறைந்த சிறு மீன்களாகவே காணப்படும்.

'கப்பி' என்ற ரகமீன்கள் 'இலட்சாதிபதிமீன்' என்றும் அழைக்கப்படுகிறது. தங்க வர்ணவரிகளைக் கொண்டிருப்பதனால்தான் இந்தப் பெயர் சூட்டப்பட்டுள்ளதோ தெரியவில்லை.

கப்பி இன மீன்களில் ஆண் மீன்கள் பெண் மீன்களைவிட வர்ணங்கள் கூடியனவாகவும் அழகாகவும் காணப்படும். ஆனால் நன் நீர்த்தொட்டிகளில் வளர்க்கப்படும் இவைகளில் மாற்றம் தென்பட்டுள்ளது. ஆண் மீன்களைப் போல் பெண் மீன்களும் அழகாக வளர ஆரம்பித்துள்ளன.

இயற்கைச் சூழலில் வளரும் 'கப்பி' மீன்களைப் போலல்லாமல், செயற்கைத் தொட்டிகளில் வளரும் மீன்களின் வாலில் காலத்துக்குக் காலம் பலவிதமான மாற்றங்கள் காணப்படுகின்றன.

பலதரப்பட்ட ஆராய்ச்சிகளின் மூலம் இத்தகைய மாற்றங்கள் ஏற்படுத்தப்படுகின்றன என்று தெரிகிறது.

வீடுகளில் மீன்களை வளர்ப்பதற்கு ஆலோசனை கூறுவதற்கும், மீன் தொட்டிகளை பராமரித்து தருவதற்கும் என்று தனியான நிறுவனங்கள் உள்ளன. நம் நாட்டிலும் இருக்கின்றன.

அழகான மீன்களுக்கு பலத்த மவுசு. விலையும் அதிகம். நூறுரூபா முதல் பல ஆயிரம் ரூபாய்கள்வரை பெறுமதியான மீன்களும் உள்ளன. ■





## அபாய கரணம்

➜ இரப்பரைப்போல் நீளமாக இழுபடவும் அதே போன்று முன்பிருந்தபடி சுருங்கவும் கூடிய இயற்கையின் கொடை வேறு எதுவுமில்லை. தங்கம் போன்ற உலோகத்தையும் மிக மிக நீளமாக நீட்டமுடியும். ஆனால் ரப்பர்போன்ற உடனடியாகத் தானாகவே சுருங்கும் தன்மை அதனிடமில்லை.

படத்தில் மிக உயரமான பாரந்தூக்கியிலிருந்து இரப்பர் கயிற்றைத் தன்காலில் பொருத்திக்கொண்டு ஒருவர் குதிக்கிறார்.

இந்த இரப்பர் கயிறு தனது வழமையான நீளத்திலும் பார்க்க 10 மடங்கு நீளமாவது விரிவடைந்து நீளும்.

பாரத்துக்கேற்றவாறு கயிறு விரிவடைந்து சுருங்கிறது. இத்தகைய சாதனை புரிய முன்வருபவருக்கு கடுமையான நெஞ்சுரம் தேவை. இல்லாவிட்டால் இருதயத்துடிப்பே அடங்கி விடும்.

இப்படி உயரத்திலிருந்து கரண மடித்து பாய்தலை 'பங்கீ' விளையாட்டு என்றழைக்கின்றனர். கரணம் தப்பினால் மரணம்.



## ஒரே ஒரு ஊரிலே

↑ சைபீரியாவின் கிழக்கே ஜப்பான் கடலை ஒட்டி உசுரிலாந்து என்ற மலைகள் சூழ்ந்த பிரேசமுண்டு. இயற்கை தன் ஆதிக்கத்தை இப்பிரதேசத்தில் பரிபூரணமாகச் செலுத்தி வருகிறது.

உலகின் வேறு எந்தப் பகுதிகளிலும் காணமுடியாத விலங்குகள், பறவை இனங்கள், ஊர்வன, தவழ்வன ஆகியவை நிரம்ப உள்ளன. இவ்வியற்கை வனப்பைப் பார்த்து மகிழப்போதுமான மனிதர்கள்தான் அங்கில்லை. மனிதர்கள் இங்கு அதிகமாக வசிப்பார்களானால் நிச்சயமாக இந்த இயற்கை எழிலை மாசுபடுத்தியிருப்பார்கள்.

மலைகள் சூழ்ந்த வட புலமானாலும் தட்ப வெப்ப நிலை ஓரளவு சமமாகவே காணப்படுகிறது. கோடை காலத்தில் கூட மழை பொழியும்; பனியும் பெய்யும்.

அழகிய விசித்திரமான-பல நாட்களானலும் வாடாத மலர்கள் இங்கு ஏராளம். இங்கு படத்தில் காணப்படுவதும் வாடாமலர்தான். பனி படர்ந்த நிலத்தில்- பனிப் படலத்தைப் பிரித்துக் கொண்டு கதிரவனின் கதிர்வீச்சை தன்மேல் படர விடுவதற்காக எழுந்து நிற்க முயலும் வாடா மலர் இது.



## பறக்கும் அணில்

பார்த்ததும் அணில் போல தெரிகிறதா? பறக்கும் அணில் என்றால் நம்பிவிடுவீர்கள். ஆனால் இது அணிலல்ல. கங்காரு.

↓ அவுஸ்திரேலியக் காடுகளில் சில விசித்திரமான பிராணிகள் காணப்படுகின்றன. கங்காரு என்ற பிராணி அவுஸ்திரேலியாவில் அதிகமாகக் காணப்பட்டாலும் இதே போன்ற பிராணிகள் நியூகினியாவிலும் அமெரிக்காவின் சில பகுதிகளிலும் குறைவாகக் காணப்படுகின்றன.

கங்காரு இனத்தில் 266 வகையானவை ஆய்வாளர்களால் கணக்கெடுக்கப்பட்டிருப்பினும், இன்று மிகக்குறைவானவையே எஞ்சியுள்ளன.

இந்த வகையின் குட்டிகள் பொதுவாகத் தாய்ப் பிராணியின் வயிற்றிலேயே ஒரு வருடம் வரை வாழ்கின்றன. தாய் வயிற்றிலிருந்து வெளியானதும், மிகமிகச் சிறியவையான குட்டிகள், தாயின் அடி வயிற்றிலுள்ள ரோமங்களைப் பிடித்துக் கொண்டு ஊர்ந்து தாய்ப் பிராணியின் வயிற்றுடன் தென்படும் பையினுள் சென்று விடுகின்றன. அப்பையிலேயே அச் சிறு குட்டி பால் குடிக்க முலைகள் உள்ளன.

பிறந்தவுடன் குட்டிகளுக்குக் கண் பார்வை கிடையாது; இருப்பினும் அது வளர வேண்டிய இடமான பையை இயல்பாகவே அடைந்துவிடுகிறது. கங்காரு இனத்தைச் சேர்ந்த 'சுகர் கிளைடர்' என்ற பிராணியையே படத்தில் காண்கிறீர்கள். இவை மரங்களிலேயே வாழ்கின்றன. ஒரு மரத்திலிருந்து மற்றோர் மரத்துக்குத் தாவித் திரிய வல்லது. இவற்றுக்கு முன்னங் கால்களுக்கு இடையே சிறகு போன்ற ஒரு சவ்வு வளர்ந்துள்ளது. மரத்துக்கு மரம் தாவும் போது இந்தச் சவ்வு விரிவடைவதனால் கீழே விழுந்து விடாமல் பாதுகாப்புக் கிடைக்கிறது. ■

தருவது
ரி.தாசன்

## 1 வது பிறந்தநாள் வாழ்த்து 03.02.1999

**வேல்வேந்தன் கதிர்காமநாதன்**

இணுவில் தாவடி கதிர்காமநாதன்-இரதி தம்பதியினரின் நவச் செல்வம் வேல்வேந்தன் தனது முதலாவது பிறந்தநாளை கனடாவில் (மிசிஸ்சாகா) தனது இல்லத்தில் ஆனந்தமாக கொண்டாடினார்.

இவர் அன்பு அம்மா, அப்பா, தாத்தா Dr. இராமநாதன், சித்தப்பா, சின்னம்மா, பெரியம்மாமார், பெரியப்பாமார், தாய்மாமன்மார், மாமிமார், அண்ணாமார், அக்காமார், அத்தான்மார், மச்சான்மார், மச்சாள்மார், மருமக்கள், மொன்றியல் விஜயன் மாமா குடும்பம், மோகன்மாமா குடும்பம் மற்றும் உறவினர்கள், நண்பர்கள் அனைவரினதும் ஆசியுடனும் சகல செளபாக்கியம் பெற்று பல்லாண்டு வாழ திருச்சிராப்பள்ளியான் சமேத திருச்செந்தூரான் திருவருளை பெற பிரார்த்திக்கிறார்கள்.

தகவல்: இராச மாமா (ஆ. சண்முகராசா) கொழும்பு.





படிப்பகம்